விலை: 30
பக்கங்கள்: 32

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 304 புரட்டாதி 10ஆம் நாள் புதன்கிழமை 26 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## சுற்றுலா நாள் தேசிய நிகழ்வை இன்று நடத்துவதில் விடாப்பிடி

### திலீபனின் நினைவேந்தல் முடிந்ததும் திட்டமிட்டபடி நிகழ்வு ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், செப். 26
தியாகி திலீபனின் நினைவேந்தல் நிறைவுபெற்ற பின்னர் சுற்றுலா நாள் நிகழ்வு திட்டமிட்டபடி இடம்பெறும் என்று வடக்கு மாகாண சுற்றுலா அதிகார சபையின் தலைவர் ரி.தேவராஜா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசிய சுற்றாடல் தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவது வடக்கு மாகாண சுற்றுலா அதிகார சபைக்கு கிடைத்த 27



## தியாகி திலீபனின் நினைவேந்தல் இன்று

### 10.48க்கு நல்லூரில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், செப்.26
தியாகதீபம் தியாகி திலீபனின் 31ஆவது ஆண்டு நினைவேந்தலின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று காலை 10.48 மணிக்கு ஆரம்பமாகும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் ஆர்னோல்ட் அறிவித்துள்ளார். அதில் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத் 27

# திலீபனை நினைவேந்த அனுமதித்தது நீதிமன்று

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 26
தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடைவிதிக்க வேண்டும் என்றும், நல்லூரில் அமைந்துள்ள தூபியை அகற்றவேண்டும் என்று கோரியும் பொலிஸார் தாக்கல் செய்திருந்த மனுவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நிராகரித்தது. தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த அனுமதித்தது.
29

## கே.கே.எஸ். கடலில் 28 கிலோ கஞ்சா

யாழ்ப்பாணம், செப்.26
காங்கேசன்துறைக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 28 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. கஞ்சாவைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
காங்கேசன் 27

## மகிந்த மற்றும் ஷிரந்தியை கொலை செய்யவும் திட்டம்

### மைத்திரி, கோத்தா கொலைச் சதி தொடர்பில் கைதானவர் வாக்குமூலம்

கொழும்பு, செப்.26
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரைக் கொல்வதற்குத் திட்டமிடும் வகையில் பிரதிப் பொலிஸ் மா 26

## மைத்திரி கொலை முயற்சி: நாமலைச் சந்தித்த தோமஸ்

### சி.ஐ.டி விசாரணைகளில் திடுக்கிடும் தகவல்கள்

கொழும்பு, செப்.26
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரைக் கொலை செய்யத் திட்டமிடப்பட்டது என்று கூறப்படும் விவகாரத்தில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய நாட்டவரான மேசரிஸ்தோமஸ் 25

## யாழ்ப்பாணம் வருகின்றது மாம்பழ உற்பத்தி வலயம்!

### கறுத்தக்கொழும்பானுக்கு சவாலாகுமா ரிஜேசி?

கொழும்பு, செப். 26
இலங்கையின் முதன் முறையாக மாம்பழ உற்பத்தி வலயங்கள் யாழ்ப்பாணம் மற்றும் தம்புள்ளயில் உருவாக்கப்படவுள்ளன. 'நாமே வளர்த்து நாமே சாப்பிவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த விவசாய அபிவிருத்தித் 29

## அரசியல் கைதிகள் விவகாரம்: சட்டமா அதிபருடன் இன்று பேச்சு

### ரணில், கூட்டமைப்பினர் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம், செப். 26
தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் சட்டமா அதிபர், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியோருக்கிடையிலான மிக முக்கிய சந்திப்பு இன்று மாலை 3 மணிக்கு அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.
அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் குறுகிய கால மறுவாழ்வு வழங்கி விடுவிக்க வேண்டும் என்று கோரி கடந்த 14ஆம் திகதி முதல் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். 10 பேர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களில் இருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள். அநுராதபுரம் பொது மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஏனையோர் அநுராதபுரம் சிறைச்சாலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.
அவர்களுக்கு காலை 27

## குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்படாத அரசியல் கைதிகளை விடுவியுங்கள்

### கூட்டு எதிரணி வலியுறுத்துகின்றது

கொழும்பு, செப்.26
குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத மற்றும் வழக்குகள் விசாரணைக்குட்படுத்தப்படாத தமிழ் அரசியல்க் கைதிகள் விடயத்தில் அரசு தலையிட வேண்டும். அவர்களை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கூட்டு எதிர்கட்சி வலியுறுத்தியுள்ளது.
கொழும்பு பொரளையில் நேற்று லங்கா சமசமாஜக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் தலைவரும், கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.
29

see more news in
newuthayan.com

## மாகாண சபை வாய்ப்பால் மீளப் பெறப்பட்டது வழக்கு

யாழ்ப்பாணம், செப். 26
எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படும் என்ற உறுதி மொழிக்கு அமைவாக தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கை வலி. தெற்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ் மீளப் பெற்றுள்ளார்.
வலி.தெற்குப் பிரதேச சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து தி.பிரகாஷை நீக்குவதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நடவடிக்கை எடுத்திருந்தது. கட்சியின் நடவடிக்கைக்கு எதிராக பிரகாஷ் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்கின் பிரதிவாதிகளாக தமிழ் அரசுக் 25

### வடமராட்சி கிழக்கில்

## வாடியமைத்த 8 நிறுவனங்களை வெளியேறுமாறு மன்று உத்தரவு

கிளிநொச்சி, செப். 26
வடமராட்சி கிழக்கில் அனுமதியின்றி வாடி அமைத்து கடலட்டைத் தொழிலில் ஈடுபடும் 8 நிறுவனங்களும் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டது.
வடமராட்சி கிழக்கில் 8 நிறுவனங்கள் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுவதற்கு கொழும்பு அரசின் அனுமதியைப் பெற்றிருந்தன. அரச காணியில் பிரதேச செயலரின் அனுமதியின்றி அந்த நிறுவனங்கள் வாடி அமைத்திருந்தன. வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு உள்ளூர் மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். போராட்டங்களையும் நடத்தியிருந்தனர்.
26

Mobitel Master unlimited
நாடு முழுவதும் Unlimited Calls
மாதாந்தம் ரூபா.1,500/-
1717 ஐ அழையுங்கள்
TRC/M/Promo/18/02
Sri Lanka Telecom Mobitel

### போர்க்குற்றச்சாட்டுகளிலிருந்து இராணுவத்தைப் பாதுகாக்கத் தவறினால்

# 20 இலட்சம் இராணுவச் சிப்பாய்களுடன் நாடுதழுவிய போராட்டத்தில் குதிப்போம்

### தாய் நாட்டுக்கான இராணுவச் சிப்பாய்கள் அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, செப். 26
போர்க்குற்றச்சாட்டுகளிலிருந்து இராணுவத்தினரைப் பாதுகாக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தவறும் பட்சத்தில் 20 இலட்சம் இராணுவச் சிப்பாய்களுடன் நாடுதழுவிய போராட்டத்தில் குதிப்போமென தாய் நாட்டுக்கான இராணுவச் சிப்பாய்கள் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு, புஞ்சி பொரளை வஜிராஷ்ரம பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அந்த அமைப்பின் ஏற்பாட்டாளரும், ஓய்வுப் பெற்ற மேஜருமான அஜித் பிரசன்ன, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "அமெரிக்க அரச தலைவர் டிரம்ப் அந்த நாட்டு இராணுவதினரைப் போர்க்குற்றச்சாட்டுக்களிலிருந்து பாதுகாத்துவருவது போன்று இலங்கை அரசும் அதன் இராணுவத்தை பாதுகாக்க வேண்டும். வெளிவிவகார அமைச்சர் திலக் மாரபனவை விலக்கிவிட்டு, பிரத்தானிய பிரபுக்கள் சபையின் உறுப்பினர் நேஸ்டி பிரபுக்கு அந்தப் பதவியை வழங்க வேண்டும். வெளிவிவகார அமைச்சர் திலக் மாரபன, நிதி அமைச்சர் மங்கள சமரவீரவைப் போன்று கிடையாது. மிகுந்து புத்திசாலி த்தனமானவர். ஆனால், மனித உரிமைகள் பேரவையில் அவர் ஒருபோதும் வாய் திறந்தது கிடையாது. நான்கு மணித்தியாலங்கள் அரச தலைவர் செயலகத்திலிருந்து எடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்காத தூதுவர்கள் மற்றும் தூதரகத்தில் பணியாற்றிய அதிகாரிகள் நாட்டுக்கு திருப்பியழைத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்த போர்க் குற்றங்களுக்கு உரிய பதிலளிக்காத வெளிவிவகார அமைச்சரையும், அமைச்சின் அதிகாரிகளையும் உடனடியாக நீக்க வேண்டும்" என்றார்.

(21,10)

## சட்டம் இல்லாத நாட்டில் சுதந்திரம் இருக்காதாம்

### கோத்தபாய உபதேசம்

கொழும்பு, செப். 26
மகிந்த போன்று வெளிப்படையாகவும் நேர்மையாகவும் தீர்மானங்களை எடுக்கக்கூடிய அரசை உருவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனத் தெரிவித்துள்ள முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச சட்டம் இல்லாத நாட்டில் சுதந்திரம் இருக்காது என்றும் சுட்டிக்காட்டினார்.
பொலன்னறுவையில் இடம்பெற்ற எலிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது
பயங்கரவாதம், அடிப்படைவாதம் மற்றும் வன்முறைகள் அற்ற நாட்டில் சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூன்று இன மக்களும் அச்சமின்றி வாழக்கூடிய ஒரு கொள்கை மகிந்தவின் 9 ஆண்டுகால ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்டது.
மகிந்த சிந்தனை ஊடாக அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி குறித்து அனைவரும் கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.
மகிந்த காலத்தில் பெரியதொரு போருக்கு முகம்கொடுத்தும் நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்படாது முன்னோக்கி கொண்டு சென்றோம். ஜனவரி 8 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் நிலையான கொள்கையோ பொருளாதார இலக்குகளோ அற்ற நிலையில் நாடு படுபாதாளத்தில் விழுந்துள்ளது. முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் கைவிடப்பட்டன. நான்கு இலட்சம் பேருக்குத் தொழில் வாய்ப்புக்கள் இல்லாது போயுள்ளன.
நாட்டை மீட்டெடுத்து மகிந்த தலைமையில் உருவாகக் கூடிய அரசின் ஊடாக வெற்றி இலக்கை அடைவதற்கான கொள்கைகளைத் தயாரித்து வருகின்றோம். தொழில்சார் நிபுணர்கள், புத்திஜீவிகள் உட்படப் பல்துறைசார் நிபுணர்களிடமிருந்தும் கருத்துக்களை உள்வாங்கித் திட்டமிடுகின்றோம்.
தற்போது நாட்டில் பல்வேறு வகையிலும் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. போதைப் பொருள் கடத்தல், பாதாள குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.
வடக்கில் இராணுவம் போரிடும்போது தெற்கில் நகரங்களைப் பாதுகாப்பதில் பொலிஸார் பங்களிப்புக்களைச் செய்துள்ளனர். ஆனால் இன்று பல்வேறு வகையிலும் அவர்கள் பழிவாங்கப்படுகின்றனர். இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் சிறைவைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆட்சிக் காலத்தில் பொலிஸ்மா அதிபர்கள் நேர்மையாகச் செயற்பட்டனர்.
கட்டுநாயக்காவில் ஏற்பட்ட சம்பவத்தை அடுத்து அப்போதைய பொலிஸ்மா அதிபர் 2 ஆண்டுகளுக்கு முன்பதாகவே சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால் இன்று பொலிஸ் மா அதிபரின் செயற்பாடுகள் கோமாளித்தனமாக உள்ளதை ஊடகங்களில் காண முடிகிறது.
புதிய நீதிமன்றத்தை நிறுவி அதில் முதலாவது வழக்காக டீ.ஏ.ராஜபக்ச நினைவுத் தூபி அமைத்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நினைவுத் தூபி அமைத்ததால் தேசிய பொருளாதாரத்தில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டது என்று காண்பிக்க அரசு முயற்சிக்கின்றது.
2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இவர்கள் கொண்டு வந்த அமைதி என்ன?. பெரிய போரை நிறுத்தி மகிந்த ராஜபக்ச நாட்டில் உருவாக்கிய மக்களாட்சியையும், சமாதானத்தையும் யாரும் மறந்துவிட முடியாது. நாட்டைக் கையளிக்கும் போது யாருக்கும் அச்சுறுத்தல் இருந்ததில்லை.
சட்டம் இல்லாத நாட்டில் சுதந்திரம் இருக்காது. தேசிய பாதுகாப்புக்காக நிறுவப்பட்டிருந்த புலனாய்வுத் திட்டங்கள், பாதுகாப்பு கட்டமைப்புக்கள் அனைத்தும் சீரழிந்துவிட்டன. புலனாய்வு பிரிவுகளில் எச்சரிக்கைகள் தொடர்பாக அரசு கவனத்தில் கொள்வதில்லை.
வெளிப்படையாக தீர்மானங்களை எடுக்கக் கூடிய தலைவரால் மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. மகிந்த போன்று வெளிப்படையாக தீர்மா னங்கள் எடுக்கக் கூடிய தலைவருடன் ஆட்சி அமைக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும். என்றார்.

(ற-5)

## பொது வாக்கெடுப்பை ஏற்பதா? இல்லையா? என பெரும்பான்மையினரே முடிவெடுப்பார்களாம்

### வாசுதேவ எம்.பி கூறுகிறர்

கொழும்பு, செப். 26
பொது வாக்கெடுப்பொன்றை வடக்கின் தலைவர்கள் கோரினாலும் அதனை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பதை நாங்கள்தான் தீர்மானிப்போம் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
கொழும்பு பொரள்ளை எம்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, "எமது நாட்டின் இறையாண்மையில் ஏனைய நாடுகளின் தலையீட்டை அனுமதிக்க முடியாது. அவ்வாறான செயற்பாடுகளுக்கு எப்போதும் நாங்கள் எதிராகவே செயற்படுவோம். ஒரு நாட்டின் சுயாதீனத்தில் தலையிடுவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை. எமது நாட்டின் சுயாதீனம் என்பது தீர்மானிக்கும் சக்தியாக நாம் இருப்பதே. சில சில உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கே ஐ.நா. சபையுள்ளது. பொதுவாக்கெடுப்புத் தொடர்பில் வடக்கின் தலைவர்களுக்குக் கோரிக்கை விடுக்க முடியும். ஆனால், ஏற்றுக்கொள்வதா இல்லையா என்று தீர்மானிக்க வேண்டியது நாங்கள்தான்.
பொதுவாக்கெடுப்பொன்றை ஏற்றுக்கொள்ள முடியாது. அதிகாரப் பரவலாக்கல் என்பது 13ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாகச் செய்யப்பட வேண்டியது. 13ஆவது திருத்தச்சட்டத்தில் அதிகாரத்தைப் பரவலாக்கும் முறைமையொன்றை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றார்.
தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டு வருகின்றமையால், ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்துருடன் பொது வாக்கெடுப்பொன்றை நடத்தப்பட வேண்டுமென வடக்கு மாகாண சபையில் அண்மையில் தீர்மா னமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானம் தொடர்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(21,10)

## அரசின் பிளவு காரணமாகவே குற்றங்கள் அதிகரிக்கின்றன!

### மகிந்த ராஜபக்ச கண்டுபிடிப்பு

கொழும்பு, செப். 26
அரசு பிளவடைந்துள்ளது. அதனால்தான் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நாளுக்கு நாள் குற்றங்கள் அதிகரித்துச் செல்கின்றன. வடக்கில் வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. ஆனால் தெற்கில் அவ்வாறு இல்லை.
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
எம்பிலிப்பிட்டியவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது;
அரசு இரண்டாகப் பிளவடைந்துள்ளமையால் நாட்டில் அரங்கேறுகின்ற முக்கிய பிரச்சினை களை அரசால் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது. ஒழுக்கமற்ற குழப்பமான சமுதாயத்தையே அரசால் தோற்றுவிக்க முடிந்துள்ளது.
ஒவ்வொரு நாளும் குற்றச்செயல்கள் பதிவாகின்றன. போதைப்பொருள் சுழற்சி அதிகரித்துள்ளது. கொலை, கொள்ளைகள் ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்றன. ஒழுங்கு இல்லாத குழப்பமான சமூகத்திலேயே தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றார்.

(ற-5)

## கர்தினாலின் கருத்தை விமர்சிக்கும் மங்கள

கொழும்பு, செப். 26
மனித உரிமைகள் சம்பந்தமாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்டுள்ள கருத்தை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர விமர்சித்து ள்ளார்.
இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ கீச்சகப் பக்கத்தில், பிரபல்யம் அடைவதற்காக கருத்து தெரிவிக்கும் சந்தர்ப்பங்களில் தவறிழைத்து விடுகின்றனர் என்று அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.
பல தசாப்தங்களாக மதப் போக்கு கொண்ட இலங்கை போன்ற நாடுகளுக்கு மனித உரிமைகள் சம்பந்தமாக பாடம் எடுப்பதற்கு மேற்கத்தியவாதிகள் முயற்சிக்கின்றனர் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியுள்ளார். புனித மத்தேயு ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் இடம்பெற்ற மத நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். தற்காலத்தில் மேற்கத்திய சமூகத்தின் புதிய மதமாக மனித உரிமைகள் பாடம் மாறியுள்ளது என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியுள்ளார்.
அதேவேளை மனித உரிமைகளை எதிர்க்கும் விதமாக வெளியாகியுள்ள செய்தி உண்மையாக இருந்தால் அது வெட்கப்படக் கூடிய விடயம் என்று காணாமல் ஆக்கப் பட்டோர் பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸும் தனது முகநூல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(ற-5)

## வெடிக்காத நிலையில் எறிகணை நேற்று மீட்பு

சாவகச்சேரி, செப். 26
வெடிக்காத நிலையில் இருந்த எறிகணை ஒன்று நேற்று சாவகச்சேரியில் மீட்கப்பட்டது
மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு அருகில் உள்ள காணியிலேயே குறித்த எறிகணை காணப்பட்டுள்ளது. காணியில் மேய்ச்சலுக்கு மாடு கட்டச் சென்றவர் புதையுண்ட நிலையில் இருந்த எறிகணையைக் கண்டார். அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அங்கு விரைந்த பொலிஸார் அவ்விடத்தில் பாதுகாப்பினை ஏற்படுத்திவிட்டு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிவான் யாழ்.பொலிஸ் நிலைய சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் எறிகணையை அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்யுமாறு உத்தரவிட்டார். அதன் படி அந்த எறிகணை மீட்கப்பட்டது.

(21,9)

# அரசியல் கைதிகளின் விடுதலையே வவுனியா மக்களின் இன்றைய பிரச்சினை

## கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

வவுனியா,செப் .26

வவுனியாவில் மக்களுடைய தற்போதையபெரும் பிரச்சினையாக இருப்பது அரசியல் கைதிகளின் பிரச்சினையே. கடந்த வாரங்களில் கவனவீர்ப்பு போராட்டம் உட்பட பல போராட்டங்கள் இங்கு நடைபெறுவதை நாங்கள் ஊடகங்கள் வாயிலாக பார்க்க கூடியதாக இருக்கிறது.





என்னை பொறுத்த அளவில் இதனை சட்ட ரீதியாக அணுகினால் மாத்திரமே சரியான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என கருதுகின்றேன். இதற்குரிய முன்னெடுப்பு களை யார் செய்தாலும் அதற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி தனது முழுமையான ஆதரவை பெற்றுக் கொடுக்கும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதி தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

வவுனியா விபுலானந்தா மகா வித்தியாலயத்தில் கல்வி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட கனிஸ்ட தொழில்நுட்ப ஆய்வு கூடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஸ்ணன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை கல்வி விளையாட்டுத்துறை அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், வட மாகாண சபை உறுப்பினர்களானலிங்க நாதன், இந்திரராஜா, வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன், வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுப்பையா அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். பாடசாலையின் அதிபர் பி. சிவநாதன் தலைமையில் நிகழ்வ்வகள் இடம்பெற்றன.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் போர் நிறைவடைந்த பின்பு பல பிரச்சினைகள் இருந்தாலும், முக்கிய பிரச்சினையாக இருப்பது இந்த அரசியல் கைதிகளின் பிரச்சினை உண்மையிலேயே இந்த பிரச்சினை வடகிழக்குக்கு மாத்திரம் உரித்தானது அல்ல. இதில் மலையகத்தை சார்ந்த எங்களுடைய மக்களும் இருக்கின்றார்கள். எனவே இதற்காகப் போராட்டம் செய்வதோ அல்லது வேறு வகையில் போராடுவதோ அவை அனைத்தும் உணர்வு பூர்வமான ஒரு விடயமாகவே நான் அதனை கருதுகின்றேன். அதன் மூலமாக அரசியல் கைதிகளுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க முடியுமா? என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இவர்களுக்கு உண்மையிலேயே விடுதலை கிடைக்க வேண்டுமானால் அவர்களுடைய பிரச்சினையை சட்ட ரீதியாக அணுக வேண்டும்.

அண்மையில் இந்த கருத்தை நீதி அமைச்சர் தலதா அத்துகோரளையும் தெரிவித்திருந்தார். அப்படியானால் நாடாளுமன்றத்தில் இருக்கின்ற அனைத்து தமிழ் உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து அரசதலைவர், தலைமை அமைச்சர், நீதி அமைச்சர் ஆகியோருக்கு அழுத்தத்தை கொடுக்க வேண்டும். இது தொடர்பாக சட்டமா அதிபருடன் நாம் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும்.

அப்படி செய்வோமானால் நிச்சயமாக இதற்கான ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும் என நான் நினைக்கின்றேன். இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இருக்கின்ற அனைத்துத் தமிழ் உறுப்பினர்களும் ஒன்றுபடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

அதற்கான முன்னெடுப்புகளை யார் எடுத்தாலும் அவர்களுக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி தனது முழுமையான ஆதரவை வழங்க தயாராக இருக்கின்றது.

கடந்த வாரம் நாம் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக நடத்திய கவனவீர்ப்பு போராட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கலந்து கொண்டு தனது ஆதரவை வழங்கியிருந்தார்.

எனவே நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட்டால் பல வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அதே நேரத்தில் உங்களுடைய உணர்ச்சிபூர்வமான போராட்டத்தையும் நான் குறைத்து மதிப்பிடவில்லை. அத்தோடு சட்ட ரீதியாகவும் இதனை அணுகினால் இன்னும் விரைவாக தீர்வு காண முடியும் என்பதே எனது கருத்தாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (110)





## சிறப்புச் சத்திர சிகிச்சை நிலையம் திறப்பு

மன்னார் ,செப் .26

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சுமார் 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அதி நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்ட சிறப்புச் சத்திர சிகிச்சை நிலையம் நேற்றுக் காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ஜீ. குணசிலன் வைபவ ரீதியாக திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட "மை டென்டேல் டீம்' அமைப்பினூடாக இலங்கையைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவை வதிவிடமாகக் கொண்ட எம். ரூத்திரன் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட சுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதியான அதி நவீன வசதிகளுடன் கூடிய 'நடமாடும் பற்சிகிச்சை சேவை வாகனம் ' காலை 11.30 மணியளவில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து எம். ரூத்திரனால் வடமாகாண சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து குறித்த 'நடமாடும் பற்சிகிச்சை சேவை வாகனம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கில் றோயிடம் கையளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து இடம் பெற்ற நிகழ்வில் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகக் கொண்ட எம். ரூத்திரன் உற்பட விருந்தினர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். குறித்த நிகழ்வில் மன்னார் பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கில்றோய், மன்னார் மருத்துவமனையின் உதவிப் பணிப்பாளர்மருத்துவர் ஒஸ்மன் டெனி, மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் , மருத்துவமனை மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (56)

## காணாமல் போனோர் பரிந்துரைகளை அரசு நிறைவேற்றும் என நம்புகின்றோம்

### காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு ,செப் .26

காணாமல் போனோர் தொடர்பில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பரிந்துரைகள் அடங்கிய இடைக்கால அறிக்கையினை அரசதலைவரிடம் சமர்ப்பித்தோம். அந்தப்பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பில் தற்போது நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவினால் எமது பரிந்துரைகள் விரைவாக நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

காணாமல்போனோர் அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பில் விஜேதாச ராஜபக்ச தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவின் செயற்பாடுகள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாலிய பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது :

காணாமல் போனோர் தொடர்பில் அரசினால் நிறைவேற்றப்பட வேண்டிய பரிந்துரைகள் அடங்கிய இடைக்கால அறிக்கையினை காணாமல் போனோர் அலுவலகத்தின் சார்பாக அரசதலைவரிடம் சமர்ப்பித்திருந்தோம். தற்போது அப்பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பில் விஜேதாச ராஜபக்ச தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவினால் எமது பரிந்துரைகள் விரைந்து செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கின்றோம். எனினும் அவர்களின் சுயாதீன நடவடிக்கைகளில் காணாமல்போனோர் அலுவலகம் தலையிடாது என்றார். அத்தோடு காணாமல் போனோர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த மக்கள் சந்திப்பு 7ஆவது தடவையாகவும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி கொழும்பிலுள்ள லகிஸ்மன் கதிர்காமர் சர்வதேசக் கற்கைகளுக்கான நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது மேல் மாகாணத்தில் காணாமல் போனோர் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்படும் எனவும், இந்த விடயம் தொடர்பில் மக்களுக்குத் தெரியப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க போர்க்காலப் பகுதியில் சரணடைந்தவர்கள் படையினரால் கொல்லப்பட்டனர். எனும் அடிப்படையில் வெளியிட்டிருந்த கருத்துத் தொடர்பில் வினவியபோது, இந்த விடயம் தொடர்பில் தற்போது கருத்து வெளியிட முடியாது. எனினும் வெகுவிரைவில் எமது நிலைப்பாட்டினை அறிவிப்போம் என்றார். (61)

## புலனாய்வுத்துறையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில்

### திலீபனின் நினைவு நிகழ்வு



அம்பாறை,செப் .26

புலனாய்வுத்துறையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் திருக்கோவி லில் தியாகி தீலிபனின் 31வது நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில் பிரதேசத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் நினைவு தினம் நினைவு கூறப்பட்டது.

இந்த நினைவேந்தல் , அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் திருக்கோவில் 3 இல் அமைந்துள்ள அலுவலகத்தில் நினைவு கூறப்பட்டது. தியாகி திலீபனின் 31 ஆவது நினைவையொட்டி திருக்கோவில் 3 இல் அமைந்துள்ள, அத்தியடிப்பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல் பூசை வழிபாடுகள் இடம்பெற்று ,ஆலயத்தில் இருந்து திலீபனின் உருவப்படத்தினை தாங்கியவாறு அருகாமையில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க அலுவலகம் வரை சென்று அங்கு திலீபனின் உருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வை எற்பாடு செய்த போது புலனாய்வுத் துறையினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஏற்பாடு செய்ததாகவும், திருக்கோவில் சகலகலை அம்மன் ஆலயத்தில் நினைவேந்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் ,அங்கு புலனாய்வுத் துறையினர் சென்று பூசகரை பூசை செய்ய வேண்டாம் என்றும் அவ்வாறு செய்தால் ஏற்பாட்டாளர் சங்கத்தலைவியையும், பூசகரை யும் கைது செய்வதாகவும் அச்சுறுத்தியதாக சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி ஊடகங்களுக்கு தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் க.யோக ராசா, வரணி மத்திய கல்லூரியில் ஆறாம் தரத்தில் கல்வி கற்கும் கண்ணதாசன் வர்ணிகா என்ற மாணவிக்கு துவிச்சக்கரவண்டியொன்றை அண்மையில் அன்பளிப்புச் செய்தார். மாணவியின் வறுமை நிலையையும் அவரின் கற்றச்செயற்பாடுகளையும் கருத்தில்கொண்டே இந்தத் துவிச்சக்கரவண்டி அன்பளிப்புச் செய்யப்பட்டது. (ம-159)

### தூசு தட்டப்படுகின்றன பழைய திட்டங்கள்

# சாவகச்சேரி வீதிகள் காப்பெற் ஆகின்றன

**யாழ்ப்பாணம், செப் 25**

**தமது பிரதேசத்தில் உள்ள வீதிகளை காப்பெற் வீதியாக சீரமைக்கும் திட்டம் ஒன்பது வருடங்களின் பின் மீண்டும் கைகூடியுள்ளது என்று சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார். போரின் பின்னர் மேற்கொண்ட பரிசீலனைகளே தற்போது செயல் வடிவம் பெறுகின்றன.**


இது தொடர்பில் அவர் உதயனுக்கு நேற்று மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டுப் போர் நிறைவுக்கு வந்த தன் பின்னர் வீதிகள் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. நாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் வீதிகளை சீரமைக்கும் திட்டம் அதாவது காப்பெற் வீதியாக மாற்றும் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியூடாக உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்போது சில வீதிகள் காப்பெற் வீதியாக மாற்றப்பட வேண்டும் என்று அடையாளம் காணப்பட்டன. ஏனைய எட்டு மாகாணங்களும் உரிய தரப்பினருடன் கதைத்து வேலைகளை நிறைவுக்கு கொண்டு வந்துள்ளன. ஆனால் வடக்கு மாகாணத்தில் இந்த வேலைகள் நிறைவு பெறவில்லை. சாதாரணமாக வீதியை தார் வீதியாக மாற்றுவது சுலபமான விடயம். ஆனால் காப்பற் வீதியாக மாற்றுவது என்பது கடின மான வேலை. நிதியும் அதிகம் தேவை. எனவே நீண்ட காலத்தின் பின்னர் அதாவது சுமார் 9 ஆண்டுகளுக்குப் பின்னர் காப்பெற் வீதிகளை அமைக்கும் வாய்ப்பு சாவகச்சேரி பிரதேச சபைக்குத் தற்போது கிடைத்துள்ளது. இதன்படி 20 வீதிகள் 51.82 மில்லியன் ரூபா செலவில் மாற்றப்படவுள்ளன. அடுத்த வருட இறுதிக்குள் பணிகள் நிறைவடையும்.



கோப்புப் படம்

தாண்டிக்குளம் வீதி, நுணாவில் வீதி, டச்சு வீதி, மீசாலை வரணி வீதி, வரணி குடத்தனை வீதி, மட்டுவில் அம்மன் கோவில் வீதி, கச்சாய் கேற்பெலி வீதி, தேவாலய வீதி, அரசடி வீதி, அன்னமாள் கோவில் வீதி, கைதடி மூர்த்தியாவத்தை வீதி, சுப்பிரமணியம் இணைப்பு வீதி, பிச்சம்பள்ளம் வெள்ள வாய்க்கால் வீதி, கொடிகாமம் மடத்தடி வீதி, மடத்தடி முதலாவது ஒழுங்கை, பிள்ளையார் கோவில் வீதி, மணன்குண பிள்ளையார் வீதி, மீசாலை வயற்கரை வீதி, தாமோதரம்பிள்ளை முதலாவது வீதி, குடமியன் பாடசாலை வீதி, மந்துவில் சிறி பாரதி வீதி, செல்லையா வீதி, கோயில் மனை வீதி ஆகியனவே காப்பெற் வீதிகளாக சீரமைக்கப்படவுள்ளன - என்றார். (ம-7)



## சாவகச்சேரிப் பிரதேச சபைப் பகுதியில் பொருத்தப்படுகின்றன புதிய மின்குமிழ்கள்

யாழ்ப்பாணம், செப். 26

சாகவச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவோரத்தில் உள்ள பழுதடைந்த மின்குமிழ்களை அகற்றி புதிதாக மின்குமிழ்களைப் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

சபை நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபா செலவில் மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. பொதுமக்களால் சபைக்கு வழங்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த மின்குமிழ்கள் பெருத்தப்பட்டு வருகின்றன. இதன்படி அடுத்தசிலதினாங்களுக்குள் சுமார் 300 மின்குமிழ்கள் பொருத்தப்படவுள்ளன என்று தெரியவருகிறது. (ம7.159)

## கொழும்புத்துறை மேற்குக்கு கூடுதலான தண்ணீர் தேவை

### இவ்வாறு விடுக்கப்பட்டது கோரிக்கை

யாழ்ப்பாணம். செப். 26

கொழும்புத்துறை மேற்குப் பிரதேசத்துக்குக் கூடுதலான குடிதண்ணீரைப் பெற்றுத்தருமாறு யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமான நன்னீர் கிணறு உவர்நீராக திடீரென மாறியதால் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மூவாயிரம் வரையிலான குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெறமுடியாது சிரப்பட்டு வருகின்றன. இது தொடர்பான ஆலயத்தின் சிறப்புப் பரிபாலன சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தலைவர் ஜெ.முத்துக்குமாரசுவாமி தலைமையில் கூடியது. கடந்த 150 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த இந்த நன்னீர் கிணறு திடீரென உவர்நீராக மாறியதால் குடிதண்ணீரை பெறுதவதற்குப் பிரதேச மக்கள் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மாநகராட்சி மன்றத்தினால் ஆலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி ஊடாக பிரதேச மக்களுக்கு குடிதண்ணீரை பெற்று விநியோகிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படி வேண்டும். குறிப்பாக தினமும் இரண்டு தடவைகளாவது இந்தத் தாங்கிக்குக் குடித்தண்ணீரை மாநகராட்சி மன்றம் நிரப்புவதற்கு ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ள அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதேசமயம், "கொழும்புத்தறை மேற்குப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் விநியோக தாங்கி ஊடாக போதியளவு குடிதண்ணீர் விநியோகிக்கப்படும்" என்று மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். (ம-17)

## சுழிபுரம் சபைக்கு நான்கு வாகனங்கள்

யாழ்ப்பாணம், செப். 26

'வேள்ட் விசன்' தேசிய திட்டப் பணிப்பாளர் கலாநிதி டனன் சேனாதிராசாவின் முயற்சியினால் வலி. மேற்கு சுழிபுரம் பிரதேச சபைக்கு நான்கு வாகனங்கள் கிடைத்துள்ளன.

இதன் பிரகாரம் கடந்த 21ஆம் திகதி இந்த நான்கு வாகனங்களும் வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரனிடம் கையளிக்கப்பட்டன. கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் வலி.மேற்குப் பிரதே சபை தவிசாளர் த.நடனேந்திரன் சபையின் வாகனப் பற்றாக்குறை குறித்து விரிவாக எழுதிய கடிதத்தை வேள்ட் விசன் தேசிய திட்டப் பணிப்பாளர் கலாநிதி டனன் சனாதிராசாவிடம் வழங்கி நியாயப்படுத்தியிருந்தார். இதனையடுத்தே இந்த வாகனங்கள் வழங்கப்பட்டன என்று தெரியவருகிறது. இந்த நிகழ்வில் வேள்ட் விசன் நிறுவன முகாமையாளர் ஏ.சுரேஷ், நிகழ்ச்சித் திட்ட அலுவலர் ஏ.ஆதித்தன் மற்றும் அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

"வலி.மேற்கில் வாகனப் பற்றாக்குறை காரணமாக மக்களுக்கான சேவை வழங்கலில் தடைகள் இருந்தன. தற்போது வாகனங்கள் கிடைக்கப்பெற்றதன் மூலம் மக்களுக்கு திருப்திகரமான சேவையை முன்னெடுக்கலாம்" எனச் சபையின் தவிசாளர் ந.நடனேந்திரன் தெரிவித்தார். (ம-50)



## கற்கோவளம் மெதடிஸ்த மிஷனில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம் செப். 26

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் புகையிலை, மதுசாரம் மற்றும் ஏனைய போதைப் பொருள்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை சமூகத்தின் பேண்தகு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் இணைந்து போதையற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் என்னும் கருப்பொருளிலான பதாதையைத் தாங்கியபடி நடைபவனி நடத்தினர். பருத்தித்துறை பிரதேசபொதுச்சுகாதாரப்பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் நிகழ்வில் கருத்துரைகளை வழங்கினார். (ம-9)

## நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் திறைசேரியில் இருந்து

# தண்டம், முத்திரைவரி வருமானங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பகிர்வு

யாழ்ப்பாணம், செப். 25

**வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்க வேண்டிய 2017ஆம் ஆண்டுக்கான வருமான நிதியாக 79 மில்லியன் ரூபாவை மாகாண திறைசேரி நேற்றையதினம் விடுவித்தது. நீதிமன்றங்களினூடாக விதிக்கப்பட்ட தண்டப் பணம் மற்றும் முத்திரை வரி என்பனவற்றின் மூலம் கிடைத்த வருமானங்களே அவ்வாறு விடுவிக்கப்பட்டன.**

உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளுக்குள் நடைபெறும் குற்றங்களுக்கான தண்டப்பணம் நீதிமன்றத்தால் அறவிடப்படும். அவை மாகாண திறைசேரிக்கு வழங்கப்படும்.
உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தித் தேவைகளுக்காக மாகாண திறைசேரி காலத்துக்குக் காலம் அந்தப் பணத்தை விடுவிக்கும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிறைவடைந்து சபைகள் தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளன.
ஆகவே இவ்வாறு சபை எல்லைக்குள் அறவிடப்பட்ட தண்டப் பணம் மற்றும் முத்திரை வரி வருமானப் பணங்களை தந்துவுமாறு கோரிக்கைகள் திறைசேரிக்கு முன்வைக்கப்பட்டன.
அதனடிப்படையில் சபையின் அபிவிருத்தி வேலைகளைக் கருத்தில் கொண்டு 2017ஆம் ஆண்டுக்கான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைவரி வருமானமாக 79 மில்லியன் ரூபா சபைகளுக்கு நேற்றையதினம் விடுவிக்கப்பட்டுள்ளது.
தண்டப் பணத்தின் மூலம் வல்வெட்டித்துறை நகர சபைக்கு 9 லட்சத்து 25 ஆயிரத்து 200 ரூபாவும், வேலணை பிரதேச சபைக்கு 7 லட்சத்து 56 ஆயிரத்து 600 ரூபாவும், காரைநகர் பிரதேச சபைக்கு ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 900 ரூபாவும், நல்லூர் பிரதேச சபைக்கு 15 லட்சத்து 69 ஆயிரம் ரூபாவும், சாகவச்சேரி பிரதேச சபைக்கு 31 லட்சத்து 53 ஆயிரத்து 800 ரூபாவும், வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு 16 லட்சத்து 58 ஆயிரம் 753 ரூபாவும், வலிகாமம் வடக்கு பிரதேச சபை 17 லட்சத்து 82 ஆயிரத்து 9 ரூபாவும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு 44 லட்சத்து 69 ஆயிரத்து 981 ரூபாவும், பருத்தித்துறை பிரதேச சபைக்கு 13 லட்சத்து 15 ஆயிரத்து 499 ரூபாவும், மன்னார் பிரதேச சபைக்கு 12 லட்சத்து 74 ஆயிரத்து 84 ரூபாவும், கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு 46 லட்சத்து 60 ஆயிரத்து 433 ரூபாவும், பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்கு 16 லட்சத்து 40 ஆயிரத்து 499 ரூபாவும், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு 82 லட்சத்து 92 ஆயிரத்து 58 ரூபாவும் வருமானமாக் கிடைத்தன.
முத்திரை வருமானத்தின் மூலம் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு 18 லட்சத்து 67 ஆயிரத்து 446 ரூபாவும், மன்னார் பிரதேச சபைக்கு 58 லட்சத்து 94 ஆயிரத்து 257 ரூபாவும், நானாட்டான் பிரதேச சபைக்கு 17 லட்சத்து 32 ஆயிரத்து 193 ரூபாவும், மன்னார் நகர சபைக்கு 97 லட்சத்து 59 ஆயிரத்து 766 ரூபாவும், மருதம்பற்று பிரதேச சபைக்கு 26 லட்சத்து 41 ஆயிரத்து 567 ரூபாவும், பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்கு 79 லட்சத்து 85 ஆயிரத்து 805 ரூபாவும், சாவகச்சேரி நகர சபைக்கு 6 ஆயிரத்து 435 ரூபாவும், முசலி பிரதேச சபைக்கு 12 லட்சத்து 21 ஆயிரத்து 214 ரூபாவும் வருமானமாகக் கிடைத்தன. (ம-7)

## சிலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 26
சித்தன்கேணி சிறி கணேச வித்தியாலயத்தின் நிறுவுனர் அமரர் மாரிமுத்து கனகசபாபதியின் திருவுருவச் சிலை திறப்பு விழா இன்று இடம்பெறவுள்ளது.
காலை 10.30 மணியளவில் வித்தியாலய முன்றிலில் வித்தியாலய முதல்வர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், சிறப்புவிருந்தின ராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெ.அருள்மயம், மதிப்புறு விருந்தினர்க ளாக நிறுவுனரின் பேரனும் முன்னாள் மாண வனுமான க.மகாதேவா, பழைய மாணவர் சங்கச் செயலர் சு.சுந்தரராசா, பழைய மாண வர் சங்கப் பொருளாளர் சி.அருள்மயம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## கருங்குளவிகளால் தாக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், செப். 25
கருங்குளவிகளால் தாக்கப்பட்ட கைதடி நாவற்குளியைச் சேர்ந்த தம்பதியினர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் மந்துவிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பனையோலைகளிலிருந்து மட்டைகள் வெட்டுவதற்காகச் சென்ற தம்பதியினரே அவ்வாறு கருங்குளவிகளால் தாக்கப்பட்டனர். கைதடி நாவற்குளி வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த அப்புக்குட்டி சிறிகாந்த் (வயது 39) அவரது மனைவியான சிறிகாந்த் கிரிதமா (வயது 31) ஆகியோரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-9)

## விவசாயிகளின் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்

கொடிகாமம், செப். 26
தென்மராட்சி பிரதேச விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று மீசாலை புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
மட்டுவில் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சு.க.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் விவசாய பிரதி அமைச்சர் அங்கயன் இராமநாதன், அமைச்சின் செயலாளர் சிவராம், மாவட்ட உதவி ஆணையாளர் நிசாந்தன், சாவகச்சேரி கமநல அலுவலர் முரளிகரன் மற்றும் பிரதேச கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், மகளிர் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் உரையாற்றிய அங்கயன் இராமநாதன் தெரிவித்ததாவது:
தென்மராட்சி பிரதேசத்தில் 300க்கும் மேற்பட்ட குளங்கள் நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாமல் உள்ளன. அவை சீரமைக்கப்பட வேண்டும். அடுத்த வருடத்தில் 300 கோடி ரூபா குளங்கள் சீரமைப்பிற்கு என்று ஒதுக்கப்படவுள்ளன. உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வோம். வெளிநாட்டு நிறுவனங்கள் எமு உள்ளூர் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யும் போது விவசாயிகள் நன்மை அடைவார்கள். சந்தைகளில் இடைத் தரகர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் உள்ளூர் உற்பத்திகளை விவசாயிகள் நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்கு உழவர் சந்தைகள் அமைக்க வேண்டுமென விவசாயிகள் கேட்டுள்ளனர். இது தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களுடன் கலந்துரையாடப்படும் - என்றார். (ம-9,159)






யாழ்ப்பாண மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் யாழ்ப்பாண மாநகர முதல்வரை மதிப்புறுத்துகின்ற நிகழ்வும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. சமாசத் தலைவர் ஆ.உதயசங்கர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், சி.சுகிர்தன் மற்றும் கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் வடக்கு மாகாணசபை மூலம் சிகை ஒப்பனையாளர் சங்கத்திற்கான ஆறு விதிகள் அடங்கிய புதிய நியதிச்சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற முக்கிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ம)

## வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்
### வழங்க பரு.சபை தீர்மானம்

பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமை நிலையில் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென சபை நிதியில் இருந்து 71 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களின் விபரங்களை உறுப்பினர்கள் சபைக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவை பரிசீலிக்கப்பட்டு உபகரணங்கள் வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அண்மையில் நடைபெற்ற சபையின் அமர்விலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (ம-173)

## மழைக் காலத்தை எதிர்கொள்ள குடாநாட்டில் தயார்ப்படுத்தல்கள்

யாழ்ப்பாணம், செப். 26
யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள வெள்ளவாய்க்கால் மற்றும் மதகுகள் போன்றவற்றை துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
மழை காலத்தில் வெள்ளம் வழிந்தோட வசதியாக இந்த வெள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது. மதகுகள், வெள்ள வாய்க்கால்களில் சிலர் கழிவுகளைக் கொட்டிவிட்டுச் செல்கின்றனர்.
இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுவதனால் மழைக்காலத்தில் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கி நிற்கும் நிலை ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. மதகுகள், வாய்க்கால்களில் இவ்வாறு கழிவுகள் கொட்டுவோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் உள்ளூராட்சிச் சபைகள் தீர்மானித்துள்ளன. (ம-17)



## கப்பலேந்தி மாதா ஆலய சுற்று மதிலில் "எங்க ஊரு" "எங்க கெத்து" வசனத்தால் சர்ச்சை

மன்னார்,செப் .26
மன்னார் கருசல் புனித கப்பலேந்தி மாதா ஆலய வளாகத்தில் மதில் சுவர்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாத விசமிகளால் "எங்க ஊரு" "எங்க கெத்து" என எழுதப்பட்டு சுவர்கள் சேதமாக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஆலய நிர்வாகம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை முறைப்பாடு செய்துள்ளனர்.
நீண்ட காலமாகக் குறித்த ஆலயம் பல்வேறு தாக்குதல் சம்பவங்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ள நிலையிலே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.
அண்மைய திருவிழாவின் போது இந்த மதில்கள் சீரமைப்பு செய்யப்பட்டு அழகான முறையில் அமைக்கப்பட் நிலையிலே நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
குறித்த சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதோடு, குறித்த செயற்பாட்டைக் கருசல் புனித கப்பலேந்தி மாதா ஆலய நிர்வாகம் வன்மையாகக் கண்டித்துள்ளது. (56)

# நாயாறு, நந்திக்கடல் அபிவிருத்திக்கு வனஜீவராசிகள் அமைச்சர் அனுமதி

**முல்லைத்தீவு,செப் .26**
**முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றுப் பாலம் மற்றும் நந்திக்கடல் அபிவிருத்திகளில் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் உள்ள தடைகள் உடனடியாக நீக்கி அந்தப்பணியை தொடர ஏற்ற ஒழுங்குகள் இடம்பெறும் என அதன் அமைச்சர் சரத் பொன்சேகா உறுதியளித்தார்.**



நந்திக்கடல் பகுதியில் அதிக வறட்சி நிலவும் காலத்தில் மீன்கள் இறப்பதும், சேறும் சகதியும் துர்நாற்றம் வீசுவதும் அண்மைய வருடங்களில் இடம்பெற்றதும், நடப்பாண்டிலும் இதே நிலைமை காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது .இந்த நிலமைகளை சீர்செய்து சேற்றையும் அள்ளி கடல்நீரை தொடுவையுடன் இணைப்பதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடு இருந்தும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதிக்குக் காத்திருந்தமை அறிந்ததே. இவற்றுக்கான அனுமதியைத் தற்போது அமைச்சர் வழங்கியுள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இது தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். குறித்த கலந்துரையாடலில் அமைச்சர் இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,
முல்லைத்தீவு மாவட்டத்தின் குறித்த இருபிரதேசங்களும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் வருவதனால் அந்தப்பகுதியில் மேற்கொள்ளவுள்ள பெரிய அபிவிருத்திக்குத் தடையாக இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் உரிய அபிவிருத்தியை மேற்கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நிலவும் தடை அகற்றப்படும். அதற்கமைய அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்ட வகையில் இடம்பெறும்.
இதேநேரம் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் காட்டு யானைகள் ஊடுருவுவதனால் ஏற்படும் பாதிப்புக்கள் சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் குறித்த பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் வகையில் அந்தப் பகுதியின் எல்லைகளில் யானைத் தடுப்பு வேலிகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். என்றும் உறுதியளித்தார்.
குறித்த சந்திப்பில் மாவட்டச் செயலர் ,பிரதி அமைச்சர் மஸ்தான் , சகல பிரதேச செயலர்கள் , மாவட்டத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (105)



## ஈருருளிகள் வழங்கல்

கொடிகாமம் .செப். 26
கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவர்கள் மூவருக்குக் கடந்த 20ஆம் திகதி ஈருருளிகள் வழங்கப்பட்டன.
கல்லூரிக்கு தினமும் கால்நடையாக வரும், பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த ஈருருளிகள் வழங்கப்பட்டன.
கல்லூரியின்,பழைய மாணவனும் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலுவலருமான வி.கிரிதரனின் ஏற்பாட்டில் புலம்பெயர் நாடொன்றிலிருந்து சொந்த இருப்பிடத்துக்கு வந்துள்ள கா.செல்வரத்தினம் என்பவரின் நிதிப் பங்களிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட ஈருருளிகள் வழங்கப்பட்டன. (159)



## வினாடி வினாப் போட்டி

வவுனியா.செப் .26
பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு மாவட்ட முதியோர் சங்கமும், மாவட்ட சமூக சேவை அலுவலகமும் இணைந்து, வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் வீ 3 பவுண்டேசன் அனுசரணையில்,பொது அறிவு வினாடி வினாப் போட்டியை மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் தொடராக நடத்தி வருகின்றன. நேற்று அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் முதலில் கலைமகள் வித்தியாலயத்துடன் மோதிய இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி இறுதிப் போட்டிக்கு தெரிவானது. மற்றொரு அரையிறுதியில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்துடன் மோதிய முஸ்லீம் மகாவித்தியாலயம் இறுதிப்போட்டிக்கு தெரிவானது. பிரதான தீர்ப்பாளராக தமிழழகன் கலந்து கொண்டார். இன்தமிழ் இனியன் செ.ஸ்ரீநிவாசன் போட்டிகளை நடத்தினார். ஆசிரியர்கள், முதியோர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். இறுதிப் போட்டிகள் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரிக்கும் வவுனியா முஸ்லீம் மகாவித்தியாலயத்திற்கும் இடையில் மாவட்ட மட்ட முதியோர் தின நிகழ்வில் நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ளது. (222)



# புதிய பேருந்து நிலையம் ஆரம்பம்

கிளிநொச்சி,செப் .26
கிளிநொச்சி, பரந்தன் நகரத்துக்கான புதிய பேருந்து நிலையத்தை அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகியது. கரைச்சிப் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பரந்தன் பேருந்து நிலையத்தை, நவீனமயமாக்கி உருவாக்கும் முடிவுக்கு அமைய ,மாகாணத்தினுடைய [illegible]தொதுக்கப்பட்டு, நிதி பெறப்பட்டு ,வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினுடைய பேருந்து நிலைய வடிவமைப்புடன், பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது .சுமார் 4 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட இருக்கும் இந்தப் பேருந்து நிலையத்துக்கான அடிக்கல் நேற்று நண்பகல் 12 மணியளவில் நட்டு வைக்கப்பட்டது. மிக நீண்ட காலமாகக் கிளிநொச்சியினுடைய உப நகரமாக விளங்கக்கூடிய பரந்தன் நகரத்துக்குரிய வடிவமைப்பு இன்றி காணப்பட்டதாலேயே, பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தி ,பேருந்து நிலையத்துக்கான உள்தள வசதிகளை ஏற்படுத்தும் ஆரம்ப முயற்சியாக பேருந்து நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதனைத்தொடர்ந்து பேருந்து நிலையத்தை சூழ்ந்துள்ள பகுதிகளை நவீனமயப்படுத்தப்படுவதுடன், 8 மில்லியன் ரூபா செலவில் மலசலகூடம் அமைப்பதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு, பூநகரி, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இருந்து வருகின்ற ஏராளமான மக்கள் தரித்து செல்லுகின்ற முக்கிய இடமாக இருந்து வருகிறது. எனவே இந்த பேருந்து நிலையத்தை நவீனமயப்படுத்த வேண்டும் எனக் கரைச்சிப் பிரதேச சபை மாகாண முதலமைச்சருக்குக் கொடுத்த கோரிக்கைக்கு அமைய வீதி அபிவிருத்தி அதிகார சபையினுடைய வடிவமைப்பு மற்றும் அனுசரணையுடன் இந்தப் பணிகள் நேற்று நடைபெற்றது.
இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், உப தவிசாளர், உறுப்பினர்கள், பிரதேச அமைப்பினர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# விவசாயக் கிணறுகளுக்கு ரூ.103 மில்லியன் நிதி தேவை

### கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வே.ஆயகுலன் தெரிவிப்பு

கிளிநொச்சி ,செப். 26

**கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய விவசாயக் கிணறுகள் மற்றும் விவசாய கிணறுகளை சீரமைப் பதற்காக 103 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.**

மாவட்டத்தில் புதிய 259 விவசாய கிணறுகளை அமைப்பதற்கும் ,202 பாதிக்கப்பட்ட விவசாயக் கிணறுகளை சீரமைப்பதற்கும் விவசாயிகளால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், இந்த தேவைகளை பூர்த்தி செய்யவேண்டியதேவைப்பாடு காணப்படுகின்றது. 259 புதிய விவசாயக் கிணறுகளை அமைப்பதற்கு 77 மில்லியன் ரூபா நிதியும், 202 பாதிக்கப்பட்ட விவசாய கிணறுகளை சீரமைப்பதற்கு 26 மில்லியன் ரூபா நிதியுமாக மொத்தம் 103 மில்லியன் ரூபா நிதி தேவைப்பாடு காணப்படுகின்றது என. கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் உள்ள பழைய மற்றும் புதிய விவசாயக் கிணறுகளை அமைப்பதன் மூலம் நீர் பற்றாக்குறை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் விவசாயிகளுக்கும் பெரும் உதவியாக இருக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (6)

# மணல் அகழ்வதற்கான அனுமதியை நீர்ப்பாசனத் திணைக்களமே வழங்கவேண்டும்

### நதிகள் பாதுகாப்பு நிகழ்வில் சாள்ஸ் எம்.பி கோரிக்கை




மன்னார்,செப். 26

மன்னார் மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் குமாரதேவனின் தலைமையில் உலக நதிகளின் பாதுகாப்புதினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை பத்து மணியளவில் மன்னார் மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நானாட்டான் அருவி ஆற்றங்கரையில் நதிகளைச் சுத்தப்படுத்தி பாதுகாப்பது தொடர்பான நிகழ்வு நடைபெற்றது. அந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஆறுகள் நதிகள் என்பன இயற்கை நமக்களித்த கொடைகள் அவற்றைப் பேணிப்பாதுகாப்பதன் மூலமே நாமும் பலன்பெற்று நமது அடுத்த தலைமுறைக்கும் கொடுக்க முடியும் .இன்றைய நமது சுயநல கட்டுப்பாடுகள் இன்றி மணல் அகழ்வு செய்து, மரங்களை வெட்டி, ஆறுகளை சேதப்படுத்துவோமானால் நாமும் பாதிக்கப்பட்டு நம் அடுத்த தலைமுறையும் பாதிக்கப்படும்.

ஆறுகளில் மணல் அகழ்வு என்பது, நீரோட்டத்தால் வரும் மணல்கள் ஒரு இடத்தில் தேங்கி காணப்படும் அப்படி தேக்கமுற்ற மணல்கள் நீரின் ஓட்டத்தை தடை செய்து, நதிக்கும் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். அதனால் அப்படி தேங்கி நிற்கும் மணலை மட்டும் அகழ்வு செய்வதன் மூலம் நதிகளை அழகுடன் பாதுகாக்கவும் முடியும் மக்கள் பயன்பாட்டினை பூர்த்தி செய்து கொள்ளவும் முடியும்.

ஆனால் ஒரு சில இடங்களில் ஆற்று நீர் கிராமங்களுக்குள் வரும் அளவுக்கு மிக மோசமான மணல் அகழ்வை மேற்கொண்டும், மரங்களை வேரோடு சாய்த்தும், ஆற்றுப்பகுதி சேதப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.


மணல் அகழ்வுக்கான அனுமதியினை உண்மையில் நீர்பாசன பொறியியலாளர்கள்தான் வழங்க வேண்டும் இந்த செயற்பாடானது அரசிதழில் இருந்தாலும், மன்னாரில் அது செயற்பாட்டுக்கு வரவில்லை. மாறாக பிரதேச செயலர் சிபாரிசு செய்தால், அநுராதபுரத்தில் இருக்கும் கனியவளத்திணைக்களம் அனுமதி கொடுக்கும். நதிகளை பார்வையிட்டு பாதுகாப்பு செய்வதை நீர்பாசன பொறியியலாளர்கள் தான் செய்வார்கள். பிரதேச செயலரோ அல்லது பிரதேச சபை தவிசாளரோ அநுராதபுரத்தில் உள்ள கனியவளத் திணைக்களமோ செய்வதில்லை.

மணல் அகழ்வுகளுக்கு அனுமதியினை நீர்ப்பாசனத் திணைக்களங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இந்த விடயத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் .எதிர்காலத்தில் மக்கள் அழிவை நோக்கி செல்கின்ற செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது. அத்தோடு நிகழ்வுகளின் ஆரம்பத்தில் நீர்பாசன கீதமானது சிங்கள மொழியில் ஒலிக்கவிடப்பட்டிருந்தது நிகழ்வின் இறுதியில் நீர்பாசன பணிப்பாளர் பொறியியலாளர்கள் மற்றும் பணியாளர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் நீர்பாசனத் திணைக்களத்தின் கீதங்களையும் தமிழில் இசைக்க விடுங்கள் என்றும் திணைக்களத்தினரிடம் கேட்டுக்கொண்டார். என்று தனது உரையில் குறிப்பிட்டு இருந்தார்.

நிகழ்வின் போது ஆற்றுப்பகுதியை சுத்தப்படுத்தும் நிகழ்வை நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு பதிலாக அவரது செயலர் றிப்கான் பதியுதீன் கலந்து கொண்டார். மன்னார் மாவட்ட நீர்பாசனப் பணிப்பாளர் குமாரதேவன், பிரதேச நீர்பாசன பொறியியலாளர்கள், மாந்தை மேற்குப் பிரதேச சபை தவிசாளர் ஆ. சந்தியோகு, விவசாய அமைப்புகள், நீர்பாசன ஊழியர்கள், மாவட்ட விவசாயிகள் போன்றோர் கலந்து கொண்டனர்.

நதிகள் பாதுகாப்பு நிகழ்வானது மன்னார் மாவட்டத்தில் நடைபெறுவது இதுவே முதல் தடவை என்பதும், இலங்கையில் உள்ள நீளமான ஆறுகளில் நானாட்டான் பிரதேசத்தில் ஓடும் அருவியாறு இரண்டாவது நீளமான ஆறு என்பதும் குறிப்பிடத்தக்கது. (213)



## பொலிஸாரின் சிறப்பு நடவடிக்கை கசிப்பு உற்பத்தி நிலையங்கள் அழிப்பு

கிளிநொச்சி, செப். 26

பொலிஸாரின் சிறப்பு நடவடிக்கை மூலம் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் அழிக்கப்பட்டு, 45 பெரல் கோடா மீட்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறிவர்தனவின் சிறப்பு பிரிவான போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் ,பொறுப்பதிகாரி சதுரங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சுபேசன் தலைமையில் இயங்கி வருகின்றனர்.

சிறப்புப் பிரிவினரும், கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவினரும், சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டு, இந்த 45 பெரல் கோடாவினை மீட்டுள்ளனர். கல்மடு தொடக்கம் நெத்தலியாறு, செல்கின்ற வாய்க்காலினை இலக்கு வைத்து, கிளிநொச்சி மாவட்ட விசேட போதைப்பொருள் தடுப்பு பிரிவினர், தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். 30 பெரல் கோடா மீட்கப்பட்டதாகவும், அதே வேளை கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவினர் கட்டைக்காடு .குஞ்சுக்குளம் பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில், 15 பெரல் கோடா மீட்கப்பட்டுள்ளதாகவும், மீட்கப்பட்ட 45 பெரல் கோடாவும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அத்தோடு சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை எனவும், கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்பு மது ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (6)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய ஏழு வாகனங்கள் பறிமுதல்

கிளிநொச்சி, செப் .26

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய 4 டிப்பர் வாகனங்களும் 3 உழவியந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், கடந்த இரு தினங்களாகப் பொலிஸார் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கைகளிலேயே இந்த அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பர் மற்றும் உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வகையில் கட்டைக்காடு பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு டிப்பர் வாகனங்களும், முகமாலை பகுதியில் இரு டிப்பர் வாகனங்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். அதே போல் வண்ணாங்கேணிப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய உழவியந்திரமும், இயக்கச்சி மற்றும் முகமாலைப் பகுதியில் அனுமதிப்பத்தரங்கள் இன்றி மணல் ஏற்றிய உழவியந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும், வாகன சாரதிகளுக்கு மேலதிக விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது எனப் பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)



அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில், மரங்களின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தும்பொருட்டு யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியில், தாண்டிக்குளம் பகுதியில் மரநடுகை செயற்றிட்டம் ஒன்றை கடந்த 22,23,24 ஆகிய தினங்களில் மேற்கொண்டிருந்தனர். (110)

# இரு காற்றாலை நிலையங்கள் தனங்களப்பில் அமைகின்றன

## அடுத்த வருடம் மின்சாரம் பெறத் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 26

சாவகச்சேரியில், தலா 10 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு காற்றாலைகள் அமைக்கப்படவுள்ளன.

28 மில்லியன் டொலர் முதலீட்டில் இவை அமைக்கப்படவுள்ளன. அவற்றுக்கான காணி தனியாருக்குச் சொந்தமானது. மூன்று துண்டுகள் மாத்திரமே அரச காணி என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் அமையும் காற்றாலை நிறுவனம், தனங்களப்பிலிருந்தே தனது காற்றாலையை அமைக்கவுள்ளது.

தேசிய அபிவிருத்தி வங்கிக்கும், சீலெக்ஸ் நிறுவனத்துக்கும் இடையில் இது தொடர்பான கடன் உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு அலகு மின்சாரத்தை 10.90 ரூபாவுக்கு அடுத்த 20 ஆண்டுகளுக்கு உற்பத்தி செய்ய முடியும். தற்போது இலங்கையில் ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இலங்கை மின்சார சபை 20 ரூபாவைச் செலவிடுகிறது.

இந்த இரண்டு காற்றாலைகளிலும் 8 காற்றாடிகள் பொருத்தப்பட்டு, ஒவ்வொன்றில் இருந்தும், தலா 2.5 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்குத் தேசிய அபிவிருத்தி வங்கி 3 ஆயிரம் மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்கவுள்ளது. எஞ்சிய நிதியை சீலெக்ஸ் பொறியியல் நிறுவனம் மற்றும் லங்கா வென்சேர்ஸ் நிறுவனம் என்பன முதலீடு செய்யவுள்ளன.

ஐரோப்பிய தர நியமங்களுக்கு அமைய உருவாக்கப்படும் இந்தக் காற்றாலைகள் மூலமாகக் கிடைக்கும் மின்சாரம், அடுத்தவருட நடுப்பகுதியில் இருந்து தேசிய மின் விநியோகத்துக்குக் கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அனுமதியுடன் பளையில் ஏற்கனவே காற்றாலை அமைக்கப்பட்டு மின் பெறப்படுகின்றது. (4)

---

## வடக்கு மாகாணத்திலுள்ள

# அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் போராட்டக் கொள்கையுடன் செயற்படுகிறனர்

*பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவிக்கிறார்*

அம்பாறை, செப். 26

வடக்கிலுள்ள அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போருக்கு முன்னரும் சரி பின்னரும் சரி இன்று வரை சமூக உரிமைப் போராட்டம் சார்ந்த கொள்கைப் பிடிப்புடன் செயற்படுகின்றனர். அதனால்தான் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் இன்னும் உயிரோட்டமுள்ளதாகவே இருந்து வருகின்றது. இந்த நிலைமை நீடிக்கின்றது.

இவ்வாறு விளையாட்டுத்துறை, கண்டி நகர அபிவிருத்தி பிரதி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

"அவ்வாறிருக்கும் நிலையில் முஸ்லிம் சமூகம் எங்கு நிற்கிறது? என்றும் கேள்வி எழுப்பிய ஹரீஸ், அதிகார மையம் இன்மையால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகத் தெளிவான பார்வையின்மையால் முஸ்லிம் சமூகம் மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்ட சமூகமாக மாறியுள்ளது" என்றும் கூறினார்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களுடனான முஸ்லிம் சமூகம் சார்ந்த திறந்த கலந்துரையாடல் கல்முனை, மயோன் மாவத்தை, பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே பிரதி அமைச்சர் ஹரீஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது,

மறைந்த முஸ்லிம் காங்கிரஸின் நிறுவகத் தலைவர் மர்ஹூம் எம். எச்.எம். அஷ்ரப் முன்னெடுத்த முஸ்லிம் சமூகத்தின் அரசியல் போராட்டத்துக்கும் அம்பாறை மாவட்டமே வலுக் கொடுத்ததுடன் ஏனைய மாவட்ட முஸ்லிம்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் வலுப்படுத்தியது.

நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கு மத்தியில் முதன்மை வகிபாகம் கொண்ட மாவட்டமாக அம்பாறை மாவட்டமே திகழ்ந்து வருகின்றது. இதனை மையப்படுத்திக் கொள்கைப் பிடிப்புடன் அஷ்ரப் அரசியல் போராட்டத்தை முன்னெடுத்தார்.

ஆனால் இன்று முஸ்லிம் சமூகம் எங்கு நிற்கின்றது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

வரலாற்றின் அடிப்படையில் பூகோள அமைப்பு ரீதியாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த வரலாறு உண்டு.

ஆனால் திட்டமிட்ட சிங்கள் குடியேற்றங்கள் காரணமாக சிங்களவர்களுடன் சமமான நிலைக்கு இந்த மாவட்டத்தில் முஸ்லிம்களின் நிலை வந்துள்ளது.

காலப் போக்கில் இன்னும் பின் தள்ளப்பட்டு நிர்வாக மற்றும் அபிவிருத்தி ரீதியாகவும் பின் தள்ளப்பட்டும் நிலையுள்ளது. அடுத்த சமூகங்கள் நம்மை ஏறி மிதிக்கும் நிலையுமே ஏற்படும்.

நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவான பார்வையும் எம்மிடமில்லை.

இந்த மாவட்டத்தில் நிர்வாக மையமான மாவட்டச் செயலகத்தில் முஸ்லிம் அதிகாரிகளின் வகிபாவத்தை அகற்றவும் கச்சிதமான செயற்பாடுகள் அரகேற்றப்படுகின்றன.

எனவே இன்னும் பேசாமடந்தைகளாகவும் அக்கறையற்றவர்களாகவும் முஸ்லிம் சமூகத்தவர் இருந்துவிட முடியாது. முஸ்லிம்களின் நிலை மீளாய்வுக்குட்படுத்தப்படவேண்டும். நிறுவனமயப்படுத்தப்படவேண்டும்.

போரின் பின்னரான நிலையில் சில மாவட்டங்களில் தமிழர்கள் சோர்ந்திருந்தாலும் வடக்கில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் இன்றும் என்றும் உயிரோட்டமாகவேயுள்ளது.

முஸ்லிம்கள் இந்த மக்களின் கொள்கைப் பிடிப்பையும், ஒன்றித்த செயற்பாடுகளையும் முன்னுதாரணமாகக் கொள்வதுடன் விழிப்படையவும் வேண்டும் - என்றார்.

கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளத் தலைவர் மீரா. எஸ். இஸடீன் உட்பட பலரும் கருத்துரைகள் ஆற்றினார். (4,30)

---

# முஸ்லிம்களின் அபிலாஷைகளை உணரவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப். 26

வடக்கு முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தமிழ் மக்களும் தமிழ் அரசியல் தலைவர்களும் புரிந்துகொள்ள வேண்டும். எமது உரிமைப் போராட்டத்தில் முஸ்லிம்க ளையும் உள்ளடக்க வேண்டுமாக இருந்தால் அது அவசியமானது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை மண்கும்பானில் யாழ்ப்பாண முஸ்லிம் பிரமுகர்களுட னான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அங்கு சுமந்திரன் கருத்துரைக்கும் போது, வடக்கு முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்து தமிழ் மக்களிடம் போதுமான விழிப்புணர்வு இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது பிரச்சினைகளைக் காரணமாக வைத்துக்கொண்டு முஸ்லிம் மக்களின் விடயங்களை நாம் புறக்கணிக்க முடியாது.

ஆரம்பத்தில் வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டங்களில் எடுக்கின்ற தீர்மானங்களை அதிகாரிகள் முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றார்களா என்பதை ஆராய்வதற்கு எம்மிடம் பொறிமுறைகள் குறைவாகவே இருக்கின்றன. எனினும் முஸ்லிம்கள் விடயத்தில் போதுமானளவு கவனம் செலுத்துவதற்குக் கட்சி மட்டத்தில் நடவடிக்கை எடுப்பேன் என்று சுமந்திரன் குறிப்பிட்டார். (4)

---



# இனிவரும் வடக்கு மாகாண சபையை வேறு யாராவது எடுத்துச் செய்யுங்கள்!

*அதன் உறுப்பினர் லிங்கநாதன் இப்படிக் கூறுகிறார்*

வவுனியா, செப். 26

வடக்கு மாகாண சபை இன்னும் சிறப்பாகச் செயற்பட்டிருக்கலாம். உண்மையயைச் சொன்னால் நாம் மனக்குறையுடன் தான் விடைபெறுகிறோம். இனிவரும் மாகாண சபையை யாராவது எடுத்துச் செய்யுங்கள் என்ற நிலைப்பாட்டில்தான் நாங்கள் இருக்கிறோம்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

விவசாயத்துடன் தொடர்புடைய உதவிகள், செயற்பாடுகள் பிரதி மாகாண விவசாயத் திணைக்களத்தால் பொதுமக்களுக்கு நேற்று வழங்கப்பட்டன.

மண் பரிசோதனை ஆய்வுகூடத் திறப்புவிழா, மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இளைஞர் விவசாய அமைப்புகளுக்கு விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் வழங்குதல், 2018ஆம் ஆண்டின் மரநடுகைத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மரக்கண்டுகள் வழங்குதல் போன்ற செயற்றிட்டங்கள் வழங்கப்பட்டன.

அதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

விவசாயிகளுக்கு வினைத்திறனான ஒரு செயலைச் செய்வதற்குச் சட்டத்தில் இடமில்லை. இருந்தவற்றை மத்திய அரசு எடுத்துவிட்டது.

இதை நாம் ஒரு நியதிச் சட்டத்தினூடாகச் செய்திருக்கவேண்டும். ஆனால் விவசாய அமைச்சுக்கு நியதிச்சட்டம் இன்னும் இயற்றப்படவில்லை என்பது கவலையான விடயம்.

வடக்கு அமைச்சர் சிவநேசன் குறுகிய காலத்தில் பல விடயங்களைச் செய்திருக்கின்றார். மாகாணசபை இன்னும் ஒரு மாதத்துடன் முடிவுற இருக்கிறது. உண்மையயைச் சொன்னால் நாம் மனக்குறையுடன் தான் விடைபெறுகிறோம். அதற்காக எதுவும்செய்யவில்லை என்றுகூறமுடியாது. நிதி திரும்பியது என்று சொல்வதெல்லாம் பொய்க் கதைகள்.

அரசியலில் பலகோணங்களாகப் பிரிந்து நிற்கின்றோம். மாட்டுக்கு மாடுசொன்னால் கேட்காது என்பதுபோல ஒரு கட்சி இன்னொரு கட்சிக்குச் சொன்னால் கேட்காது. பொதுமக்கள் அழுத்தங்களை வழங்கினால் அவர்களால் தட்டிகழிக்கமுடியாது.

மாகாணசபை காலம் நிறைவடையும்போது விக்கினேஸ்வரன் போய்விடுவார் என்று கூறப்படுகிறது. அவர் போவது ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரம் அல்ல அனைத்துத் தமிழ் மக்களுக்கும் அது பாதிப்பாகவே முடியும். எனவே ஒற்றுமையைத் தொடர்ந்து நிலைநாட்டுவதற்கு பொதுமக்கள் அரசியல்கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

13ஆம் திருத்தத்துக்கு முன்பாக இலங்கையிலே மிகவினைத்திறனோடு விவசாயத் திணைக்களம் செயற்பட்டிருந்தது. 13ஆம் திருத்தத்துக்கு முன்னர் விவசாயத் திணைக்களத்துக்கு இருந்த பல பிரிவுகள் இன்று தனியாக இயங்குகின்றன.

மாவட்டச் செயலகம், கமநல சேவை நிலையம், ஆராய்ச்சிப்பிரிவு, விதைப் பிரிவு என்று மத்திய அரசின் கீழே சென்றுவிட்டன. மாகாணத்துக்கு விவசாய விரிவாக்கல் மாத்திரமே இருக்கிறது- என்றார்.

வவுனியா மாவட்டத்தில் விவசாயத்துறையில் மூன்று பிரச்சினைகள் காணப்படுகின்றன. மிருக அழிவு, வறட்சி, நோய்த்தாக்கம். இவற்றிற்கு இழப்பீடு வழங்கும் ஒரு பொறிமுறையை மாகாண சபையாலோ அல்லது விவசாய அமைச்சாலோ அமைக்கும்படி கோரியிருந்தும் இதுவரை அது நடைபெறவில்லை. ஆனால் மண்ணைப் பரிசோதித்து அதற்கேற்ப பயிரை நடுவதன்மூலமாக நல்ல விளைச்சலைப் பெறக்கூடிய நிலமை வவுனியாவில் இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய காலநிலைமாற்றத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது விவசாயத்தை நம்பியிருக்கும் வவுனியா மாவட்டத்துக்கு இது ஒரு வரப்பிரசாதமே.

மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் சகிலாபானுவின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் கலந்துகொண்டு மண்பரிசோதனை ஆய்வுகூடத்தை திறந்துவைத்தார். விவசாய உபகரணங்களயும் வழங்கி வைத்தார். நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராயா, இ.இந்திராயா, பிரதி நீர்பாசனப் பணிப்பாளர் நவநேசன் உதவி விவசாயப் பணிப்பாளர் சு.யெகதீஸ்வரி மற்றும் உத்தியோகத்தர்கள், இளைஞர் விவசாய அமைப்புகள் எனப் பல அமைப்புகளையும் சேர்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த மண் பரிசோதனை நிலையம் வவுனியாவில் நீண்டகாலம் இல்லாதிருந்த நிலையில் விவசாயிகளால் சரியான விவசாயச் செய்கையை நடுகைசெய்யமுடியாத நிலையிலிருந்தது. தற்போது விவசாயிகள் தமது பகுதிக்குரிய விவசாயப் போதனாசிரியர்களின் வழிகாட்டலின் மூலமாக மண் மாதிரிகளை எடுத்துவந்து இந்தநிலையத்தில் ஒப்படைத்து இரசாயனங்களுக்காக மாத்திரம் 290 ரூபா கட்டணத்தைச் செலுத்தி சேவைகளைப் பெற்றுகொள்ளமுடியும் என்று கூறப்பட்டுள்ளது.

வவுனியாவில் அதிகரித்து வரும் குரங்குத்தொல்லையை கட்டுப்படுத்தும் நோக்கோடு விவசாயிகளுக்கு துப்பாக்கிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (4,110)

### வடக்கு உள்ளூராட்சி சபைகளில்

# புதிய ஆளணி அங்கீகாரத்துக்கான நடவடிக்கை பூர்த்தி: தடைப்பட்டிருக்கும் அனுமதியை உடனடியாக வழங்கவும்

## பிரதேச சபைகளின் திருத்தச் சட்ட வரைவு மீதான விவாதத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 26

**முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2013 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வடக்கில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஆளணியானது உள்ளூராட்சி சபைகளை முன்கொண்டு செல்லமுடியாதவாறு காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் தலைமைச் செயலாளர், சபைகளின் தவிசாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளர்கள் இணைந்து புதிய ஆளணி அங்கீகாரத்துக்கான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்துள்ளனர். ஆனாலும் அதற்கான அனுமதி தடைப்பட்டு இடை நடுவில் நிற்கிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் பொருத்தமான நடவடிக்கைக்கு வழிவிட்டுக்கொடுத்து வடக்கின் சபைகளை மீளக்கட்டியெழுப்ப உதவ வேண்டும்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் பிரதேச சபைத் திருத்தச்சட்ட வரைவு மீதான விவாதம் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்றது. அதில் பங்குபற்றி உரையாற்றுகையில் அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணம் மூன்று தசாப்தகால போரின் பின்னர் மீளக் கட்டியெழுப்பப்படுகின்றது. இதன் மூலமாக வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகள் தற்போது படிப்படியாக மீள் எழுச்சி பெறுகின்றன.

**வீதி திருத்தம்**

கொழும்பு அரசும் உலகவங்கியும் இணைந்த வகையில் 2011இல் தேசிய கருத்திட்டம் ஒன்றை முன்மொழிந்த வகையில் நெல்சிப் என்ற புறநெகும திட்டத்தின் ஊடாக வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளுக்கும் தலா 100 முதல் 110 மில்லியன் ரூபா வரை நிதி கிடைக்கப்பெற்று 5 முதல் 10 வரையான வீதிகள், சந்தைகள் சில அபிவிருத்தி கண்டன.

எனினும் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் எதிர்பார்த்த அபிவிருத்திகளை இதுவரை அடையாமல் உள்ளன. வடக்கில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் 350 முதல் 600வரையான வீதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இதில் 65 வீதமான வீதிகள் இதுவரை செப்பனிடப்படவில்லை.

இதில் நல்லூர், சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணமாநகரசபை போன்ற வளர்ச்சி அடைந்த சபைகளைவிட ஏனைய 31 சபைகளும் பெரியளவிலான வருமானமின்றி நலிவுற்ற சபைகளாகவே உள்ளன.

பெரும்பாலான சபைகள் திண்மக்கழிவு முகாமைத்துவ பரிகரிப்பு செயற்றிட்டத்துக்கு ஏற்ற பொறிமுறைத் தொகுதிகள் பெற்றுக்கொள்ள முடியாத சூழலும், அதற்கான ஆளனிகள் குறிப்பாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள், காவலாளிகள், களஞ்சியக் காப்பாளர்கள் என்று திண்மக் கழிவு பரிகரிப்பு செயற்றிட்டத்துக்கு ஒவ்வொரு பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகளுக்குப் பிரத்தியேகமாக ஆளணிகள் அங்கீகரித்து வழங்கப்பட வேண்டும்.

இந்தத் தேவைப்பாடுகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் முன்னெடுப்படவேண்டியுள்ளது. இதற்கான அனுமதியை திறைச்சேரியின் செயலாளர் வழங்கி உதவினால் மட்டுமே சபைகளின் திண்மகழிவு முகாமைத்துவம் வலுப்பெறும், சுகாதாரமான சூழல் பேணப்படும். உக்கும் கழிவுகள் பசளையாவதுடன் ஏனைய பிளாஸ்ரிக், தகரம், கண்ணாடி போன்ற கழிவுகளும் மீள் பயன்பாட்டுக்கு உள்ளாக்கப்படும் ஏதுநிலை உருவாகும்.

**தரமுயர்வு இன்னுமில்லை**

உள்ளூராட்சி சபைகளின் தரம் உயர்த்துதல் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 13ஆம் திகதி மறைந்த முன்னாள் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கே.கணேஷ் காலத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச சபைகள் சிலவற்றை நகரசபைகளாகத் தரம் உயர்த்துவது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


இதில் நல்லூர், மானிப்பாய், சுன்னாகம், சுழிபுரம், கரவெட்டிப் பிரதேச சபைகளை நகர சபைகளாகத் தரம் உயர்த்துவது தொடர்பில் தீர்மானம் நிறைவேறியது. 9 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் வடக்கில் எந்தச் சபைகளும் நகர சபைகளாகத் தரம் உயர்த்தப்படவில்லை.

இதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சோ, மாகாணசபைகள் உள்ளூராட்சியின் மத்திய அமைச்சோ இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே இந்த உயரிய சபையில் எதிர்காலத்தில் வடக்கில் அபிவிருத்தி அடைந்த உள்ளூராட்சி சபைகளை அவற்றின் வருமானம், சனத்தொகை மற்றும் தகுதி விதிகளை முறையாக ஆய்வு செய்து பிரதேச சபைகளின் ஒரு பகுதியை நகர சபையாகத் தரம் உயர்த்துகின்ற அதேவேளை மற்றைய பிரதேசத்தைப் பிரதேச சபையாகத் தரம் உயர்த்தும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களாக அதாவது பிரதேச சபை, நகர சபை செயலாளர்களாக இலங்கை நிர்வாக சேவை தரத்தின் 3 ஆம் வகுப்பு ஆளணியினர் கடமை புரிந்தனர்.

தற்போது முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உள்ளவர்களே உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களாக உள்ளனர். இதனை உள்ளூராட்சி மறுசீரமைப்பு கொள்கையின் கீழ் வலுவடையச் செய்ய வேண்டுமாயின் மீளவும் இலங்கை நிர்வாக சேவை தரத்தில் உள்ளவர்களை நியமனம் செய்ய வேண்டும். இல்லாவிடில் பட்டதாரி தரத்துடன், பட்டப்பின் கல்வித் தகமைகள் உடைய பிரத்தியேகமான ஆளணியினராக வடக்கு உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி அலுவலர்களை அல்லது உள்ளூராட்சி உதவியாளர்களைச் செயலாளர்களாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே உண்மையான வளர்ச்சி - அபிவிருத்தியை வடக்கில் உள்ள பிரதேச சபைகள், நகர சபைகள் எய்தும் என்பது எனது ஆய்வின் மூலமான முடிவு. வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் முடிவும் இதுவே.



**வாகனங்கள்**

வடக்கில் கடந்த பெப்ரவரி 10இல் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுற்று 6 மாதங்கள் முடிவுற்றுள்ள நிலையில் சபையின் தவிசாளர் மக்களுக்கு முழுப்பணியாற்றுவதற்கு தேவையான டபிள்கப் வாகனம் இன்றி உள்ளமை பெரும் வருத்தத்துக்குரியது.

வடக்கில் இன்று தவிசாளர்கள் மக்கள் முன் சேவையாற்றுவதற்கான வாகனங்கள் வழங்கப்படாமை உள்ளூராட்சி மறுசீரமைப்புக் கொள்கை வலுவிழந்துள்ளமையைச் சுட்டிக் காட்டுகின்றது.

**குடிதண்ணீர்**

வடக்கில் 34 உள்ளூராட்சி சபைகள் உள்ள போதும் அங்குள்ள சபைகள் மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்குப் போதுமான தண்ணீர் மூலாதாரவளங்கள் இன்மை பெருங் குறையாகும்.

இதனாலேயே யாழ்ப்பாணம்கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டம், மருதங்கேணி கடல்நீரைச் சுத்திகரித்துக் குழாய் மூலமாக வழங்கப்படும் இரு திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு நிறைவேறாத தன்மை காணப்படுகின்றது.

இதற்கு மாற்றீடாகக் கிடைக்கின்ற நீர் மூலதாரங்களைக் கொண்டு மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் சில பிரதேச சபைகளை விலக்கி ஏனைய 23 பிரதேச சபைகளுக்கு டிராக்டர் பவுசர், லொறி பவுசர் வாகனங்கள் ஒவ்வொன்றும் 8 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடையதாக வழங்கப்பட வேண்டும்.

**கழிவகற்றல்**

இதனைவிட திண்மக் கழிவு முகாமைத்துவம், குப்பையகற்றும் திட்டத்தை முன்னெடுத்து டெங்கு அற்ற பிரதேசங்களை முன்னெடுப்பதற்காக பெட்டியுடன் கூடிய டிரக்டர்கள், கொம்பக்ரர்கள், மலக்கழிவுகளை உறிஞ்சும் பவுசர்கள், அதனைச் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் என்பன முதற்கட்டமாக வழங்கப்படுதல் வேண்டும்.

ஆளணிகள் உள்ள சபைகள் வீதி மீள்சீரமைப்பில் ஈடுபட்ட வேண்டுமாயின் அதற்கான மோட்டார் கிறைண்டர், டிராக்டர், ஜெசிபி, றோலர், வைபரேற்றர் என்பன ஆய்வு செய்து வழங்கப்படவேண்டும்.

இவ்வாறான உள்ளூராட்சி சபைகள் வலுவுள்ளதாக மாற்றம் பெற வாகனங்கள் சுத்திகரிப்பு இயந்திரங்கள், பொறித்தொகுதிகள் என்பன முக்கியமானவை.

**கட்டாக்காலிகள்**

வடக்கில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் வகைதொகையின்றி அதிகரித்துள்ளது. வடக்கில் அரச மருத்தவமனைகளில் தினமும் 130 முதல் 210வரையிலானோர் விசர் நாய்க்கடிக்கு இலக்காகி வருகின்றனர்.

சிலர் நாய்கடியால் இறந்துள்ளனர். இவற்றை நாம் புள்ளிவிபர ரீதியாக வழங்கலாம்.

எனவே கட்டாக்காலி நாய்களை இல்லாதொழிப்பதற்கு அல்லது கட்டக்காலி நாய்களைப் பிடித்து பொதுவான சரணாலயங்களில் பாதுகாப்பதற்கு மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். (4)

# யாழ்.நகரில் இளையோர் தேசிய மாநாடு

கொடிகாமம், செப். 26

இளையோர் தேசிய மாநாடு யாழ்ப்பாண நகரிலுள்ள ரில்கோ மாநாட்டு மண்டபத்தில் இன்று மதியம் ஒரு மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

நல்லிணக்க செயன்முறையில் இளையோரை வலுப்படுத்த விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் இதனை நடத்துகிறது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் திருமதி சுகுணவதி தெய்வேந்திரமும், மதிப்புறு விருந்தினராக விழுது நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி மைத்திரேயி இராஜசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் விருந்தினர் உரைகளும், கலந்துரையாடல்களும் கருத்துப் பகிர்வுகளும், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் , இளைஞர்கள் தொழிற் கல்வியைத் தொடர்வதில் எதிர் கொள்ளும் சவால்கள், வலிகாமம் மேற்கு பிரதேச சபைப் பிரிவில் அரசியல் பங்கேற்பில் பெண்கள் எதிர் கொண்ட சவால்கள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் மேம்பாட்டில் சமூக மட்ட அமைப்புகளின் வகிபாகம் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

அமர்வு இரண்டில் முசலியில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் சமூக பொருளாதார பிரச்சினைகள், போருக்குப் பின்னர் திருகோணமலை இராஜவரோதயா பிரதேசத்தில் நுண்நிதிக் கடன் பெற்ற பயனாளிகளும் வழங்குநர்களும் எதிர்கொள்ளும் சவால்கள், சாவகச்சேரி உதயசூரியன் கிராமத்தில் வாழும் நகர சுத்திகரிப்பு தொழிலாளர்களின் குடும்பங்களின் உள சமூக பொருளாதார சவால்கள், அரசியல் கற்கை நெறி மாணவர்கள் மற்றும் அரசியலில் போட்டியிட்ட பெண்களுக்கான சான்றிதழ் மற்றும் விருது வழங்கல் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4,159)

# சுகாதார அமைச்சு அதிரடித் தீர்மானம் மருத்துவர்களுக்குச் சம்பளம் இல்லை

கொழும்பு, செப் 26
இடமாற்றம்வழங்கப்பட்ட இடங்களில்பணிக்கு செல்லாத மருத்துர்கள் மற்றும் தாதிமார்களுக்குறிய சம்பளத்தை இடைநிறுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
போசாக்கு, சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்ராஜிதசேனாரத்னசுகாதாரச்செயலாளர் பீ.ஜீ.எஸ். குணதிலகவுக்கு இவ்வாறு அறுவுறித்தியுள்ளார். இடமாற்றம்வழங்கப்பட்டுள்ள மருத்துவர்கள் மற்றும் தாதிமார்களை அவர்களுடையபழையபணி இடத்திலிருந்து விடுவிக்காதமருத்துவமனைப்பணிப்பாளர்கள்தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் ஆலோசனைவழங்கியுள்ளார்.
அத்துடன் மருத்துவமனைக்கு வழங்கப்படுகின்ற நிதியுதவிகளை இடைநிறுத்துவதுடன், மருத்துவமனைப் பணிப்பாளர்களுக்கு பதவி உயர்வு, நிர்வாக திறமைகளுக்கு புள்ளி வழங்குதல் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
கொழும்பு நரஹேன்பிட்டி தேசிய குருதிப் பரிமாற்ற மையத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சர் இந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

## தேர்த்திருவிழா


வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மட்டக்களவு கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 30ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். அன்றைய தினம் சுவாமி தேரில் ஆரோகணித்த வேளை ஆலய முதன்மை மண்டபத்தில் கலாபூசணம் க. லோகேஸ்வரனின் திருமுறையரங்கு பக்க வாத்தியசகிதம்இடம்பெறும். (50)

## மகிந்தவை குழுவில் சேர்க்க ஜஸ்மின் சூக்கா எதிர்ப்பு!

கொழும்பு, செப் 26
காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் பரிந்துரைகளைஆராயும்உபகுழுவுக்குஅமைச்சர்மகிந்த சமரசிங்க நியமிக்கப்பட்டமையை பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா விமர்சித்துள்ளார்.
காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தை இலங்கை அரசு குறைத்து மதிப்பிடும் விதத்தில் மகிந்த சமரசிங்கவின் நியமனம் அமைந்திருப்பதாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,
போர்க் குற்றம் இடம்பெறவில்லை, பலவந்த காணாமல் போதல்கள் இடம்பெறவில்லை என மறுதலித்த அரசியல் வாதிகளைஉபகுழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு கால எல்லை எதுவும் சுட்டிக் காட்டப்படாத நிலையில், உபகுழுவை அமைத்திருப்பது காலத்தை இழுத்தடிக்கும் உள்நோக்கமாக இருக்கலாம்.
இலங்கையின் பொறுப்புக் கூறும் விடயத்தில் பன்னாட்டு சமூகத்துக்கு காணப்படும் ஒரேயொரு நம்பிக்கையாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் காணப்படுகிறது.
இதுபோன்றநியமனங்கள்கேலிக்கூத்தாகஅமைகின்றன.
காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கையில் ஈராக்குக்கு அடுத்ததாக அதிகமானவர்களைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுகிறது.
இவ்வாறான நிலையில் பொறுப்புக் கூறும் விடயத்தில் இலங்கை அரசு தனது முயற்சிகளை துறந்துவிடாமல் நம்பிக்கையுடன் முன்னெடுக்கும் சூழலையே ஏற்படுத்த வேண்டும்என்றும்நீதிக்கான்செயற்றிட்டத்தின்நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா கூறியுள்ளார்.

# 8 ஆயிரம் கோடியை இலங்கைக்கு வழங்குகின்றது அமெரிக்கா

**கொழும்பு, செப் 26**
**இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்காக ஐக்கிய அமெரிக்காவின் மில்லேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் 8 ஆயிரம் கோடிநிதியுதவியைவழங்க முன்வந்துள்ளது.**



ஐக்கிய நாடுகள் சபையின் 73 ஆவது பொதுச்சபை அமர்வில் உரையாற்றுவதற்காக நியூயோர்க்கிற்கு பயணம்செய்துள்ள அரசதலைவர்மைத்ரிபால சிறிசேனவுக்கும் கூட்டுத்தாபனத்தின் முதன்மைநிறைவேற்று அதிகாரி விறோக் வீர்மனுக்குமிடையில் சந்திப்பு இடம்பெற்றது..
இந்த நிதியுதவியை வழங்குவதற்கான வரைவு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதுடன், விரைவில் அதனை அமெரிக்க செனட் சபையின்அனுமதிக்காகமுன்வைக்கவுள்ளதாகவும் கூட்டுத்தாபனத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
செனட் சபையின் அனுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் கொழும்பில் வைத்துஉடன்படிக்கையில் கைச்சாத்திட எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அவர், அச் சந்தர்ப்பத்தில் அரச தலைவர்மைத்ரிபாலசிறிசேனவும்பங்குபற்றுவாராயின் தாம் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகவும்தெரிவித்தார்.
அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டஅரசதலைவர்மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய அமெரிக்க அரசின் நீண்ட காலமாக இலங்கைக்கு வழங்கிவரும் அபிவிருத்தி உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.
இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் இந்த நிதியுதவி தொடர்பில் பாராட்டு தெரிவித்த அரச தலைவர், இலங்கை பயணிகள் போக்குவரத்து சேவையின் அபிவிருத்திக்கும்போக்குவரத்துநெரிசலைக் குறைப்பதற்குமான புதிய செயற்திட்டமொன்றை அமுல்படுத்த இந்தநிதியைமுதலீடுசெய்யஎதிர்பார்ப்பதாகவும்தெரிவித்தார்.


# அரசியல்கைதிகளைத்தாமதிக்காது விடுதலை செய்யவேண்டும்

*நீதி அமைச்சரிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகோள்*

கொழும்பு, செப். 26
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை தாமதிக்காது விடுதலை செய்யுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரளவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சிறப்புச் சலுகை காட்டி விடுவிக்க முடியாதுஎன்றுநீதிஅமைச்சர் வெளியிட்ட கருத்துதொடர்பில்தமிழர்விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரிவெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
“நீண்ட கால கைதிகளின் விடுவிப்பு” என்ற தலைபிலான அந்த அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டதாவது,
சிறைச்சாலைக்குள் தமது விடுதலையைக் கோரி உண்ணாவிரதம் இருப்போரின் துயரம் யாதெனில், நீண்ட காலமாக தாம் எதுவித விசாரணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளமையே.
அதிகாரிகளின் குறிப்பாக நீதி அமைச்சர் என்ற வகையில் உங்களது அதிகவனத்திற்கு எடுக்க வேண்டிய விடயம்யாதெனில், கடந்தகாலத்தில்கடும் குற்றச் செயலில ஈடுபட்டு குற்றவாளியாக இனம்கண்டுசாவுத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள், பல்வேறு காரணங்களினால் அவர்களின் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு 14 ஆண்டுகளில் விடுதலையாவது சகஜம்.



அது மட்டுமல்லாமல் ஒழுக்கமாக செயற்பட்டமை மற்றும் பொது விடுமுறை நாள்கள் போன்றவற்றால் இத் தண்டனை ஆண்டுகள் மேலும் குறைக்கப்பட்டு, விடுதலையாவது வழமையாக இருந்து வந்துள்ளது.
நீதி அமைச்சர் அம்மையாராகிய உங்களிடம் நான் கேட்டுக்கொள்வது, மேலும்தாமதிக்காதுதடுப்பில் உள்ளவர்களின்உறவுகளுக்குரிய அனுதாபத்துடன் இந்தப் பிரச்சினையை அணுகுமாறு வேண்டுகிறேன்.
இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் சந்தேகநபர்கள், குற்றம் சாட்டப்பட்டவர்கள்மற்றும்குற்றவாளிகளாக இனம் காணப்பட்டவர்களைக்கூட விடுதலைசெய்யமுடியும் என்பதைஉலகம்முழுவதும்அறியும்.
எல்லாவற்றிற்கும் மேலாக, தடுப்பில் உள்ளவர்களின்மனைவி, மக்கள்பல வருடங்களாக எத்தனை துன்பங்களையும், கஸ்டங்களையும்அனுபவிக்கின்றனர்என்பதைஓர்தாயாகநீங்கள் நன்கு அறிவீர்கள். எனது விண்ணப்பம்யாதெனில், மனிதாபிமான அடிப்படையில் பயங்கரவாத சட்டத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த விடயம்இயற்கையானநீதிக்குஉட்பட்டதாகஅமையவேண்டும்என்பதேயாகும். என்று தெரிவிக்கப்பட்டது.



இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கனடாவின் தலைமை அமைச்சர் ஜஸ்டின் ரூடோவை சந்தித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் 73ஆவது பொதுச்சபை கூட்டத்தொடருக்கு சமாந்தரமாக இடம் பெறும் நெல்சன் மண்டேலா சமாதான மாநாடானது அனைத்து அரச தலைவர்களின் பங்குபற்றலுடன் நேற்றுமுன்தினம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் ஆரம்பமானது. இந்த மாநாட்டின் போதே இவர்களுக்கிடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

# இலங்கையில் போர் இலக்குகளை இலகுவாகக் கைப்பற்றும் இந்தியா

## விமல் வீரவன்ச கொதிப்பு

**கொழும்பு, செப். 26**
**இந்தியா தனது போர் இலக்குகளை, இலகுவாக அடைந்து கொள்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார். திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில், தேசிய சுதந்திர முன்னணியால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையொன்றிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.**



அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் மிக முக்கிய அம்சங்களாக, அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள வானூர்தி நிலையம் என்பன காணப்படுகின்றன. அண்மையில் முகத்துராஜவெல பகுதியில் இடம்பெற்ற எண்ணெய்க் குழாய் வெடிப்பாலும், அளவுக்கு அதிகமான கனிய எண்ணெயைக் களஞ்சியப்படுத்த முடியாது என்ற காரணத்தாலும், திருகோணமலையில் 99 எண்ணெய்த் தாங்கிகளுடன் அமைந்துள்ள கட்டமைப்பின் முக்கியத்துவமும் உணரப்பட்டுள்ளது.
ஒரு துளி எண்ணெய் கூட உற்பத்தி செய்யப்படாத இலங்கை போன்ற நாடுகளுக்கு, களஞ்சிய வசதிகளே மிகவும் அவசியம். போர், பொருளாதார ரீதியில், திருகோணமலைத் துறைமுகம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததென்பது, அதைக் கையகப்படுத்திக்கொள்ள இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகளிலிருந்தே தெரியவருகிறது. இலங்கை இந்திய ஒப்பந்தத்திலும், இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டுக்கும், திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இலங்கை வழங்கக் கூடாதென வலியுறுத்தப்பட்டுள்ளது.
இந்த ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டதைத் தொடர்ந்து, திருகோணமலைத் துறைமுகத்தின் எண்ணெய்த் தாங்கிகளைகையகப்படுத்தும்முயற்சிகளை இந்தியா மேற்கொண்டிருந்தாலும், 2003ஆம் ஆண்டில் 850 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள எண்ணெய்த் தாங்கிகளுடன் கூடிய நிலப்பரப்பு, இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாகவே கையளிக்கப்பட்டது. எவ்வாறாயினும், தற்போது மேற்படி எண்ணெய்த் தாங்கிகள், இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு, கேள்விமனுக் கோரப்படாமலேயே வழங்கப்பட்டுள்ளன. அரசின் குறுகிய செயற்பாடுகளால், இந்தியா தனது போர் ரீதியான இலக்கை இலகுவாக அடைந்து கொண்டுள்ளது. அதனால் நாட்டில், வலுச் சக்தி வளங்களைப் பாதுகாப்பதில் நெருக்கடி ஏற்படும்" - என்றார்.

## திருமண மண்டபத்தில் காதலன் அலறி அடித்து ஓடிய மணமகன்

கொழும்பு, செப் .26
திருமண நிகழ்வொன்றில் மணமகளின் முன்னாள் காதலன் திடீரென மண்டபத்துக்குப் பிரசன்னமானதால் குழப்பநிலை ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் தம்புள்ளை நகரப் பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரின் திருமண நிகழ்விலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
திருமண மண்டபத்துக்குச் சென்ற நபர் ஒருவர் திருமணத்தை குழப்பும் விதமாக கூச்சலிட்டுள்ளார். மணமகள் தனது முன்னாள் காதலி எனவும், அவருடன் சேர்ந்து எடுத்த புகைப்படங்களையும் சபையில் காண்பித்து கோசமிட்டதுடன் திடீரென பாய்ந்து சென்று மணமகனையும் தாக்கியுள்ளார்.
இதனையடுத்து அந்த மண்டபத்தில் கடும் பதற்ற நிலை உருவானதுடன் மணமகன் உடனடியாக தனது உறவினர்களுடன் அந்த மண்டபத்தை விட்டு வெளியேறியுள்ளார்.
தொடர்ந்து குழப்பத்தை ஏற்படுத்திய நபர் பெண் வீட்டாரால் எச்சரிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## புலனாய்வு அறிக்கைகளுக்கு அமையவே பாதுகாப்பு

### இலங்கை இராணுவத் தளபதி



கொழும்பு, செப். 26
புலனாய்வுப் பிரிவுகள் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கும் மதிப்பீடுகளின் அடிப்படையில்தான், அச்சுறுத்தல் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார். கொழும்பில் வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்று எழுப்பியிருந்த கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்ச தமக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு கோரியுள்ள நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், ஒருவருக்கான பாதுகாப்பை வழங்குவது அல்லது விலக்குவது தொடர்பில் ஒருதலைப்பட்சமாக முடிவு எடுக்கப்படுவதில்லை."- என்றார்.



## வெற்றிலை விலை 10 ரூபாவால் அதிகரிப்பு


கொழும்பு, செப் 26
உற்பத்தி விலை அதிகரிப்பின் காரணமாக வெற்றிலையின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதற்கமைய 30 ரூபாவுக்கு விற்கப்படும் 'வெற்றிலை கூறு' 40 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு, விற்பனையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.
வெற்றிலைக்கான உற்பத்தி செலவு அதிகரிப்பு காரணமாக, வெற்றிலையைக் குறைந்த விலைக்கு விற்பதால், அதிக இழப்பு ஏற்படுவதை கருத்திற் கொண்டே வெற்றிலையின் விலையை அதிகரிக்கத் தீர்மானித்ததாகவும் வெற்றிலை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை விவகாரத்தில் அடுத்து என்ன?

### ஐ.நாவில் இடம்பெற்ற உப மாநாடு!



கொழும்பு, செப் 26
இலங்கைக்கு வழங்கப்பட்ட காலஅவகாசம் முடிவடையவுள்ள நிலையில் அனைத்துலகத்தின் அடுத்த நிலைப்பாடு என்ன? என்பதனை கேள்விக்குட்படுத்தும் வகையில் உப மாநாடு ஐ.நா மனித உரிமைச் சபையில் இடம்பெற்றது.
நாடுகடந்த தமிழீழ அரசு, அனைத்துலக ஈழத்தமிழர் அவை ஆகியன பசுமைத்தாயகம் ஊடாக இந்த மாநாட்டை ஒழுங்கு செய்திருந்தன. ஆங்கிலம்பிரென்சு மொழியில் இடம்பெற்றிருந்த இம்மாநாட்டில் பிரான்சு, தமிழ் இளையோர் அமைப்பினால் உருவாக்கப்பட்ட காணொலிவிபரணம்ஒன்றுதிரையிடப்பட்டது.
அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையை பாரப்படுத்துவன் ஊடாகவே இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பொறுப்புக்காண வைக்க முடியும் என்ற கருத்து அனைத்துலக நாடுகளாலும் முன்வைக்கப்பட்டது.





## இறுதிக்கட்டப் போர் ஒத்திகை குச்சவெளியில் இன்று

கொழும்பு, செப். 26
இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில், முப்படைகளும், வெளிநாட்டுப் படையினரும் இணைந்து பங்கேற்று வரும், நீர்க்காகம் கூட்டுப் பயிற்சியின் இறுதித் தாக்குதல் ஒத்திகை திருகோணமலை குச்சவெளி கடற்கரையில் இன்று இடம்பெறவுள்ளது. கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகிய நீர்க்காகம் 9 கூட்டுப் பயிற்சி இன்று நிறைவடையவுள்ளது.
இந்த இறுதிக்கட்டத் தாக்குதல் ஒத்திகையில், இலங்கையின் 2 ஆயிரத்து 500 இராணுவத்தினர், 400 கடற்படையினர், 200வானூர்திப்படையினரும், பங்களாதேஷ், சீனா, இந்தோனேசியா, நேபாளம், நைஜீரியா, பாகிஸ்தான், சூடான், துருக்கி, சாம்பியா, ஆகிய நாடுகளின் படையினரும் பங்கேற்கவுள்ளனர். படைகளின் போரிடும் திறனை உயர்த்தும் வகையில் இந்தப் பயிற்சி இடம்பெறுவதாக மேஜர் ஜெனரல் நிசங்க ரணவான தெரிவித்தார்.

# அமைதிப் பேச்சில் பாகிஸ்தான் ஆர்வம் காட்டுவதை பலவீனமாகக் கருத வேண்டாம்

## இம்ரான் கான் காட்டம்



இஸ்லாமபாத்.செப்.26

அமைதிப்பேச்சுக்குறித்துப்பாகிஸ்தான் ஆர்வம் காட்டுவதை இந்தியா பலவீனமாகக் கருத வேண்டாம் என்று அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின்தலைமைஅமைச்சராகஇம்ரான்கடந்தமாதம்பதவி ஏற்றதுமுதல், இந்தியா பாகிஸ்தான் இடையே மீண்டும் அமைதிப் பேச்சுக்கள் தொடர்வதற்கு வலியுறுத்திவருகிறார்.

இது தொடர்பாக இந்தியத் தலைமை அமைச்சர் மோடிக்கு அவர்கடிதம்ஒன்றையும்எழுதியிருந்தார்.

நியூயோர்க்கில் நடைபெறுகின்ற ஐ.நா சபைக்கூட்டத்தின் போது இந்தியாமற்றும்பாகிஸ்தான் அயலுறவுத்துறை அமைச்சர்கள் இடையே இது குறித்துப் பேச்சுக்களை நடத்துவதற்குத்தீர்மானிக்கப்பட்டிருந்தது.

2016ஆம் ஆண்டுக்குப் பிறகு குறித்த பேச்சானது மீண்டும் ஆரம்பமாக இருப்பது உலக நாடுகளிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது.

ஆனால், இந்தஅமைதிப்பேச்சிலிருந்து இந்தியா ஒதுங்கிக் கொண்டது. அப்படி ஒதுங்கியதற்கு காரணம், காஷ்மீரில் இந்தியப்பொலிசார் மூவரைக் கடத்திச் சென்று ஹிஸ்புல் தீவிரவாதிகள் சுட்டுக் கொலைசெய்திருக்கின்றனர். அத்துடன் இந்தியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆயுததாரி புர்ஹான் வானிக்கு இஸ்லாமாபாத்தில் தபால்த் தலை வெளியிடப்பட்டிருக்கிறதுஎன்பவற்றைஇந்தியத் தரப்புக் காரணங்களாகக் கூறியது. பேச்சைப் புறக்ணித்த இந்தியாவின்முடிவுஅகங்காரமுடையதும், எதிர்மறையானதும் என்று இம்ரான்கான்கடுமையாகவிமர்சித்தார்.

இப்போது அவர் பேச்சுக்கு மீண்டும் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார். அத்துடன் அவர், "பாகிஸ்தானின் அமைதிப் பேச்சுக் குறித்த முடிவை இந்திய பலவீனமாகக் கருத வேண்டாம்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

# வடகொரியாவுடன் இரண்டாவது சந்திப்பு!



வோசிங்டன்.செப்.26

வடகொரியாவின் அதிபர் கிம் ஜோங் உன்னுடன் விரைவில் இரண்டாம் கட்டச் சந்திப்பு இடம் பெறும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 73ஆவது கூட்டத் தின் போதுதென்கொரியஅதிபர்மூன் ஜே இன்னைச் சந்தித்து பேசிய பின் ட்ரம்ப் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

> நியூயோர்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 73ஆவது கூட்டத்தின்போது தென் கொரிய அதிபர் மூன் ஜே இன்னைச் சந்தித்து பேசிய பின் ட்ரம்ப் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

**பின்னணி**

உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி அணு குண்டுகளையும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் பல ஏவுகணைகளையும் பலமுறை பரிசோதித்ததால் வடகொரியா அமெரிக்காவின் கோபத்துக்கு ஆளாகிப்பொருளாதாரத் தடைகளைச் சந்தித்தது.

தென்கொரியா எடுத்த முயற்சியின் பலனாக எதிர் எதிர்க் கருத்துக்களைத் தெரிவித்து வந்த அமெரிக்க அதிபர் ட்ரம்பும், வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன்னும் ஜூன் மாதம் சிங்கப்பூரில் சந்தித்துப் பேசினர். அந்தச் சந்திப்பின்போது, கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதமற்ற பிரதேசமாகமாற்றுவதற்குக்கிம்ஜோங் உன் உறுதி அளித்து ட்ரம்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.


அதன் பின்னர் வடகொரியா அணுகுண்டுகளையோ, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையோ சோதித்துப் பரீட்சித்துப் பார்க்கவில்லை.

அத்துடன்இந்தமாதஆரம்பத்தில் நடைபெற்ற வடகொரியாவின்; 70ஆவது ஆண்டு விழாவில் கண்டம்விட்டுக்கண்டம்பாய்ந்து தாக்கும் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்கள் இல்லாமல் இராணுவ அணிவகுப்பு இடம் பெற்றிருந்தது.

தொடர்ந்து மூன்று நாள் பயணமாக தென் கொரிய அதிபர் மூன் ஜே இன்னும் அவருடைய துணைவியாரும் வட கொரியாவுக்குச்சென்று வந்தனர்.

இந்தப்பயணத்தின்போதுட்ரம்ப்புக்கு, கிம் ஜோங் உன் எழுதிய இரகசிய கடிதம் மூன் ஜே இன் வாயிலாக வெள்ளை மாளிகைக்குக்கொண்டுசேர்க்கப்பட்டது.

அணு ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாகக் கடிதத்தீல் குறிப்பிட்டுள்ள கிம் ஜோங் உன், "ட்ரம்ப்பை மீண்டும் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்" என அந்தக் கடிதம் குறித்து வெள்ளை மாளிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.



# 400 ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கிய கப்பல் கண்டுபிடிப்பு

லிஸ்பன்.செப்.26

போர்த்துக்கல் நாட்டுக் கடலில் 400 ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கிய கப்பல் லிஸ்பனின் புறநகரான கஸ்காயிஸ் கடற்கரைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

400 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் இருந்து நறுமணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு போர்த்துக்கலுக்குச் சென்ற கப்பல் லிஸ்பன் அருகே கடலில் மூழ்கியிருந்தது.

அதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆழ்கடல் நீச்சல்காரர்கள் ஈடுபட்டிருந்தனர். தற்போதுதான் அந்தக் கப்பல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கப்பலின் உடைந்த பாகத்தில் 40அடி ஆழத்தில் நறுமண பொருள்கள், 9 பித்தளைப் பீரங்கிகள், போர்த்துக்கேயர்கள் பயன்படுத்தும் ஆடை அலங்காரக் கருவிகள், சீன மாபிள் பொருள்கள், அடிமைகளை விலைக்கு வாங்குவதற்குப் பயன்படுத்தும் ரூபாய் நோட்டுகள் போன்றவை இருந்தன.

கி.பி.1575, 1625ஆண்டுகளுக்கு இடையில் போர்த்துக்கல் நாட்டுக்கும், இந்தியாவுக்கும்இடையேநறுமணப்பொருள்கள்வர்த்தகம்உச்சக் கட்டத்தில் இருந்துள்ளது. அப்போதுதான் இந்தக் கப்பல் மூழ்கியிருக்க வேண்டும் என நிபுணர்கள் கணித்துள்ளனர்.




அட்டேபிரிபெக்சரிலுள்ளகொக்டொகேசுரங்கப்பகுதியில்பருவநிலைமாற்றம்காரணமாகஇடம்பெயரும் ஆட்டு மந்தைக் கூட்டம் இது. சீனாவின் எக்ஸிஜிபாங் என்ற பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

## சீனப் பொருள்களுக்குப் புதிதாக வரி

# “வர்த்தகப்போரில்நாங்கள்தான் வெல்லப் போகிறோம்”

## அமெரிக்கா சவால் - சீனா பதிலடி





நியூயோர்க்.செப்.26
இரண்டு பெரும் வல்லரசு நாடுகளான அமெரிக்காவும்சீனாவும்கடந்த சில காலமாக வர்த்தகப்போரில் ஈடுபட்டு வருகின்றன. இரண்டு நாடுகளும் ஒன்றிலிருந்து மற்றொன்றுஇறக்குமதிசெய்யும்பொருள்களுக்கு தலா 50 பில்லியன் டொலர் (கிட்டத்தட்ட ரூ.9 இலட்சம்) அளவுக்குக் கூடுதல் வரி விதித்து அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன் தொடங்கிய இந்த மோதல் தற்போது மேலும் தீவிரமடைந்து வருகிறது. அதாவது இரண்டு நாடுகளும் பரஸ்பரம் புதிய வரி அறிவிப்பை வெளியிட்டுள்ளன. அதன்படி சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு 200பில்லியன் டொலர்கள் வரை அமெரிக்கா வரிவிதித்து உள்ளது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும்மின்துடைப்பான்முதல்இணையத்தளக் கருவிகள் வரை இந்த வரிவிதிப்புக்கு உட்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் சீனாவுடனான வர்த்தகப் போரில் நாங்கள்தான் வெல்லப் போகிறோம் என்று அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ தெரிவித்துள்ளார்.

ஆனால், அமெரிக்காவிலிருந்து சீனா இறக்குமதி செய்யும் திரவ இயற்கை எரிவாயு முதல் குறிப்பிட்ட ரக விமானங்கள் வரையிலான் பொருள்களுக்கு 60பில்லியன் டொலர் வரையில் புதிய வரி விகிதத்தைச்சீனாஅறிவித்துஉள்ளது. இவ்வாறு இரண்டு நாடுகளும் தங்களுக்கு இடையேயான வர்த்தக மோதலைத் தீவி ரப்படுத்தி இருந்தாலும், இதை முடிவுக்கு கொண்டு வருவது குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்படும் என அமெரிக்கத் தரப்பினர் குறிப்பிடுகின்றனர். தொடர்ந்து இரண்டு நாடுகளும் மாறி மாறி இறக்குமதிப் பொருள்களுக்கு வரியை உயர்த்தி வருகின்ற சூழ்நிலையில் பல உள்நாட்டு நிறுவனங்களும், பன்னாடுகளின் வர்த்தக நடவடிக்கைகளும் பாதிப்படைந்துபோயிருப்பது குறிப்பிடத்தக்கது.



## பெண்கள் உரிமைகள் மீண்டுவருகின்றன– சவூதி

சவூதி அரேபியாவின் முதல் பெண் செய்தியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார் வீம் அல் தஹீல். சவூதியின் தொலைக்காட்சி ஊடகமான'ஹலீஜ்ரைம்ஸ்'இல்மாலைநேரவிரைவுச் செய்தி வாசிக்கும் செய்தி வாசிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார் வீம்.

இதைத் தொடர்ந்து சமூக வலைதளங்களில் அவருக்குவாழ்த்துகள்குவிந்துவருகின்றன. பெண்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள சவூதியில் சமீபகாலமாகச் சவூதி இளவரசர் முகமது பின் சல்மான் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

பெண்கள் கார் ஓட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நாடாக சவூதி அரேபியா இருந்து வந்தது. இந்தத் தடைக்கு எதிராக அங்குள்ள பெண்கள் அமைப்புகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தன. இந்தத் தடைக்கு எதிராக8பெண்கள்கைதுசெய்யப்பட்டுசிறையில் அடைக்கப்பட்டு இருந்தனர்.

இந்த நிலையில் சவுதி அரேபியாவில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பெண்கள் கார் ஓட்ட விதிக்கப்பட்டு இருந்த தடை அண்மையில் நீக்கப்பட்டது.

மேலும், வி஌ளயாட்டுமைதானங்களுக்குள் பெண்களுக்கான அனுமதியும் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சவூதியின் வானூர்திகளில் துணை விமானிகளாகச்சவூதிப்பெண்களுக்குவாய்ப்புவழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# உலகின் முதல் தானியங்கி ‘ற்ராம்’

பெர்லின்.செப்.26
உலகின்முதல்தானியங்கி'ற்ராம்'வண்டியை(அமிழ்தண்டூர்தி - வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள அமிழ்தண்டவாளத்தின் மீது செல்லும் உந்துகல ஊர்தி) அறிமுகப்படுத்துகிறது ஜேர்மனி. பல்வேறு ராடர் கருவிகள், கமரா சென்ஸார்கள் பொருத்தப்பட்டிருக்கும் இந்த 'ற்ராம்' வண்டியின் வெள்ளோட்டம், மேற்கு பெர்லின் அருகில் உள்ள போஸ்ட்டாம் நகரில் அண்மையில் வெற்றிகரமாக இடம்பெற்றிருந்தது.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் இயங்கும் இந்த 'ற்ராம்' வண்டி, இருப்புப்பாதையின் சமிக்ஞைகளைச்சரியாகப் புரிந்துகொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. பாதசாரிகள், வாகனங்கள் குறுக்கிடும்சமயங்களில்இந்தற்ராம் மனிதர்களைவிட அதி வேகமாகச் செயல்பட்டு வேகத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ளும்.

ஜேர்மன் நிறுவனமான ‘சீமென்ஸ்’ தயாரிக்கும் இந்த வண்டியை, கணினிப் பொறியாளர்கள், கணிதவியலாளர்கள், இயற்பியல்அறிஞர்கள்எனப்பலருமாகஇணைந்துஉருவாக்கியிருக்கிறார்கள்.





# சிரியாவுக்குப் புதிய எஸ்300 ரக ஏவுகணைகள் ரஷ்யா வழங்குகிறது; இஸ்ரேல் எதிர்க்கிறது


மொஸ்கோ.செப்.26
உயர்தொழில்நுட்ப வான் பாதுகாப்பு ஏவுகணைகளான எஸ்300 ரக ஏவுகணைகள் இரண்டுவாரத்துக்குள்சிரியாவுக்குவழங்கப்படும்எனரஷ்யப்பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

சிரியாவில்நடந்துவருகின்றஉள்நாட்டுப்போரில்சிரிய அரசபடைகளுக்குரஷ்யாஆதரவு அளித்துவருகிறது. கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள பகுதிகளில் அவ்வப்போதுவிமானத்தாக்குதலும்நடத்திவருகிறது. மாறாக இஸ்ரேல்ஏவுகணைகள் மூலம்சிரியாமீதுதாக்குதல் நடத்திவருகிறது. அந்தஏவுகணைகளைச்சிரியஅரசு படைகள் இடைமறித்துச் சுட்டு வீழ்த்துகின்றன.

இந்தப் பதற்றமான சூழ்நிலையில், சிரியாவின் லடாக்கியா மாகாணத்தில் கடந்த 17ஆம் திகதி ரஷ்யாவுக்குச் சொந்தமான போர் விமானம் ஒன்றைச் சிரிய அரசுதவறுதலாகச் சுட்டு வீழ்த்தியது. இதில், விமானத்தில் பயணம் செய்த 15 இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்தனர்.

இந்த நிலையில்தான் சுமார் 300 கிலோ மீற்றர்கள் தொலைவு வரை பாய்ந்து சென்று ஏவுகணைகளை வழிமறித்துஅழிக்கும்திறன்கொண்டஉயர்தொழில்நுட்ப எஸ்300 ரக ஏவுகணைகளை இரண்டு வாரங்களுக்குள் சிரியாவுக்கு வழங்கப்படும் என ரஷ்யப் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. 2016ஆம் ஆண்டு இவ்வகை ஏவுகணைகளைச் சிரியாவுக்கு வழங்கரஷ்யாமுயன்றபோது,இந்தஏவுகணைகளை தங்கள்நாட்டுக்குஎதிராகச்சிரியாபயன்படுத்தக்கூடும் என இஸ்ரேல் கோரிக்கை தெரிவித்ததால் அந்த முடிவைரஷ்யாகைவிட்டிருந்தது. ஆனால், இப்போது அந்த ஏவுகணைகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

உயர்தொழில்நுட்பஏவுகணைகள்பொறுப்பற்றவர்களின்கைகளில்கிடைத்தால்,அதைஅவர்கள்தவறாகப் பயன்படுத்தக்கூடும். எனவே, ரஷ்யாவின் முடிவால் இந்த பிரதேசம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்று இஸ்ரேல் தரப்பு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நினைவுகூர்தல் என்பது வெறும் நிகழ்வு மட்டுமா?

தியாக தீபம் திலீபனின் 31 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று கடைப்பிடிக்கப்படுகின்றது. ஏகப்பட்ட இடர்பாடுகளையும் தாண்டி தாயகத்திலும், புலத்திலும் நினைவுகூர்தல்கள் இடம்பெறுகின்றன.

தாயக தேசத்தில் போருக்கு முடிவுரை எழுதப்பட்ட பின்னர் நினைவுகூர்தலை நடத்துவது இன்னொரு போரை நடத்துவதற்குச் சமமானதாக இருந்தது. மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் மிக மிக இரகசியமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நினைவுகூரல்கள் இடம்பெற்றன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் நினைவுகூர்தல்கள் வெளிப்படையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

அத்தகைய நினைவுகூர்தல்களை நடத்துவது யார்? தலைமை ஏற்பது யார்? அங்கு பேசுவது யார்? என்ற பிடுங்குப்பாடுகளும் கூடவே வளர்ந்து விரிந்துவிட்டன. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின்போதும் இதேபோட்டி வியாபித்து நின்றது. தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலிலும் அதே நிலமையே தொடர்கிறது.

தற்போது கோயில்களில் திருவிழாக்கள் நடத்துவது ஒரு சடங்காக– விழாவாக – கொண்டாட்டமாக மாறி வருகின்றது. மதங்களின் போதனைகளை மதிப்பார் யாரும் இல்லை. மற்றவர்களில் அன்பு காட்டுங்கள், உண்மையாக இருங்கள் என்று மதம் போதிக்கும் நல்ல விடயங்கள் எவற்றையும் கருத்தில் எடுக்காது முறையற்ற வழிகளில் பணத்தைச் சம்பாதித்து அதை ஆலயங்களின் திருவிழாக்களுக்கு அள்ளிச் செலவு செய்தால் எல்லாம் சரியாகிவிடுமா?

அதேபோலவே, நினைவேந்தல்களை போட்டி போட்டுக் கொண்டு, நீ முந்தி நான் முந்தி என்று நடத்துவது சரியானதா? எந்த இலட்சியத்துக்காக தமது உயிர்களைத் துச்சமென்று மதித்துப் போராடினார்களோ – துறந்தார்களோ, அந்த இலட்சியத்துக்கு விசுவாசமாக இருக்கவேண்டாமா? அவர்கள் காட்டிய இலட்சியத்தின் வழியில் பயணிக்க வேண்டாமா? ஆகக் குறைந்தது அந்த இலட்சியவேட்கைக்கு குந்தகம் விளைவிக்காமலாவது இருக்கவேண்டாமா? நினைவேந்தலை நடத்தி அரசியல் செய்ய முனையும் அனைத்துத்தரப்புக்களும் – தனிநபர்களும் ஒருகணம் தங்கள் மனச்சாட்சியிடம் இதைக் கேட்டுப் பாருங்கள்.

ஏனெனில், 31 ஆண்டுகளுக்கு முன்னர் தியாக தீபம் திலீபன் முன்வைத்த, மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும். சிறைக் கூடங்களிலும், இராணுவ, பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும். அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும். தமிழர் பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்ற 5 அம்சக் கோரிக்கைகளில் முதலிரண்டு கோரிக்கைகளும் இன்றும் நிறைவேறாமல் தொடர்கின்றன. இதற்கு இவர்களும் பொறுப்பாளிகளே.

மகாவலி 'எல்' வலயம் என்ற பெயரில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்படுகின்றார்கள். இனப் பரம்பலை மாற்றியமைக்கும் விதத்தில் தொடரும் இந்தக் குடியேற்றங்களை நிறுத்தக் கோரி மக்கள் இன்றும் அறவழி – அகிம்சாவழிப் போராட்டங்களை நடத்திக்கொண்டே இருக்கிறார்கள். அரசியல் கைதிகள் தங்களை விடுவிக்கக் கோரி உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள். அதுவும் இரண்டு வாரங்களை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அவர்கள் ஐந்தாவது தடவையாக இந்த அகிம்சை ஆயுதத்தை ஏந்தியிருக்கிறார்கள்.

அகிம்சை வழிப் போராட்டங்களின் பிறப்பிடமாக தங்களை மார் தட்டிக் கொள்ளும் இந்திய தேசத்துக்கே, அகிம்சை என்றால் என்னவென்று உணர்த்தியவர்கள் நாங்கள். அதை மனதிலிருத்தி நினைவுகூர்தலை நடத்துவதே சாலப் பொருத்தம்.

# விக்னேஸ்வரனின் சுயரூபம் தெளிவாகி விட்டது...!

சேரலாதன்

வடக்கு மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அடுத்த முறையும் முதலமைச்சர் பதவி தொடர்பாகச் சிந்திப்பது தெரிகின்றது. அவ்வாறில்லாவிட்டால் கூட்டமைப்பின் தலைமை பதவி விலகினால் முதலமைச்சர் வேட்பாளராகக் கூட்டமைப்பின் சார்பில் களமிறங்குவேன் என அவர் கூறியிருக்கமாட்டார். கூட்டமைப்பையும் கூட்டமைப்பின் தலைமையையும் தாக்கிப்பேசி வருவதை அவர் வழக்கமாகக் கொண்டுள்ள நிலையில் தற்போது இத்தகைய கருத்தை அவர் வெளியிட்டுள்ளமை கவனத்துக்குரியது. கூட்டமைப்பின் தலைமையைப் பதவி விலகிவிடுமாறு அந்த அமைப்பைச் சேர்ந்த எவருமே கோரிக்கை விடுத்ததில்லை. முன்னர் கூட்டமைப்பில் இணைந்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவரும், சிவசக்தி ஆனந்தன் போன்றவர்களும் கூட்டமைப்பின் தலைமை தொடர்பாக எதிர்க் கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளனர். அவர்கள் இப்போது கூட்டமைப்பில் இல்லை. ஆனால் கூட்டமைப்பில் இருந்துகொண்டே அதை மோசமாக விமர்சித்து வருகிறார் விக்னேஸ்வரன்.

**கூட்டமைப்பில் இருந்து அவர் முதலில் விலகலாமே?**

மக்கள் பலம் தம்முடன் இருக்கும்வரையில் தம்மை எவராலும் அசைத்துவிட முடியாதென அவர் அடிக்கடி கூறி வருகின்றார். அவருக்கு எதிராகத் தமிழ் அரசுக் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது அவருக்கு ஆதரவாக மக்கள் கூட்டம் திரண்டிருந்தது உண்மைதான். ஆனால் அந்தக் கூட்டம் அவருக்கு உரியதல்ல. தமிழ் அரசுக்கட்சிக்கும், கூட்டமைப்புக்கும் எதிரான கூட்டம்தான் அது. இதை அவர் தவறாகப் புரிந்துகொண்டமை அவரது அரசியல் அனுபவமின்மையை எடுத்துக் காட்டுகின்றது. கூட்டமைப்பும், அதன் தலைமையும் சரியில்லையென்றால் அங்கிருந்து வெளியேறிவிடுவதற்கு அவர் ஏன் தயங்குகிறார்? அவர் இன்னமும் கூட்டமைப்பில் ஒட்டிக்கொண்டிருப்பது எவருக்குமே புரியாத மர்மமாக நீடிக்கின்றது.

**தனது செல்வாக்காகக் கருதமுடியுமா?**

2013ஆம் ஆண்டுத் தேர்தலில் வட பகுதி மக்கள் விக்னேஸ்வரன்தான் முதலமைச்சர் பதவியில் அமரவேண்டுமென ஒருபோதுமே கேட்டதில்லை. பெரும்பாலானவர்கள் அவரை அறிந்திருக்கவுமில்லை. கூட்டமைப்பின் தலைவர்தான் அவரை அரசியலுக்குள் கொண்டு வந்தவர் என்பது பலருக்கும் தெரிந்த விடயம். அவரொரு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் என்ற வகையில் அவர்மீது வடபகுதி மக்கள் நம்பிக்கை வைத்துத் தமது வாக்குகளை அமோகமாக அள்ளி வழங்கினார்கள். இதை விக்னேஸ்வரன் தனது சொந்தச் செல்வாக்காகக் கருத முடியுமா? தம்மிடம் நான்கு தெரிவுகள் இருப்பதாகவும் அவற்றில் ஒன்றை விரைவில் தெரிவு செய்யப் போவதாகவும் அவர் முன்பொரு தடவை தெரிவித்திருந்தார். அரசியலில் இருந்து ஒதுங்கி வீட்டில் ஓய்வெடுப்பது, தனிக்கட்சி தொடர்வது, வேறொரு கட்சியுடன் இணைந்து செயற்படுவது, தமிழ்மக்கள் பேரவையின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்து உழைப்பது ஆகிய நான்குமே அந்தத் தெரிவு க



ளாகும். தற்போது கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கப் போவதாகக் கூறுகிறார். அவரை இனியாவது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கூட்டமைப்பில் இருந்து விலகி விக்னேஸ்வரன் தம்முடன் இணைந்து செயற்படுவாரென அவர் கனவு காண்கிறார். ஆனால் விக்னேஸ்வரன் அவருக்கு அல்வா கொடுக்கும் வகையில் நடந்து கொள்கின்றார்.

> 2013ஆம் ஆண்டுத் தேர்தலில் வட பகுதி மக்கள் விக்னேஸ்வரன்தான் முதலமைச்சர் பதவியில் அமர வேண்டுமென ஒருபோதுமே கேட்டதில்லை. பெரும்பாலானவர்கள் அவரை அறிந்திருக்கவுமில்லை. கூட்டமைப்பின் தலைவர்; தான் அவரை அரசியலுக்குள் தள்ளிவிட்டவர் என்பது பலருக்கும் தெரிந்த விடயம். அவரொரு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் என்ற வகையில் அவர்மீது வடபகுதி மக்கள் நம்பிக்கைவைத்துத் தமது வாக்குகளை அமோகமாக அள்ளி வழங்கினார்கள்.

**பங்காளிக் கட்சிகள் கவனமெடுப்பது நல்லது**

கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சியினரும் தற்போதைய முதல்வரை நன்கு எடைபோட்டு வைத்திருக்க வேண்டும். அண்மையில் புளொட்டின் தலைவர் சித்தார்த்தன் கருத்து ஒன்றை வெளியிட்டிருந்தார். நாமே விக்கி னேஸ்வரனை முதலமைச்சர் பதவியில் அமர்த்திவிட்டு அவருக்குத் தொல்லை கொடுப்பது சரியல்லவென அவர் கூறியிருந்தார். ஆனால், பிரச்சினைகள் ஏற்படுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் விக்னேஸ்வரனே என்பதை அவர் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

கூட்டமைப்பின் தலைமையை மாற்ற வேண்டுமெனக் கூறுவதற்கு விக்னேஸ்வரனுக்குள்ள தகுதிப்பாட்டைப் பரிசீலிப்பதும் சிறந்தது. அந்தத் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு இவர் விரும்புகின்றாரோ என்றும் கருத வேண்டியுள்ளது. கூட்டமைப்பைத் தாங்கிப்பிடித்துள்ள மக்கள் இவரைத் தமது தலைவராக ஒருபோதுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆக, விக்னேஸ்வரனின் சுயரூபம் தற்போது தெளிவாகத் தெரிந்து விட்டது. அவரைத் தலையில்தூக்கி வைத்துக் கொண்டாடுகின்ற சிறுபகுதியினருக்கும் இது புரிந்தி ருக்குமென நம்பலாம்.

இந்துமதி

# தமிழர்கள் ஒன்றுபடாதவரை விமோசனம் கிடைக்காது

தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படாதிருந்தால் தனி ஈழம் என்ற சிந்தனை அவர்கள் மத்தியில் எழுந்திருக்க மாட்டாதென நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூறியுள்ளமை ஆட்சியாளர்களின் கவனத்துக்குரியது.


தற்போதும் தமிழர்களுக்குப் பல வகையிலும் அரசியல் நகர்வுகளால் அநீதிகள் இழைக்கப்பட்ட வண்ணம்தான் இருக்கின்றன. தமிழர்கள் எதிலும் முன்னிலை வகிக்கக்கூடாது என்பதை வேதவாக்காகக் கொண்டு பெரும்பான்மை இனவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். அரச நிர்வாக சேவையில் ஆட்களை இணைப்பதற்கான போட்டிப் பரீட்சையில் தமிழர்கள் அதிகம் சித்தியடைந்ததால் அந்தப் பரீட்சையை நீக்கம் செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக ஜே.வி.பி. நாடாமன்றத்தில் தெரிவித்ததாக ஒரு தகவல் வெளிவந்துள்ளது. தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுவது இதுதான் முதற் தடவையல்ல. தரப்படுத்தல் என்ற போர்வையின்கீழ் தமிழ் மாணவர்களின் கல்விசார் முன்னேற்றங்களை மந்தப்படுத்தியிருப்பதும் இந்த நாட்டில் நிகழ்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களில் பலர் ஆயுதப் போராட்டத்தில் இணைந்து கொள்வதற்கும் இதுவே காரணமாக அமைந்திருந்தது.




### மக்களிடையே பாகுபாடு. முரண்பாட்டைத்தோற்றுவித்தல்

மக்களிடையே இன ரீதியான பாகுபாடுகளைக் காட்டுவதும், அநீதிகளை இழைப்பதும் பாதிக்கப்பட்ட தரப்பினரைச் சீற்றமுறச் செய்துவிடும். இதனால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகள் மோசமானவைகளாக அமைந்துவிடும். நீண்ட கொடிய போர் இடம்பெறுவதற்கும் இதுவே காரணமாக அமைந்திருந்தது. இதனால் ஏற்பட்ட அழிவுகளில் இருந்து ஆட்சியாளர்கள் பாடங்களைக் கற்றிருக்க வேண்டும். ஆனால், அதிலிருந்து அவர்கள் தவறிவிட்டார்கள். இனப் பிரச்சினை நீண்டகாலமாகவே இந்த நாட்டில் காணப்படுகின்றது.

நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் இதுவே அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. இதனைப் போக்குவதற்கான சிந்தனை ஆட்சியாளர்களிடம் எழாமல் இருக்கும் வரையில் இனப்பிரச்சினை நீடிக்கத்தான் செய்யும்.



### நேர் எதிராகச் செயற்படும் தலைவர்கள்

சிங்கள மக்கள் போன்றுதான் ஏனைய சிறுபான்மையினரும் இந்த நாட்டின் மீது சம உரிமை கொண்டவர்கள். தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். இந்தச் சிந்தனையைப் பெரும்பான்மையின மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டும். இதில் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் ஆகியோரின் பங்கு அளப் பெரியதாக இருத்தல் வேண்டும்.



ஆனால் இதற்கு எதிர்மாறான சிந்தனையையே அவர்கள் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கும்? பெரும்பாலான சிங்கள மக்கள் சிறுபான்மை இனத்தவருடன் நல்லுறவுடன் பழகவும், வாழவும் விரும்புகின்றனர். ஆனால் இனவாதச் சிந்தனை கொண்டவர்களால் இவர்கள் திசை திருப்பப் படுகின்றனர். இதுவே இன மோதல்களுக்கும் காரணமாகி விடுகின்றது.

வடக்கிலிருக்கின்ற பௌத்த சின்னங்கள் அழிக்கப்படுவதாகத் தெற்கில் தீவிரமான பரப்புரைகள் இடம்பெற்று வருகின்றன. இதுவுமொரு இனவாதம் கலந்த செயல் என்பதைச் சொல்லத் தேவையில்லை. தமிழ்மக்களுக்கு எதிராகச் சிங்கள, பௌத்த மக்களைத் தூண்டி விடுவதே இதன் வஞ்சக நோக்கமாகும். இது தொடர்பாகத் தினேஸ் குணவர்த்தன போன்ற இனவாதிகள் நடந்ததை அறியாமல் கொக்கரிக்க ஆரம்பித்து விட்டனர். மக்களைத் தூண்டியும் வருகின்றனர். இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பாக இவர்கள் சிறிதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

### அரசியல் கைதிகளாகத் தமிழர்கள் சிறையில்

அரசியல் கைதிகள் என்ற பெயரில் தமிழர்கள் பலர் நீண்ட காலமாகச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற கொடுமை இந்த நாட்டில் தொடர்கிறது. அநுராதபுரம் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் சிலரின் உடல்நிலை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. தமிழர் பகுதிகளில் இவர்களுக்கு ஆதரவாகப் போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. ஆனால் இவர்களை விடுதலை செய்வதற்கான திட்டமெதுவும் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. விசாரணைகள் எதுவுமின்றி நீண்டகாலமாகச் சிறைகளில் அடைத்து வைப்பதென்பது அநீதியானதொரு செயலாகும். அரசியல் கைதிகளை நீதிமன்றத்தில் விசாரித்து தண்டனை வழங்கப்படுதல் வேண்டும். அல்லது விடுதலை செய்தல்வேண்டும். இவை எதுவுமே இல்லாமல் சிறைகளில் அடைத்து வைத்திருப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

### தமிழ்த் தலைவர்களுக்குள் புடுங்குப்பாடு

இதேவேளை தமிழர்கள் பிளவுபட்டு நிற்பதால் பேரினவாதிகள் தாம் நினைத்தவாறு நடந்துகொள்வதற்கு வசதியாகப் போய்விட்டது. தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டிய தமிழ்த் தலைவர்கள் தமக்குள் சண்டை பிடிப்பதில் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர். உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கவேண்டிய தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வின்போதும் அரசியல் கட்சிகள் முரண்பட்டு நின்றதைக் காண முடிந்தது. இதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமது சுய இலாபத்துக்காகத் தம்மை நம்பி நிற்கின்ற மக்களை ஏமாற்றுகின்ற தலைவர்களை மக்கள் முற்றாகவே புறக்கணித்துவிட வேண்டும். தமிழர்கள் ஒரே குரலில் தமது பிரச்சினைகள் தொடர்பாக ஓங்கி ஒலிக்கும்போது பலன் கிடைக்கத்தான் செய்யும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# சுகாதார விதிகளை மீறுவோருக்குப் புனர்வாழ்வளியுங்கள்

நாட்டில் பல வகைகளில் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். அவற்றுள் சில சுகாதாரச் சீர்கேடுகள் ஆகும். நாம் எமது வீட்டைச் சுத்தமாக வைத்திருந்தால், எமது பிள்ளைகள், உறவினர்கள் எவர்க்கும் நோய்கள் ஏற்படாது என்பது சரியானதே.

ஆனால், நம்மைப்போன்று ஏனையவர்களும் ஆரோக்கியமாக இருத்தல் வேண்டும் என்ற எண்ணம் எங்களில் பலருடைய மனதில் இடம்பெறுவதில்லை.

இதன் காரணமாகத் தமது வீட்டுக் கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்தும்போது அடுத்தவருக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் அவற்றை வீசிவிடுவது இங்கிருக்கின்ற குறிப்பிட்ட விகிதத்தினரின் செயற்பாடாக இருக்கின்றது. உள்வீதிகள் தொடக்கம் பெரிய வீதிகள் வரை இது இடம்பெறுகின்றது. சிலர் இறந்த வளர்ப்புப் பிராணிகளின் உடல்களையும், ஏனைய மாமிசக் கழிவுகளையும் சரியாக அழிக்காது விரும்பிய இடங்களில் வீசிச் சென்று விடுவார்கள். அவர்களின் சிந்தனை நாமும் எமது குடும்பமும் தப்பித்து விட்டோம். எவராவது எக்கேடாவது கெடட்டும் என்பதாகும். சில சந்தர்ப்பங்களில் இந்தத் துர்நாற்றத்தை தங்கள் கும்பத்தினரோ, அல்லது தங்கள் உறவினர்களோ நுகரக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். அதை அவர்களால் உணரமுடியாதிருக்கின்றது..

தவறுகளைத் திருத்துவதற்குச் சட்டம் உள்ளது. ஆனால் செயல் உருவில் எப்போது? எப்படிச் சாத்தியப்படும்? என்பதே கேள்வி.

தற்போதைய தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சி காரணமாக சி.சி.ரிவி கமராக்களைப் பொருத்தி அதன் மூலம் இதில் ஈடுபடுபவர்களைக் கண்டு பிடிக்க முடியும். அவ்வாறு செய்து குறிப்பிட்ட சில பகுதிகளில் குப்பைகளைக் குவிப்பது, கழிவு வீசுவது கண்டு பிடிக்கப்பட்டு இந்தத் தவறுகள் தொடர்ந்து ஏற்படாதிருக்கத் தண்டனை வழங்குவதுடன், இதில் ஈடுபடுபவர்களுக்குப் புனர்வாழ்வளித்தலும் வேண்டும்.

இதன் மூலமே இவர்கள் சமுதாயத்தில் திருந்தி வாழக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். இதனால் சுகாதாரச் சீர்கேட்டின் விகிதாசாரத்தைக் குறைத்துக்கொள்ளலாம்.

குறிப்பாக உள்ளூராட்சி சபைகள் பொலிஸாரின் உதவியுடன் இதில் ஈடுபடுவதன் மூலம் நோய்த் தாக்கத்திலிருந்து பலரைக் காப்பாற்ற முடியும். பிரதேச சபை மக்கள் பிரிதிநிதிகளும் இது தொடர்பாக அக்கறை எடுத்து அழுத்தங்களை வழங்குவதன் மூலம் சுத்தமான சூழல் ஒன்றை உருவாக்க முடியும். இது போன்ற சூழலிலுள்ள இடங்களைக் கண்டறிந்து நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்கு அந்தந்தப் பகுதிகளுக்குப் பொறுப்பன உள்ளூராட்சி சபைகள் முன்வரவேண்டும்.

*எஸ். பாரத், மல்லாகம்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் சொந்த விஷயம் பேச வேண்டாம். தொழிலில் உள்ள அனுகூலத் தன்மைகளை பாதுகாப்பது நல்லது.

**இடபம்:** சிரமம் தந்த செயல் எளிதாக நிறைவேறும். தொழில் வளர்ச்சிக்காக கூடுதலாக பணிபுரிவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கூடும்.

**கடகம்:** முக்கிய பணி நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். தொழில் நடைமுறை சீராக நண்பர்களின் உதவி கிடைக்கும். பணவரவு சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** தெய்வ நம்பிக்கையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார நடைமுறை சராசரி அளவில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** மனதில் பெருமித எண்ணம் மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாக இருக்கும். வருமானம் உயரும்.

**துலாம்:** நண்பர், உறவினர் பாராட்டும் வகையில் நடப்பீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்பு கிடைக்கும். பணவரவு திருப்தி தரும்.

**விருச்சிகம்:** புதியவரை நண்பராக ஏற்பதில் கூடுதல் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

**தனுசு:** சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும்.

**மகரம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**கும்பம்:** உங்களின் எதார்த்த பேச்சு சிலருக்கு சிரமம் தரலாம். தொழில் சார்ந்த இடையூறுகளை தாமதமின்றி சரிசெய்யவும்.

**மீனம்:** சமூகத்தில் மதிப்பு மரியாதை உயரும். தொழில் வியாபார வளர்ச்சிக்கான சூழ்நிலை உருவாகும். நிலுவைப் பணம் வசூலாகும்.

# தத்துவமொழிகள்

1. கல்வியின் வேர்கள் மிகவும் கடினமானவை, ஆனால், அதன் பழம் இனிமையாது.
2. இரண்டு உடல்கள் வசிக்கும் ஓர் ஆன்மாவுக்காக உருவானதே அன்பு.
3. கலையின் நோக்கம் வெளிப்புற விடயங்களைப் பிரதிபலிப்பதல்ல, உள்ளத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவது.
4. தைரியம் இல்லாமல் உங்களால் இந்த உலகில் எதுவும் செய்ய முடியாது. மரியாதைக்கு அடுத்து மனதின் சிறந்த பண்பு இதுவே.
5. அனைவருக்கும் நண்பராக இருப்பது என்பது உண்மையில் ஒருவருக்கும் நண்பராக இல்லாததைப் போன்றது.
6. பைத்தியக்காரத்தனத்தின் கலவை இல்லாத ஒரு சிறந்த மேதை எவருமில்லை
7. மகிழ்ச்சியானது எம்மைப் பொறுத்தே அமைகின்றது.
8. ஒரு செயலின் நல்ல தொடக்கம் அதைப் பாதியளவு முடித்து விட்டதற்குச் சமம்.
9. சமமற்ற விடயங்களைச் சமப்படுத்த முயற்சிப்பதே சமத்துவமின்மையின் மோசமான வடிவம்.
10. செயல்பாட்டில் ஏற்படும் மகிழ்ச்சியானது, அந்தச் செயலை முழுமைபெற வைக்கின்றது.
11. எந்த ஒரு பரிந்துரைக் கடிதத்தையும் விடச் சிறந்தது தனிப்பட்ட அழகே.
12. தனித்திறன் என்பது செயல் அல்ல, அது ஒரு பழக்கம்.
13. மனதின் ஆற்றலே வாழ்க்கையின் சாராம்சம்.



சினிமா

## பாபி சிம்ஹாவுக்கு ஜோடியானார் ரம்யா நம்பீசன்

'திருட்டுப்பயலே 2', 'சாமி ஸ்கொயர்' ஆகிய படங்களுக்குப் பிறகு பாபி சிம்ஹா நடித்து வரும் படம் 'அக்னி தேவ்'. இந்தப்படத்தை 'சென்னையில் ஒரு நாள்' படத்தை இயக்கிய ஜோன் பால் ராஜனும் சாம் சூர்யா என்பவரும் இணைந்து இயக்கி வருகின்றனர். சதீஷ் முக்கியமான பாத்திரத்தில் நடிக்கிறார். ராஜேஷ் குமாரின் நாவலை மையமாக வைத்து எடுக்கப்படும் இந்தப் படத்தை சியாண்டோ ஸ்ரூடியோ தயாரிக்கிறது. இந்தப் படத்தில் பாபி சிம்ஹாவுக்கு ஜோடியாக் யாரை நடிக்க வைக்கலாம் என்று குழப்பத்தில் இருந்த படக்குழுவினர். இப்போது ரம்யா நம்பீசனை ஒப்பந்தம் செய்துள்ளனர். இவரது நடிப்பில் உருவான 'நட்புனா என்னனு தெரியுமா', 'சீதக்காதி' ஆகிய படங்கள் வெளிவரக் காத்திருக்கின்றன.

பணம் இருந்தால் "நீங்களா"
என ஆச்சர்யப்படுவதும்...




பணம் இல்லாதவராக
இருந்தால் ஓ நீயா?
எனக்கேட்பதும் தான் உலகம்...

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 8 | 2 | 6 | | |
| | | | | | 1 | | | 8 |
| 1 | | 4 | | | | | 2 | |
| | 7 | 2 | | 4 | | | | |
| 3 | | 5 | | 6 | | 7 | | 2 |
| | | | | 2 | | 3 | 6 | |
| | 9 | | | | | 8 | | 3 |
| 4 | | | 7 | | | | | |
| | | 7 | 9 | 3 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 1 | 5 | 7 | 2 | 9 | 4 | 8 |
| 5 | 7 | 4 | 6 | 8 | 9 | 3 | 2 | 1 |
| 8 | 2 | 9 | 3 | 4 | 1 | 5 | 7 | 6 |
| 6 | 4 | 3 | 9 | 5 | 8 | 2 | 1 | 7 |
| 9 | 5 | 8 | 2 | 1 | 7 | 6 | 3 | 4 |
| 2 | 1 | 7 | 4 | 6 | 3 | 8 | 9 | 5 |
| 7 | 8 | 2 | 1 | 3 | 6 | 4 | 5 | 9 |
| 4 | 9 | 6 | 7 | 2 | 5 | 1 | 8 | 3 |
| 1 | 3 | 5 | 8 | 9 | 4 | 7 | 6 | 2 |

நேற்றைய விடை

## நாளை

**27.09.2018**

வியாழக்கிழமை

**புரட்டாதி 11**

திதி: துதியை மு.ப. 09.17 வரை
நட்சத்திரம்: அச்சுனி பி.இ. 3.18
சுபநேரம்: 7.32 – 9.02 வரை
ராகுகாலம்: 1.32– 2.02 வரை


பசிக்கு உணவு வாங்க
காசின்றி ஒரு கூட்டம்!
பணத்தைப் பதுக்கிவைக்க
இடமின்றி கூட்டம்!
பணத்தை எப்படி
சம்பாதிப்பது என்று
அறியாமல் ஒரு கூட்டம்!
பணத்தை செலவுசெய்வது எப்படி
என்று தெரியாமல் ஒரு கூட்டம்!
என அறிவுடையோராலும்,
அறியாமையுடையோராலும்
நிறைந்தது இவ்வுலகம்!



எந்த வார்த்தை பேச வேண்டும்
என்று அறிந்து
பேசுபவரைவிட....

எந்த வார்த்தையைப்
பேசக்கூடாது என்பதை
உணர்ந்து பேசுபவரே
சிறந்த பேச்சாளர்.

## பூட்டிய அறிவை திறக்கும்சாவி புத்தகம்



உதயன்

# புதன் பொய்கை

செப்ரெம்பர் 26 2018

@UthayanPrint

அடுத்தவர்
விருப்பத்துக்குத்தான்
வாழவேண்டுமென்றால்
செத்துவிடு!!!

—சுவாமி விவேகானந்தர்



செ.உமாசுதன்

# ‘இசை வேள்வி, 2018’

## உயர் இசையின் சங்கமம்



ஆரம்ப காலத்தில் முதிர்ச்சியுள்ள வளர்ச்சி நிலையை எட்டியிருந்த தமிழர்கள், தமது மொழியை இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என மூவகைப்படுத்தி வளர்த்து வந்தனர். அந்த வகையிலே இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் பற்றியும், தமிழரின் வாழ்க்கை நிலை பற்றியும் அறிந்து கொள்வதற்குத் தமிழ் இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன. தமிழர்கள் முத்தமிழோடு கலை மற்றும் கலாசாரத்திலும் சிறந்து விளங்கிய சிறப்பையும் இலக்கியங்கள் தெளிவாக்குகின்றன. எனவே இலக்கியங்களே தமிழர்தம் கலை மற்றும் கலாசாரம் பற்றி அறிய உதவும் முதற்சாதனங்களாக அமைகின்றன.

**தமிழின் சிறப்பு**

தமிழ்மொழிக்கு மந்திர வலிமை உண்டு. முதலை உண்டபாலனை மீட்டுத்தந்தது தமிழ். திருமறைக்காட்டில் அடைத்த கதவைத் திறக்கச் செய்தது தமிழ். கணிகண்ணன் முன் செல்லத் திருமழிசை ஆழ்வார் பின்செல்லத் திருமால் திருமகளோடு பாம்பணையைச் சுருட்டிக் கொண்டு அவருக்குப் பின்னால் ஓடச்செய்தது தமிழ். இத்துணை பெருமையுடையது தமிழ்.

**சிவனும் தமிழும்**

தமிழைக் கடவுளரும் விரும்பிச் சுவைத்தனர். ஆம், தீந்தமிழின் சுவையை உண்டு களிப்பதற்காக சிவபெருமான் தன்னுருவை மறைத்து, மீன்கொடியை ஏந்தி, வேப்ப மாலையைச் சூடி, சவுந்தர பாண்டியனாக வந்து மதுரையை ஆண்டான் என்றும், மலைமகள் உமையாள் தடாதகைப் பிராட்டியாக மதுரையில் அவதரித்தாள் என்றும், மயில்வேல் முருகன் உக்கிரகுமாரனாக உருவெடுத்தான் என்றும் வரலாறுகள் சான்று பகர்கின்றன. கைலாயத்திலிருந்த சிவன் தென்திசை நோக்கி வந்து ஆடியதும் தமிழ்ச் சுவையை நுகர்வதற்காகத்தானே! மேலும் சிவன் தமிழ்ப் புலவர்களின் கூட்டத்தில் தானும் ஒரு புலவனாக அமர்ந்து, தமிழை ஆய்ந்து சுவைத்தான். திருவாசகத்தைத் திருவாதவூரர் ஆன மாணிக்கவாசகர் சொல்லச் சொல்லச் சிவன் தன் கைப்பட ஏட்டில் எழுதி எமக்களித்தான். சுந்தரரைத் தமிழில் பாடுமாறு இறைவன் வேண்டுகோள் விடுத்தான். இதுவிதமே இறைவன் விரும்பும் சிறப்புடையதாய் தமிழ் மொழி சிறந்திருக்கிறது. தமிழிசையும் உள்ளத்தை உருக்கி இன்ப உணர்ச்சியை அள்ளித்தரும் வகையில் மிளர்ந்திருக்கிறது.

**தமிழிசையின் தொன்மை**

தமிழிசை மிகவும் தொன்மையானது. யாழும் குழலும் தமிழர்தம் இசைக்கருவிகளே. பாணனும் பாடினியும் தமிழிசை பாடி மகிழ்வித்தனர். அவர் பாடிய பண்ணும் இசையும் தமிழ்மொழிக்குரியன. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என வகைப் படுத்தப்பட்ட ஐந்திணைக்கும் பண்ணும் யாழும் வகுக்கப்பட்டன. சிலப்பதிகாரத்தில் காணப்படும் கானல் வரி, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி ஆகியவை அந்தக்காலத் தமிழிசைக்குச் சான்றாக உள்ளன. பண் சுமந்த பாடல்களாகத் தேவார, திருவாசகப் பாடல்களும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களும் திகழ்கின்றன.

**தமிழிசையின் சிறப்பு**

தமிழிசைக்குச் சிறப்புகள் பல உண்டு. மனம், மொழி, மெய் என்னும் முக்கோணங்களையும் தன்வயமாக்கும் திறன் தமிழிசைக்கு உண்டு. விலங்கும் அரவும் கூடத் தமிழிசை கேட்டு மயங்கும். ஆம், அப்பர் சுவாமிகள் பாடியது போல தமிழிசையின் சிறப்பு,

*மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும்*
போன்று அஃது உளத்துக்கு
உவகை ஊட்டுகிறது. இனிமை தருகிறது.

> தமிழிசைக்குச் சிறப்புகள் பல உண்டு. மனம், மொழி, மெய் என்னும் முக்கோணங்களை யும் தன்வயமாக்கும் திறன் தமிழிசைக்கு உண்டு. விலங்கும் அரவும் கூடத் தமிழிசை கேட்டு மயங்கும்.

**இசைத்தமிழ்**

இயற்றமிழே பண்ணோடு கலந்து சிறந்து தாளத்தோடு இன்பம் மொழியின் அதுவே இசைத் தமிழாகின்றது. தொல்காப்பியத்தில் இயற்றமிழ் இலக்கணத்தோடு இசைத் தமிழிலக்கணமும் இழையோடி எங்கும் விரவிக் கிடக்கின்றது. பிரித்தறிய முடியாத வகையில் பின்னிப் பிணைந்து சுவை தருகின்றன. இங்கு இசை என்ற சொல்லுக்கு இசைவிப்பது, வயப்படுத்துவது ஆட்கொள்வது என்று பல பொருள்கள் கூறப்படுகின்றன. இசை என்ற சொல் மக்கள் மனதை வயப்படுத்துவது, அசைவிப்பது எனும் பொருளைத் தருகிறது. இசை என்பது மிக்க மென்மையும், நுண்மையும் வாய்ந்தது. செவிப்புலனைக் குளிர்விப்பது. உள்ளத்தைக் கனிவாக்கும் தன்மையுடையது. ஆம், இனிய ஒலிகள் செவி வழி புகுந்து இதயதயங்களை வருடி உயிரினங்களை இயைபுற அசைவிக்கின்றன. இசைக்கு அடிப்படையாக இருப்பது ஒலி. ஒலியே உலகின் முதல் தோற்றம் என்பதை சமயங்கள் எடுத்தியம்பி நிற்கின்றன. உலக முழுமையும் ஓங்கார ஒலித்திரளின் இருப்பாக விளங்குகிறது என்பதும் தத்துவமாகச் சிறந்தி ருக்கிறது.




**‘இசை வேள்வி’ 2018**

அந்தவகையிலே

→





விளம்பி வருடம் கண்டுகொண்ட மகத்துவமாய், இசைத்தமிழின் சிறப்புகளை மேன்மையுறப் பேசியிருந்த நிகழ்வாக அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய 'இசை வேள்வி 2018' அமைந்திருந்தது எனலாம். ஆம், கடந்த 21 ஆம்,22 ஆம்,23 ஆம் மற்றும் 24 ஆம் திகதி ஆகிய நான்கு தினங்களும் இசைத் தமிழின் இன்பச் சுவையும் புகழும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்திலும்,யாழ் கம்பன் கோட்டத்திலும் நிறைந்திருந்தது. ஈழத்தின் தலைசிறந்த இசைக் கலைஞர்களும் தமிழ்நாட்டின் இசை மேதைகளும் இசை கொண்டு மேலான இன்பம் தர உயிர்ப்பொருளாய் நாதங்களுள் சரண்புகுந்தோம். உண்மையில் 'ஸ்ரீ ராம நாம கானாமிர்தம்' பொலிவோடு செழித்திருந்தது. ஆங்கு,

*'உலகம் யாவையும்*
*தாம் உளவாக்காலும்*
*நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா*
*அலகிலா விளையாட்டுடையார் அவர்*
*தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே'*









என்று தற்சிறப்புப் பாயிரம் மீட்டி, இறை சித்தியோடு ஒப்பற்ற உயர் இசையின் இன்பநிலை இனிய நாதங்களின் எழுச்சியால் ஒன்றுபட்டிருக்கக் கண்டுகொண்டோம்.

**நினைவரங்கு**

இசை வேள்வியின் ஒவ்வோர் அரங்கும் ஈழத்தின் தனித்துவமான இசைத்துவ வித்வான்களை மேன்மைப்படுத்தி அவர்தம் ஞாபகங்களை உபதேசம் செய்தன. இணுவில் ந.வீரமணி ஐயர் நினைவரங்கம்,நாதஸ்வர வித்வான் அமரர் பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை நினைவரங்கம், நாதஸ்வர வித்வான் அமரர் என்.ஆர். கோவிந்தசாமி நினைவரங்கம் மற்றும் வயலின் வித்வான் அமரர் ஆர்.ராதாகிருஷ்ணன் நினைவரங்கம் என அவை சிறந்திருந்தன.

**இசையரங்கு**

இசையரங்க நிகழ்வுகளைப் பொறுத்தவரையில், ஈழத்தின் பேறான இசைக்கலைஞர்களாக ஜெ.மதூஷிகன், அ.ஆரூரன்,பரமேஸ்வரி கணேசன்,சுகன்யா அரவிந்தன் ஆகியோர் அரங்கிலே கம்பீரமாக உருப்படிகளையும் கீர்த்தனங்களையும் ராக மனோபாவத்தின் வழியே பாடிக் களித்தனர். அதற்கிசைவாய் அ.ஜெயராமன்,ஞா.வசந்,ப.சியாம கிருஸ்ணன், எஸ்.திபாகரன்.ப.திவ்யரூப சர்மா,நா.சிவசுந்தர சர்மா,வ.ரமணா,கு.ரவிசங்கர்,சி.செந்துரான் ஆகியோர் அணிசெய் இசைக் கலைஞர்களாக வயலின்,மிருதங்கம்,கடம்,கஞ்சிரா,முகர்சிங் வாத்தியங்களை இசைந்து பார்வையாளர்கள் மனதையும் உடலையும் தாழ நிறுத்தி, 'உஞ்ச விருத்தி' செய்து இறை புகழை மன மோகனங்களில் நிலை நிறுத்தினர்.

**இசைப்பேரரங்கு**

அதுவிதமே இசைப்பேரரங்குகள் மேலான சாம்ராஜ்ஜியமாக மிளிர்ந்து இசை பக்தியால் பெருமிதம் கொண்டன. தமிழ்நாட்டின் இசை மேதைகளாக பத்மஸ்ரீ கத்ரி கோபால்நாத்,பிரியா சகோதரிகள்,நெய்வேலி ஆர்.சந்தான கோபாலன்,நாதவாணி ஸ்ரீமதி பம்பாய் ஜெயஸ்ரீ ஆகியோர் அரங்கிலே கொலுவிருந்து திவ்யநாம சங்கீர்த்தனம் புனைந்தனர். எளிமை கூட்டி வலிமை சுமந்து கச்சேரியின் நடுநாயகமாக கம்பீரமான பாடல்களைப் பாடிக் குதூகலித்தனர். செல்வத்தை விட மேலான இன்ப சேவகம் புரிந்து சாந்தம்,அமைதி எனச் சௌக்கியங்கள் பல தந்தனர். அணிசெய் இசைக் கலைஞர்களாக பத்மஸ்ரீ ஏ.கன்னியாகுமாரி,டெல்லி எஸ்.சாய்ராம்,ராஜேந்திரா நாகோட்,பி.எஸ்.புருஷோத்தமன்,எச்.என்.பாஸ்கர் ஆகியோர் வயலின்,மிருதங்கம்,தபேலா,கஞ்சிரா வாத்தியங்களை ஆலாபனம் செய்து நாத விநோதம் வெள்ளமாய் பெருக்கெடுக்க இசை கற்றுத் தந்து அறிவுரைகளை இசைத்துவமாய் மொழிந்தனர்.

**பண் இயல் அரங்கு**

பண் இயல் அரங்க நிகழ்விலே 'பாட்டும் பாவமும்' என்ற பொருளில் பயிலரங்கை நெய்வேலி ஆர்.சந்தான கோபாலனும், 'கீர்த்தனை அலங்காரங்கள்' என்ற பொருளில் பயிலரங்கை நாதவாணி ஸ்ரீமதி பம்பாய் ஜெயஸ்ரீயும் நிகழ்த்தினர். இசைக் கொடைகள் பல ஈந்து ஆராதனை புரிந்தனர்.

**இசை ஆராதனை**

ஸ்ரீ தியாகராஜர் பலவிதமான மனநிலைகளில் ராமனைப் பாடி இருக்கிறார். ஆம், என்னை எப்படிக் காப்பாற்றுவாய்? என்று தவிக்கிறார். அவன் கொலுவீற்றிருக்கும் கம்பீரத்தைக் காண்கிறார். என்னை சேவகனாக ஏற்றுக்கொள் என்று கெஞ்சுகிறார். சாந்தம், அமைதி இல்லாவிட்டால் வாழ்வில் சௌக்கியம் இல்லை என்பது போன்ற அறிவுரைகளையும் நமக்கு தருகிறார்.



கிருதி என்னும் இசை வடிவமே இன்றைய இசை நிகழ்ச்சிகளில் அதிகமாக இடம் பெறுகின்றன. இவ்வடிவத்தை முழுமைப்படுத்தியவர்களுள் தியாகராஜருக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. இசை கற்றுக்கொள்ள தொடங்கி இருக்கும் குழந்தைக்கான எளிமையான பாடல் முதல் இசைக் கச்சேரிகளில் எடுத்துக் கொள்ளப்படும் நடு நாயகமான, கம்பீரமான பாடல்கள் வரை என அனைத்து நிலைகளிலும் பாடல்களை இயற்றியுள்ள தனிப்பெருமை பெற்றவர் தியாகராஜர். அனைத்துப் பிரபல ராகங்களிலும், அபூர்வ ராகங்களிலும் அவற்றைப் பாடி உள்ளார். ஒரே ராகத்தில் பல பாடல்களைப் பாடினாலும் ஒன்றன் சாயல் மற்றொன்றில் படாமல் பாடி இருப்பது ஆச்சரியமான ஒன்றாகும்.

ஸ்ரீ தியாகராஜரின் திவ்ய நாம கீர்த்தனைகள் என்ற தொகுப்பும், உற்சவ சம்பிரதாய கீர்த்தனைகள் என்ற தொகுப்பும் இவருடைய இசைக் கொடைகளில் குறிப்பிடத் தகுந்தவை ஆகும். திவ்யநாம கீர்த்தனைகள் பஜனை சம்பிரதாய பின்னணியில் கூட்டு வழிபாட்டுக்காக இயற்றப்பட்டவை. தியாகராஜர் அவருடைய இஷ்ட தெய்வமான ராமனுக்கு காலை துயில் எழுவதில் தொடங்கி இரவு உறங்க செல்வது வரை ஒவ்வொரு நிகழ்வையும் அவற்றுக்கான பாடல்களைப் பாடி மகிழ்ந்தார். அப்பாடல்களின் தொகுப்பே உற்சவ சம்பிரதாய கீர்த்தனைகள் ஆகும்.
குறிப்பாக திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜர் சமாதிக் கொண்ட வளாகத்தில் அவர் சமாதிக்கு எதிரில் இசைக் கலைஞர்கள் கூடி பக்தியுடன் இசை அஞ்சலி செலுத்துகிறார்கள். ஒவ்வொரு இசைக் கலைஞரும் தியாகராஜரை தத்தம் குருவாகக் கொண்டு ஆராதனை நாளில் கலந்துகொள்வதை பெரும் பேறாக கருதுகிறார்கள்.

அந்தவகையிலே 'இசைவேள்வி. 2018' இன் இறுதி நாள் நிகழ்வில் அதிகாலை முதல் நண்பகல் பொழுதுவரை இடம்பெற்ற இசை ஆராதனை நிகழ்வில் ஈழத்தின் பிரபல மங்கல இசைக்கலைஞர்களும்,பிரபல பாடகர்களும்,பிரபல இசைக் கலைஞர்களும் ஒருமிதமாய் இணைந்து,ஒன்றாக அமர்ந்து நாட்டை, கௌளை, ஆரபி, ஸ்ரீராகம், வராளி ஆகிய ஐந்து கனபஞ்சக ராகங்களில் அமைந்த பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பாடி அஞ்சலித்தனர். இந்த இசை ஆராதனை நிகழ்ச்சிகளின் சிகரமாக அமைந்திருந்தது.
ஆம், தாய் தேசத்தை வியாபகம் செய்து விடுதலை தர மறுக்கும் இருண்மைகள் நீங்க, சற்குரு ஸ்ரீ தியாகப்ரம்மத்தின் அருளும், ஆசியும் அனைவருக்கும் கிடைக்க இந்த ஆராதனைகள் துணை புரியும் என்பதில் ஐயமில்லை.



# குடாநீரூரானின் தமிழ் அலங்காரமே குடாரப்பு குமரனின்

# கூத்தலங்காரம்

கே.எஸ்.சிவஞானராஜா

செம்மொழியாம் தமிழ்மொழியைக் கம்பரும், வள்ளுவரும், இளங்கோவும் கையாண்ட விதமாக குடாநீரூரான் கலாபூஷணம் சிதம்பிரப்பிள்ளை பசுபதியும், 'சொல்லலங்காரம், பொருளலங்காரம், இசையலங்காரம்' சிறந்து விளங்க கூத்தலங்காரமாகக் குடாரப்பு குமரனைப் பாடியிருப்பது தமிழுக்கு வைரக்கல் பதித்த அட்டியலாக மிளிர்ந்தது.

சந்தத் தமிழ் இனிக்கிறது. தமிழன்னை மகிழ்கின்றாள். நூற்றியொரு பாடல்களை இயற்றிப் படிப்போர் மனதைக் கவர்ந்திழுக்க வைத்திருக்கின்றார்.

சிறு குடாரப்பு சிறுவா உன்
கூத்து அலங்காரமதைப்
பெறுவார், படிப்பார், பேரிசை
கேட்பார், பெருமையுடன்
நறவார் திருவடி நண்ணியே
நாளும் நவில்பவர்க்கே
மறவாது அருளுதி மனமகிழ்
வாழ்வு மலர்ந்திடவே

முருகா! நறுஞ்சோலைகளும், கவின் காட்சிகளும், புவிமாட்சிகளும், பொட்டிட்ட ஊர்ப் பெரியோரும், பூ இட்ட அடியவரும் பொங்கலிட்ட மாந்தரும், விரதம் ஊட்டியடியளித்த தோகையரும் பண்ணோடு இசைபாடும் புலவர்களும், பரவு புகழ் விரிக்கின்ற பேரறிஞர்களும் மலிந்து விளங்கிய குடாரப்பு ஊரில் வலத்தினில் வேல் கொண்டு குலத்தைக் காக்க வந்த, திருத்தலத்துறைத் தங்கவடிவேலவனே!

அப்பாவும் இல்லை அவர் மகன் இல்லை
அவர் வழியில்
தப்பாமல் வந்த தமரும் உறவும்
எவரும் இல்லை
ஒப்பாரும் மிக்க உயர்வும் இழந்து




உறங்குநிலை
சப்பாணி கொட்டி இருந்தனயோ?
தனிவேலவனே!

போர்க்கள பூமியாக இந்த மண் இருந்த போது குடாரப்பு ஊரானது முற்றிலுமாகத் துடைத்து வழித்துச் சேதாரமாக்கப்பட்டது. முதுசொம்களெல்லாம் அழிந்தன.

விவசாயிகள் தொடக்கம் வித்தகர்கள் வரை இடம்பெயர்ந்தனர். அவர்களோடு சேர்ந்து தெய்வங்களும் கூடவே மக்களோடு மக்களாகச் சேர்ந்து வாழ விரும்பியதன் பேறாக ஊரெல்லாம் வெறிச்சோடிற்று. குடாரப்பு மட்டும் விதிவிலக்கானது. மாடுகளும் மந்தைகளும் ஊர்விட்டுச் சென்ற. ஏடுகளும் புலவர்களோடு இடம்விட்டு இடம்பெயர்ந்தன. படித்தவர்களும் பாமரர்களும் குடாரப்புவின் தொன்மைகளோடு வெளியேறினர். இப்போ நீ தனித்திருக்க எம் கண்கள் பனிக்கிறது. நிம்மதியில்லையே!

ஊர் குடாரப்பில்லை உயர்ந்த குடி
அமரவில்லை
கார் என்று உனைப் பணிய காக்கை
களும் இங்கில்லை,
தார் கடம்பு பூண்ட சண்முகனே
தனித்திருந்து
சேர் என்று சொன்னாலும் சேர்
வதற்கு எவருமில்லை!

காக்கை கூட குடாரப்புவில் இல்லாதிருக்கும்போது முருகா! நீ எப்படி அங்கு தனித்திருக்கின்றாய்? உனக்குப் பயம் ஏதும் இல்லையா? இனியாவது நாம் மீண்டு வாழ அருள் செய்யாயோ?

அம்பன் அயல் இருக்க அயல் நாகர் வடக்
கிருக்க
துன்பு கொண்ட செம்பியனும் துளிர்த்து
அமைந்திருக்க
நாங்கள் நடு ஊரை நாதிகள் அற்ற
காடாக்கி
இன்பமே வாவென்றால் எய்திடுமோ எம்
மிறையே!

தூர விழிகொண்டு எம்மூரைப் பார்க்க வாரீர் என்று துதிக்கிறது குடாரப்பு. விடிவு தர வேண்டியே மக்கள் குடாரப்பு முருகனைக் கசிந்துருகி வரம் வேண்டுகின்றனர். குடாநீரூரான் நெக்குருகின்றார்.

சீர்புராண முறைவருமோ?
சிறப்புக்கள் இனிவருமோ?
பேர் தங்க ஊர் வருமோ?
பிள்ளைகளும் வருவாரோ?
வேர் தங்கு வித்தைகளும்
விளங்கு குலமுறை உறவும்
ஊர் தங்கு வேலவரே
உலகறிய இருப்பீரோ?

முருகா! கந்தரலங்காரம் கண்டும் கேட்டும் இரசித்த உனக்கு, இந்தக் கூத்தலங்காரத்தை நீ விரும்பி ஏற்று அருள்புரிய வேண்டுமையா. முருகா! பழையபடி குடாரப்பு தடையேதுமின்றி எங்கும் மக்கள் விரும்பி வந்து உறைய வேண்டும். அப்போது இந்தக் குமரன் கூத்தலங்காரம், உந்தன் சந்நிதியில் தமிழோடிசைபாடல் தரும் பொருளலங்காரமாக மிளிர வேண்டும். குடாரப்பு ஊரை நோக்கி மடை திறந்த மக்கள் படையெடுத்து வரவேண்டும். நீ அதைப் பார்த்துக் கருணை மழை பொழிய வேண்டும்.

# பண்பாட்டுப் பெருவிழா














முல்லைத்தீவு, கரைதுறைப்பற்றுப் பிரதேச பண்பாட்டு பெருவிழா-2018 நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றன.
நிகழ்வில் விருந்தினர்கள் தமிழர்களின் பாரம்பரிய இசை அணிவகுப்போடும், கோலாட்டம், கும்மியாட்டம், கரகாட்டம், காவடியாட்டம் எனத் தமிழர்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்த ஊர்திகளின் பவனியோடும் அழைத்துவரப்பட்டனர்.
முள்ளியவளை-தண்ணீரூற்று முதன்மை வீதியில் இருந்து ஊற்றங்கரை ஐங்கரன் மண்டபம் வரை இந்த அணிவகுப்பு மரியாதையும் ஊர்திகளின் பவனியும் இடம்பெற்றது.
பண்பாட்டுப் பெருவிழாவின் முதன்மை அம்சமாக பிரதேசத்தின் சிறப்புக்களை பேசுகின்ற 'சிற்பி' மலர் வெளியீடு இடம்பெற்றது. நூல் வெளியீட்டை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் நிகழ்த்தினார். நூலின் முதற் பிரதியை மாவட்டத்தின் மூத்த கலைஞர் ந.முருகுப்பிள்ளை பெற்றுக்கொண்டார்.
தொடர்ந்து மாவட்டத்தின் சிறந்த கலைஞர்கள் 26 பேருக்கான மதிப்புறுத்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது முதுபெரும் கலைஞர்களான அருணா செல்லத்துரை மற்றும் கேமா சண்முகசர்மா உட்பட கலைஞர்கள் அனைவரும் 'முல்லைப்பேரொளி' விருது வழங்கி மதிப்புறுத்தப்பட்டனர்.
கலைநிகழ்வுகளாக மாணவர்களின் பங்குபற்றுதலோடு அமைந்த சுளகு நடனம், கரகம், றாபன் நடனம், நாட்டார்பாடல், கிராமியப்பாடல் அம்சங்களும், பிரதேச கலைஞர்களின் ஏற்பாட்டில் இராவணேசன் நாட்டுக்கூத்து, பண்டாரவன்னியன் நாடகம் என்பனவும் இடம்பெற்றன. கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் இடம்பெற்ற பண்பாட்டு பெருவிழா நிகழ்வில், முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகண விவசாய அமைச்சர் க.சிவனேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கரைதுறைப் பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.தவராசா ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், கலைஞர்கள், பொதுமக்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 'நதியோர நாணல்கள்'

## இலக்கிய பெருவிழாவும் நூல் வெளியீடும்

சின்னையா அருணாசலம்

வரணி 'நதியோர நாணல்கள்' இலக்கிய மன்றத்தினர் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்திருந்த இலக்கியப் பெருவிழாவும், 'அசையும் நாணல்கள்' நூல் வெளியீட்டு நிகழ்வும் கடந்த மாதம் 22ஆம் திகதி புதன்கிழமை வரணி சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்தின் அருகாமையில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.









**விருந்தினர்கள்**

இலக்கிய மன்றத்தின் தலைவர் வல்லிபுரம் ஜசிந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், முதன்மைவிருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக முதன்மைக் கணக்காளர் கில்பேட் குணம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் தேவந்தினி பாபு மற்றும் உதவிப் பிரதேச செயலர் கா.வினோஜிதா, மதிப்புறு விருந்தினர்களாக மூத்த கவிஞர் சோ.பத்மநாதன், 'அறிவிருட்சம்' இயக்குநர் ஐ.எம்.சுறைஸ் மற்றும் மந்திகை ஆதார மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் நளாயினி ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் இலக்கிய மன்றம் நடத்திய போட்டி நிகழ்வுகளின் நடுவர்கள், இலக்கிய ஆர்வலர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**நிகழ்வுகளின் ஆரம்பம்**

காலை 9மணிக்கு ஆரம்பமான நிகழ்வின் தொடக்கமாக விழாவுக்கு வருகை தந்திருந்த விருந்தினர்கள் தமிழ்ப் பாரம்பரிய முறைப்படி மலர் மாலை அணிவிக்கப்பட்டு, ஈழத்தின் பாரம்பரிய கலை வடிவங்களுள் ஒன்றான கோலாட்டத்துடன் விழா அரங்குக்கு அழைத்துவரப்பட்டனர். கோலாட்ட நிகழ்வை தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தினர் வழங்கினர். தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்து, இலக்கிய மன்ற கீதம் என்பன இசைக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதைத் தொர்டர்ந்து விருந்தினர்களின் சிறப்புரை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் பங்காற்றிய நடுவர்கள், இலக்கிய ஆர்வலர்கள் மதிப்புறுத்தப்பட்டனர். அவர்களுக்கு 'தமிழ்நதி' விருது வழங்கப்பட்டது. கவிஞர்கள் வெற்றிப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி மதிப்புறுத்தப்பட்டனர்.

**தலைமையுரை**

நிகழ்வில் இலக்கியப் பெருவிழா குறித்து கருத்துரைத்த வரணி 'நதியோர நாணல்கள்' இலக்கிய மன்றத்தின் தலைவர் வல்லிபுரம் ஜசிந்தன்,

"கலை இலக்கியத்தின் ஊடான சமுதாய மாற்றத்தை முதன்மை நோக்கமாகக் கொண்டு 'நதியோர நாணல்கள்' இலக்கிய மன்றத்தை கடந்த ஆண்டு ஆரம்பித்தோம். தற்போது கண்டுகொண்டுள்ள வளர்ச்சி குறித்து மகிழ்வடைகிறோம். சமூக வலையமைப்பின் ஊடாக இலங்கை, இந்திய மற்றும் புலம்பெயர் நாடுகளில் வசித்து வருகின்றஉறவுகளை ஒருங்கிணைத்து மன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். நல்ல இலக்கிய வாதிகளை உருவாக்குதல், அவர்களுக்கான உந்துசக்தியையும் ஊக்குவிப்பையும் வழங்குதல், ஈழத்தின் பாரம்பரிய கலைகளைவளர்த்தெடுத்தல் மற்றும் தமிழ் இலக்கிய வரலாற்றை பேணி பாதுகாத்தல் என்றவகையில் எமது எதிர்காலப் பணிகள் தொடரும். அவை காலத்துக்குக் காலம் செப்பனிடப்படும்." என்றார்.

**'அசையும் நாணல்கள்' நூல் வெளியீடு**

நிகழ்வின் சிறப்பு அம்சமாக, 'நதியோர நாணல்கள்' இலக்கிய மன்றம் நடத்திய போட்டியில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த கவிதைகள் 'அசையும் நாணல்கள்' எனும் பெயரில் தொகுக்கப்பட்டு நூலுருவாக வெளியீடு செய்யப்பட்டது. 'படைப்பாளிகள் உலகம்' சார்பில் மந்திகை ஆதார மருத்துவனை மருத்துவ நிபுணர் திருமதி நளாயினி ஜெகதீசன் நூலுருவை வெளியிட்டு வைத்தார். நூலின் முதல்ப் பிரதியை யாழ். மாவட்டச் செயலக முதன்மை கணக்காளர் கில்பேட் குணம் பெற்றுக் கொண்டார். 'அசையும் நாணல்கள்' நூல் வெளியீட்டுரையை மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்தினார்.

**கலைநிகழ்வுகள்**

கலைநிகழ்வுகளாக ஸ்ரீகர கர்த்தனாலய கல்லூரி மாணவியர் பளை மத்திய கல்லூரி மாணவியர் மற்றும் ஆசிரியைகள் இணைந்து வழங்கிய 'சாகுந்தலை நாட்டிய நாடகம்', ஆதிவாசிகள் நடனம், பாடல்கள், தனி நடனம்போன்றவை இடம்பெற்றன.

சாகுந்தலை நாட்டிய நாடகம், ஆதிவாசிகள் நடனம் குறித்த நெறியாள்கையை மயிலைய்யூர் மோகன் மேற்கொண்டிருந்தார். நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்துக்கான கீதத்தை இந்தியப் பாடலாசிரியர் சிலம்புகவி ராஜபாரதி இயற்றி வழங்கி இருந்தார். மன்ற கீதத்தை வரணியூர் அம்பிகை சகோதரிகளுள் ஒருவரான மூத்த சங்கீத ஆசிரியை திருமதி வீ.நீலாம்பிகை நற்றமிழில் நாவினிக்க இசைத்தார்.

**கலைஞர் மதிப்பளிப்பு**

இலக்கிய விழாவில் இடம்பெற்ற கலைநிகழ்வுகள் அத்தனையும் ஈழத்தின் பாரம்பரியக் கலைகளை மையப்படுத்தியே அமைந்திருந்த தன்மை நிகழ்வின் சிறப்பம்சம் எனலாம். போட்டிகளில் வெற்றி பெற்ற இந்தியக் கலைஞர்களுள் நேரடியாக இந்த நிகழ்வுக்கு வருகைதந்திருந்த மைதிலி நடராஜன் தம்பதியினர் சிறந்த முறையில் மதிப்புறுத்தப்பட்டனர்.

தவிர வெற்றிக்கவிஞர்கள், கலைஞர்கள் என சுமார் 141பேர் மதிப்புறுத்தப்பட்டனர். குறிப்பாக இவர்களுள் குறிப்பாக இந்திய கலைஞர்கள் 60 பேர், ஈழத்தின் முஸ்லிம் கலைஞர்கள், கவிஞர்கள் எனப் பலரும் உள்ளடங்கியிருந்தனர்.

நிகழ்வில் தாய் தேசிய கலைஞர்கள் வட்டம் சார்பில் கவிச்சுடர் சிவாரமணியும், அறிவிருட்சம் நிறுவனம் சார்பில் அதன் பணிப்பாளர் ஐ.எம்.சுறைசும் 'நதியோர நாணல்கள்' இலக்கிய மன்றத்தின் தலைவர், இளம் கவிஞர் வல்லிபுரம் ஜசிந்தனுக்கு நினைவுச்சின்னம் வழங்கி மதிப்பளித்தனர்.

இறுதியாக மன்றச்செயலாளர் கபிறியெல் இராசமலரின் நன்றியுரை இடம்பெற்று தமிழ்த் தாய் வாழ்த்துடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

## ஆண்டு நிறைவு விழா










அச்சுவேலி மத்தியகல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் கடந்த வெள்ளி மற்றும் சனி ஆகிய இரண்டு தினங்கள் அச்சுவேலி இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றன. (ஓ - 11)

அன்புமாறன்

# அகிம்சையின் ஒரே வடிவம் திலீபன்





தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு மகத்தானது. உரிமை வேண்டிய இலட்சியத்தின் அணையாத நெருப்பானது. வீரமும், விவேகமும், வழிநடத்தலும், தியாக ஆன்மங்களின் ஆயுதம் கொண்டு நீள நடந்த பயணமது. விடுதலை..! விடுதலை...! எனத் தாயகத்தின் அழகு பேண மன இறுக்கமும் கண்ணீர் சிந்திய பற்றுறுதியின் தாற்பரியமும் ஒன்று கூடிய தீராத தாகம் அது. தாய்மை கொண்ட தமிழன் வரலாற்றுப் பெறுமானம் சூடிய சுடர் விளக்கான பொறுமையின் கனதியானது. முடிவிலியானது.

### உரிமைப் பயணம்

அந்தவகையிலே அகிம்சைப் போராட்ட வடிவமான உணவு ஒறுப்புப் போராட்டத்தை முதன் முதலில் ஆன்ம உருக்கமாய் உருவகித்த தியாகி திலீபனின் போராட்டம் சுடர் கொண்டு மூன்று தசாப்த காலங்கள் கடந்துவிட்டன.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அப்போதைய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த இராசையா பார்த்தீபன் என்னும் இயற்பெயருடைய திலீபன், 1987 ஆம் ஆண்டு நல்லூர் வீதியில் தொடர்ச்சியாக 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டார். குறிப்பாகத் தமிழீழ தேசமெங்கும் இந்திய இராணுவம் அமைதிப்படை என்னும் பெயரில் நிலை கொண்டிருந்த காலத்திலேயே இந்தத் தியாகப் போராட்டம் நிகழ்ந்தது.

முன்னதாகத் தமிழ் மக்கள் தமக்குரித்தான தாயகப் பிரதேசத்தில் சுய கௌரவத்தோடு வாழ்வதற்கான உரிமை உத்தரவாதப்படுத்தப்படும் என்று வழங்கிய உறுதிமொழிகளின் அடிநாதம் பற்றி புலிகள் தம்வசம் இருந்த பெருமளவு ஆயுதங்களைக் கையளித்தனர். இருந்தும் இதற்குப் பின்பான காலப்பகுதியில் இலங்கை அரசு திருகோணமலையில் மிக வேகமான சிங்களக் குடியேற்றங்களை நிறுவிக்கொண்டது.

இந்தச் செயல்நிலைகளுக்குச் சமாந்தரமாக இதே காலப்பகுதியில் 'ஈ.என்.டி.எல்.எவ்' என்ற அமைப்பை உருவாக்கி புலிகளின் முக்கிய உறுப்பினர்களையும் சுட்டுக் கொன்றது. புலிகளை மாற்றுச் சிந்தனையின் பால் பயணிக்கச் செய்ய உந்துதல்களை ஏற்படுத்தியது. இதன் விளைவாக புலிகள் யாரை நம்பி ஆயுதங்களை ஒப்படைத்தனரோ அவர்களிடமே நீதி கேட்க விளைந்தனர்.

### தியாகம் உருப்பெறல்

1987 ஆம் ஆண்டு திலீபன் தங்கியிருந்த கொக்குவில்-பொற்பதி வீதியில் அமைந்திருந்த இல்லத்தில் ஓர் இரவு புலிகளின் உறுப்பினர்களுக்கு அவசரக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் புலிகளின் மூத்த உறுப்பினர்களான றூட் சிறி, ரமேஸ் மாஸ்ரர், ராஜன், நவீன், மாறன், பிரசாத் உள்ளிட்ட பலர் அப்போதைய நிலைமைகள் தொடர்பில் கூடி ஆராய்ந்தனர். இருப்பினும் உறுதியான முடிவுக்ள் எவையும் அந்தக் கூட்டத்தில் எட்டப்படவில்லை. அதிகாலைப் பொழுதில் திலீபன் போராளி ராஜனை (தவ்வல்) அழைத்துக்கொண்டு மூத்த எழுத்தாளரும் தமிழ் உணர்வாளருமான மு.திருநா வுக்கரசுவிடம் சென்றார். அங்கு சென்று தனது சிந்தனையை வெளிப்படுத்திக்கொண்டார். அந்தச் சிந்தனை செயல்வடிவம் பெறுவதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டார்.
இந்த உரையாடல் பொழுதில் திலீபனிடம் ஒருவிடயத்தைத் திருநாவுக்கரசு விழித்துக்கொண்டார். முக்கியமாகத் திலீபன் மேற்கொள்ளத் தீர்மானித்த உணவு ஒறுப்பப் போராட்டம் தொடர்பில் இந்தியா சாதகமான பதிலை வழங்குமா? என்பது சந்தேகம் என்பதைத் தெளிவுறுத்தினார். குறிப்பாக 'டிக்சிற்' (இலங்கைக்கான இந்தியாவின் அப்போதைய தூதுவர்) இந்த போராட்ட முயற்சியைக் கண்டு கொள்ள மாட்டார். தேவையற்று உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களே ஏற்படும் என்ற விடயங்களைத் தெரிவித்திருந்தார். ஆனாலும் திலீபன் மனம் தளரவில்லை.

### தியாகம் நிலைபெறல்

உந்துருளியில் அங்கிருந்து ராஜனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்ட திலீபன் முற்பகல் 11 மணியளவில் கந்தர்மடம் சென்றார். கந்தர்மடம் பேபி ஸ்ரூடி யோவுக்கு அருகாமையில் உள்ள வீதியில் அமைந்துள்ள மன்மதன் வீட்டுக்குச் சென்றார். அங்கு இரண்டு மணி நேரங்கள் பேச்சுக்கள் இடம்பெற்றன.
அந்த வீட்டின் அறையில் பேச்சுக்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்து சந்தர்ப்பத்தில் அங்கிருந்த ஒரு தட்டச்சு இயந்திரம் சடசடக்கின்றது. அதை இயக்கி கொண்டிருந்தவர் தேவர். இந்தச் சடசடப்பு அகிம்சை எனும் போராட்டத்தின் புதிய பரிணாமத்தை வெளிக்காட்டும் கட்டியங்கூறலாக அமைந்திருந்தது. இரு மணிநேரச் சந்திப்பின் நிறைவில் வெளியே வந்த திலீபன் ராஜனை அழைத்து ஊந்துருளியில் அமர்ந்துகொள்ளும் கணங்கள் புன்னகைத்தன. வீரத்தை தியாகமாக விதைத்தன. உணவு ஒறுப்புப் போராட்டத்துக்குத் தலைவர் அனுமதி வழங்கி விட்டார் என்ற மொழிவாடைச் சந்தங்கள் திலீபனின் முகபாவனையில் உரிமையைச் செந்தளித்தன.
இவ்வாறுதான் திலீப னின் உணவு ஒறுப்புப் போராட்டம் கருக்கட்டியது. இந்தச் சம்பவம் இடம்பெற்று ஓரிரு தினங்களின் பின்னர் திலீபன் நல்லூர் வீதியில் உரிமைப் பசி கொண்டு ஆகாரம் ஏதுமின்றி ஆன்மம் உருகத் தியாகம் புகுந்தான்.

### இறுதிக் கணங்களில் திலீபன்

என்னால் பேச முடியவில்லை. ஆயினும் என் மனம் மகிழ்ச்சியில் மிதக்கின்றது. நீங்கள் பல்லாயிரக்கணக்கில் இந்தப் புரட்சிக்குத் தயார்பட்டு விட்டதை என் கண்கள் பார்க்கின்றன. நான் திருப்தி அடைகிறேன். இன்று பேச முடியாத நிலை இருக்குமென நினைத்தேன். ஆனால் நீங்கள் தந்த உற்சாகம்தான் என்னை இப்போதும் வாழவைத்துக் கொண்டுள்ளது. நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொரு மக்களும் இந்தப் பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும். நான் நேற்றும் கூறிவிட்டேன் எனது இறுதி ஆசை இதுதான்.

எமது எதிர்கால சந்ததி வாழ ஒரு நாடு தேவை. அல்லாவிட்டால் நாளை எங்களைப் போல்தான் எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும். வருத்தப்படும். எனது மூளை இப்போது எதனையும் நன்றாக கிரகிக்கவில்லை என்பது எனக்கு விளங்குகிறது. இதில் பிழைகள் இருக்கலாம். இதை நீங்கள் பொறுத்துக்கொள்ளுங்கள்.
நான் மீட்கப்பட முடியாத நிலைக்குச் சென்றுவிட்டதை உணர்கிறேன். ஆனால் இலட்சியம் என்ற பெரும்பணியை உங்களிடம் விட்டுச் செல்கிறேன். நான் மிகவும் நேசித்த என் தோழர்கள், என் சகோதரிகள் எல்லாவற்றிலும் மேலாக என் தலைவர் பிரபாகரன் உங்களுடன் இருக்கிறார். நீங்கள் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும்.
மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! இந்தப் புரட்சி நாள் என்னுயிருக்கு மேலாக நேசிக்கும் என் மக்களுக்குக் கிடைக்கட்டும்!

# திலீபம்



2008 ஆம் ஆண்டின் புரட்டாதி 26
ஆம் நாள் தான் அவர்கள் உனக்கு
கடைசியாக, உத்தியோகபூர்வமாக
விளக்கேற்றியிருந்தார்கள்!

இதுவே உனக்கெடுக்கும் கடைசி
விழாவென்றும் அவர்கள் நம்பி
னார்கள்!

அனுமன் மீண்டும் இலங்கையை
நிச்சயம் எரித்து விடுவான்!

அவர்களின் தீர்க்கதரிசனம்
அதை நன்கு அறிந்திருந்தது!

எங்களின் அஹிம்சா மூர்த்தியில்
அவர்களுக்கு அத்தனை பேரன்பு!

இந்தியாவின் காந்தீய சித்தாந்தம்
திக்குமுக்காடிப்போவது வருடாவருடம்
வந்து விட்டுப்போகும் இந்தப் பன்னி
ரண்டு நாள்களில்தான்.

இது கர்ம நிபந்தனை!

எங்கேயோ போர்பந்தரில் பிறந்த
மோகன்தாசும் ஊரெழுவில் பிறந்த
பார்த்தீபனும் நல்லூர் பின் வீதியில்
சந்தித்துக்கொண்
டார்கள்.

அது அவர்களுக்கு
பொறுக்கவில்லை!

இந்த முறை இந்திய
பூகோள ஸ்திர
நிலை என்ற
கோஷத்தை
கையிலெடுத்தார்கள்.

இந்தியன் கோட்சேதான்
திலீபனைக் கொன்றான்.

அவன் காந்தியை இரண்டாம் முறை
கொன்றுவிட்டான்!

கொலை நடந்தது ஓர்
இந்துக்கோவிலில்!

தீவிர இந்துத்தேசியவாதம்,
இந்தியப் பூகோள அரசியல்
இரண்டும் ஒரு புள்ளியில்
முரண்பட்டுக் கொள்கின்றன!

தென் ஆபிரிக்கர்கள் பூசிக்கும்
நெல்சன் மண்டேலா
அமெரிக்க கறுப்பர்களின் விடுதலை
நாயகன் மாட்டீன் லூதர் கிங்
இருவரின் இதய நாயகனும்
காந்திதான்.
காந்தி அவர்களின் குருவும் கூட !
இருவரில் ஒருவரும் சத்தியாக்கிரகப்
போராட்டத்தில் மரிக்கவில்லை.
ஏன் காந்தியடிகளும் கூட!

ஆனால் உனக்கென
தனிமகத்தும் உண்டு!

சத்தியாக்கிரகமே உன் வாழ்வின்
தொடக்கமும் முடிவுமானது!

சத்தியாக்கிரகத்திலேயே நீ
மரித்தும் போனாய்!

அருள்மொழி

# சமூக அக்கறையுடைய ஆன்மம்

இந்த உலகில் பிறந்த எல்லோரும் என்றோ ஒரு நாள் இறப்பெய்துவது என்பது நியதி. சாவு சாசுவதமானது. ஆனாலும் வாழும் காலத்தில் நாம் செய்கின்ற காரியங்கள் வழியாகச் சமூகத்தில் விட்டுச் செல்கின்ற மரபுகள்தான் முதன்மையானவை, அந்தவகையில் இராசநாயகம் இராஜவிஜயன் மனித நேயத்துடன் நட்புறுவான கலாசாரத்தை பேணுபவராகவும், மற்றவருக்கு உதவி புரிகின்ற மனப்பான்மை கொண்ட செயல் வீரனாகவும் திகழ்ந்தார்.



ஐயனார் வீதி-சுன்னாத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர், 1960 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இராசநாயகம் விஜயலக்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வனாக இந்தப் பூவுலகில் அவதரித்தார்.

ஆரம்பக் கல்வியை மயிலணி சைவமகா வித்தியா லயத்தில் தொடர்ந்த இவர், 1971 ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைக் கற்றுத் தேர்ந்தார். அந்தக்காலப் பகுதியில் மிகத் துடிப்பான இளைஞனாகக் கல்வியில் தனது திறமைகளை வெளிப்படுத்தினார். அதே நேரத்தில் விளை யாட்டுத் துறை சார்ந்தும் அதீத திறமைகளை வெளிக்காட்டினார்.

உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் மகாஜனாக் கல்லூரியில் 1977 ஆம் ஆண்டு தொடக்கம் 1980ஆம் ஆண்டு காலப்பகுதி வரை தொடர்ந்தார். அதன்பின் பாகக் காணி அளவையியலாளராக தொழிற்கல்வியை கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றார்.

1982 ஆம் ஆண்டு லிபியா நாட்டுக்குச் சென்று 2 வருட காலங்கள் கடமையாற்றினார். மீண்டும் தாயகம் திரும்பிய இவர், 'மல்ரி ஒயில்' நிறுவனத்தில் கணக்குப் பிள்ளையாக பணி புரிந்தார். அதன் பின்பு 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கட்டட ஒப்பந்தகாராக பரிணாமம் கொண்டு சொந்தமாகத் தொழிற்றுறையை அரம்பித்தார். 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 'சீற்றாஸ்' தனியார் கம்பனியை ஆரம்பித்து திறம்பட அதை நிர்வகித்து வந்தார். 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது தொழில் முனைவை தென்பகுதி மற்றும் மன்னார் பிரதேசங்களுக்கு விரிவுபடுத்தினார்.

## நீத்தார் பெருமை

தான் படித்த ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் உலகெங்கும் இயங்காது இருந்த நிலையில், 1941 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய பழைய மாணவர் சங்கத்தை மீளுருவாக்கம் செய்தார். 1986 ஆம் ஆண்டு முன்னைநாள் அதிபர் ஒரேற்றர் சுப்பிரமணியத்தின் வழிகாட்டலில் அந்தப் பணியை சிறப்பாக மேற்கொண்டு ஆயுள்கால அங்கத்தவராக இணைந்தார். 1990 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை பழைய மாணவர் சங்கம் ஊடாக பல செயற்றிட்டங்களை முன்னெடுத்ததோடு, நிர்வாக சபையில் உறுப்பினராகவும் திகழ்ந்தார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இறப்பெய்தும் வரை ஸ்கந்தவரோதய பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்து, கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளி விழாவையும் ஸ்கந்தா மைந்தர்களின் சங்கமத்தையும் வெற்றிகரமாக நடத்தி முடித்தார்.

கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் ஸ்கந்தா மாணவர்கள் கொழும்புக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில், மாணவர்களின் தங்குமிடம், உணவு, போக்குவரத்து போன்ற வசதிகளை முன்னின்று செய்துகொடுத்தார்.

மேலும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தை லண்டன், கனடா, ஆஸ்திரேலியா, நோர்வே போன்ற தமிழர்கள் புலம்பெயர்ந்து செறிவாக வாழ்ந்து வருகின்ற நாடுகளில் ஆரம்பிப்பதற்கு உதவி புரிந்தார். அதனூடே கல்லூரிக்குத் தேவையான உதவவிகளைச் சரிவரச் செய்து வந்தார்.

மகேந்திரலிங்கத்தின் முயற்சியோடு ஆரம்பிக்கப்பட்ட ஸ்கந்தா நம்பிக்கை நிதியத்தை செயற்படுத்துவதற்கு முன்னின்று உழைத்தார். அந்த வகையிலே நேர்மையான, தற்துணிவுடைய, அமைதியான சுபாவ முடைய செயல் வீரனாக அமரர் இராச்நாயகம் இராஜவிஜயன் உயர்நிலை பெறுகிறார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைத் தியானிக்கின்றோம்.

***ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்***



# 'கவிதாஞ்சலி'

## அளவெட்டி சங்கீத பூஷணம் அமரர் விஸ்வநாதன் சிவஞானசேகரம்

கலைஞானம் மிக்க சிவஞான சேகரனே!
விலை மதிப் பில்லாத கலைதனைப் போற்றி
தலை மகனாகவே தலைநிமிர்ந்து நின்றாயே!
மலையளவு கலைமிக்க மாண்பினை நீ பெற்றாயே!

நடராஜன் பயிற்றுவித்த நல்லிசைதனைக் கற்று
தமிழகஞ் சென்று நீ தமிழிசை கற்றாயே!
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்று
சங்கீத பூஷணமாய் பார்புகழ நின்றாயே!

ஈழநாடு மீண்ட நீ வேழமுகன் சந்நிதியில்
அரங்கேற்றம் செய்தே ஆசிரிய னானாயே!
சங்கீத சபைதனில் நிர்வாக உறுப்பினராய் நீ!
நுண்கலைப் பீடமதில் விரிவுரையாளனானாய்!

இணுவில் பதிதன்னில் இனிய பண் ணிசை தன்னை
பண்ணமைதி காட்டியே திருமுறைகள் கற்பித்தாய்!
நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் சேவகனாய்
இசைவிழா பலகண்டு வியப்பினில் ஆழ்த்தினாயே!

பண்ணிசை இன்னிசை அரங்குகளில் பாடி
எண்ணற் கரிய இசை நுட்பங்கள் தந்தாயே!
கண்ணையிமை காப்பதுபோல் இணைபிரியா
இசைதன்னை மண்ணிலுள்ளோர் வியந்திட நீ
கண்மணிபோல் காத்து நின்றாய்!

அன்னை சரஸ்வதியின் ஆசீர்வாதத்துடன் நீ இன்னிசை
வளர்த்திடவே இமைப்பொழுதும் போற்றி நின்றாய்!
முன்னம் நீ தந்த முத்தான இசைப் பணிகள்
இன்றும் கலையுலகில் நீடித்து நிலைக்குமன்றோ!

பண்ணின் இசையாகி பரமனடி போற்றி நின்று
எண்ணரிய கீதங்கள் எழிலாகப் பாடி நிற்க
மண் சிறக்க பண் சிறக்க மக்கள் வாழ்த்திசைக்க
விண்ணவர் அழைத்திட நீ
விண்ணுலகம் விரைந்தனையோ!

***■ கலாபூஷணம் எஸ்.சிவானந்தராஜா***

# நின்று நிலைக்கும் ஜோதி

சிவபூமியாக விளங்குகின்ற இணுவில் பதியில் பிறந்து வளர்ந்து கல்விச் சேவையாற்றிய சோதிப்பெருமாள் என்னும் ஆசிரியத்துவத்தின் ஜோதி அணைந்து மூன்று மாத காலம் நிறைவு பெறுகின்றது.

இணுவில் மண் கண்டெடுத்த முத்துக்களில் ஒன்றாக சோதிப் பெருமாள் கல்விச் சேவையுடன் மட்டுமே நின்றுவிடாது சமய, சமூகச் செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்த பெருந்தகையாவார். மாணவர்களின் கல்வி வளர்ச்சியிஷ் பெரும் பங்காற்றியதோடு பாடசாலைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் தன்னாலான உயர்ந்த பங்களிப்பை வழங்கினார்.

இணுவில்சைமகாஜனமகாவித்தியாலயத்தையும், இணுவில் அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலையையும் ஒன்றாக இணைக்க வேண்டும் என்று ஊர்மக்கள் விருப்பம் கொண்டபோது, அதைச் செயற்படுத்திக் காட்டிய பெருமைக்குரியவர் என்பதை வரலாறுகள் எடுத்தியம்பி நிற்கின்றன. ஆம், ஊர் மக்களின் விரும்பின் படியே இணுவில் மத்திய கல்லூரி தோற்றம் பெற்றது. அந்தக் கல்லூரியின் முதல் அதிபராகக் கடமைகளைப் பெறுப்பேற்றுச் சேவைகளை திறம்பட ஆற்றி 1991 ஆம் ஆண்டு கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

வடபுலத்தின் கல்விப் பாரம்பரியத்தில் புகழ்பூத்தவர்களான ஹண்டி பேரின்பநாயகம், வி.வீரசிங்கம், து. ஜெயரத்தினம், ஏ.ஈ.தம்பர், வி.வைத்தியலிங்கம் ஆகியோருடன் தொடர்புகளைப் பேணி வந்த இவர், தமிழ்ப் பாடசாலைகள் யாவும் கல்வியில் மேம்பட வேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்டு அதற்காக உழைத்தார். கிராமப்புறத்தை சேர்ந்த வறிய மாணவர்கள் ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக அளவில் சித்திபெற்றனர். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் பல்வேறு பதவிகளை வகித்த இவர், வடபுலத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருந்தார்.

இணுவில் மக்களால் வாத்தியார் என்று அன்பாக அழைக்கப் பெற்ற சோதிப்பெருமாள் ஆசிரியராக, அதிபராக, ஆலய அறங்காவலராக, சமாதான நீதவானாக அயராது சேவையாற்றினார்.


இலங்கையின் புகழ்பெற்ற ஆலயங்களில் ஒன்றான இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் தலைவராகப் பலவருடங்கள் சேவையாற்றினார். 2012 ஆம் ஆண்டு ஆலயத்தில் திருப்பணி வேலைகளைச் சரிவரச் செய்து, முருகப்பெருமான் அருளோடு குடமுழுக்கு நிகழ்வைச் சிறப்பாக நிறைவேற்றினார்.

இவ்வாறு தன்னுடைய வாழ்க்கைக் காலத்தில் கல்விக்கும், சமயத்துக்கும், சமூகத்துக்கும் அளப்பரிய பணிகளை ஆற்றிய சோதிப்பெருமாள், தான் வழிபாடு இயற்றிய இணுவில் கந்தப் பெருமானின் திருவடிகளில் சரண்புகுந்து ஆன்ம விமோசனம் கண்டு இளைப்பாறுகின்றார்.

அவருடைய ஆன்மா நித்தியமாய் அமைதி கொள்ள எல்லாம் வல்ல இணுவில் பதியுறை கந்தப் பெருமானை வேண்டிப் பணிகின்றேன்.

***■ ப.ஸ்ரீஸ்கந்தராசா***

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## தர்மலிங்கம்-தர்மராஜா

(உரிமையாளர் - சரண்யா மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்.)

பிறப்பு 15.03.1958
இறப்பு 18.09.2016

திதி: துதியை

தந்தையே! இமைப் பொழுதில் ஈராண்டும் சென்றதுவோ
செவ்விதழின் புன்சிரிப்பும் செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த கால்மெல்லாம் மறந்திடுமோ
எம் இதயத்துள் உம் நினைவுகள் என்றென்றும் மாறாது
இறைவன் தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்...


"பன்னாலை வாசம்"
தாவடி தெற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை மகாலிங்கம்

*(தாரகா டிரான்ஸ்போர்ட் உரிமையாளர்)*



பிறப்பு 27.05.1949
இறப்பு 25.09.2018

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மகாலிங்கம் நேற்று (25.09.2018) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - சின்னத் தங்கச்சி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் அரியமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் வசந்தநிதியின் அன்புக் கணவரும் மயூரதன் (முகாமையாளர் - Sunshine health care Lanka Ltd North and East செயலாளர் - உரும்பிராய் லயன்ஸ் கழகம்), பிரதீபா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), தாரகா ஆகியோரின் தந்தையும் டொரிஷா, நிமலதாசன் (பிரதேச செயலகம், வேலணை), ஜெயந்தன் (மருந்தாளர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும் டினேஸன், ஜோகித், கௌரீசன், திபாநிசா, சுருதி, காருண்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் வசந்தாதேவி, அற்புதலிங்கம் (பாண்டி), சந்திரலிங்கம், செல்வலிங்கம், வதனா, ஜெயலலிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேந்திரன், கருணாநிதி, தயாநிதி, சாந்திநிதி, சிறிநிதி, சிவ நிதி, உதயநிதி, கலாநிதி, விக்னேஸ்வரன், ராசலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2018) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 20089/15/17)

AFTER A/L

October மாத புதிய பிரிவு ஆரம்பம்
01/10/2018 (Mon) 9:30 a.m. OR 3:30 p.m.

DMI COMPUTER EDUCATION

Professional IT Courses
Diploma in PC Application
Diploma in Office Automation
Diploma in Web Designing & Development
Diploma in Computerized Accounting
Diploma in Business Management
Adv. Diploma in Hardware & Networking
Diploma in Video Production & Multimedia
Diploma in AutoCAD
JAVA, C#, C++, PHP

IT + ENGLISH DIPLOMA

DiTEC
DIPLOMA IN INFORMATION TECHNOLOGY

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑Microsoft Online பரீட்சைகளூடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑இலகு தவணைக்கட்டண வசதிகள்

DIPLOMA IN ENGLISH (PART 1 + PART 2)

யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம்
- கணினி மூலமான Online Listening பயிற்சிகள்உள்ளடக்கப்பட்டுள்ளது.

DIPLOMA IN ENGLISH
Spoken English
ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Reading Writing Speaking Listening

யாழ்ப்பாணம்: Mon,Wed,Fri 8:00 a.m; Mon,Wed,Fri 3:30 p.m; Sat, Sun 3.30 p.m.
நெல்லியடி: Tue, Thu 3.30 p.m.; Sat, Sun 3:30 p.m.
சாவகச்சேரி: Tue, Thu 08.30 a.m.; Tue, Thu 03.30 p.m.
சுன்னாகம்: Mon,Wed,Fri 11:30 a.m
சண்டிலிப்பாய்: Mon,Wed,Fri 1:30 p.m
கிளிநொச்சி: Sat, Sun 10.30 a.m

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

IELTS •Unique Test Tips •Latest course Materials
IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V.வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில், சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில், சுன்னாகம் Tel.: 021-224 1970
சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய் Tel.: 021 225 6665
No.19, A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 10 . 1981
மறைவு 13 . 09 . 2018

## திருமதி துஸ்யந்தி சுதாகர்

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும், வவுனியா, இத்தாலி Bologna ஆகிய இடங்களை வதிவிட மாகவும் கொண்ட திருமதி துஸ்யந்தி சுதாகர் 13.09.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கம் - காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ் சென்ற சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும், சுதாகரின் அன்பு மனைவியும், தனுஷன், விதுஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், துஸ்யந்தன், நிஷாந்தி ஆகி-யோரின் அன்புச் சகோதரியும், ரேகா, சதீஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஹர்சனாவின் பாசமிகு மாமியும், தவமணி, தர்மராஜா, பாலசுப்பிரமணியம், கலாவதி, சுசிலாவதி, ஜெயச்சந்திரன், ஜெகசோதி, ஜெகசீலன், ஜெனவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ் சென்ற சண்முகராஜா மற்றும் தர்மராஜா, நித்தியானந்தராஜா, கணேசராஜா ஆகியோரின் பாசமிகு மருமகளும், நாகேஸ்வரி, சற்குணேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.09.2018) வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை பாலாவோடை இணுவில் தெற்கு யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பார்வைக் காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலாவோடை, இணுவில் தெற்கு,
இணுவில்.


தகவல்
குடும்பத்தினர்.

சுதாகர் (கணவர் - இத்தாலி) - +393 204 094279,
துஸ்யந்தன் (தம்பி இலங்கை) -+9477 479 8942,
சதீஸ்கரன் (தம்பியன்) - 077 548 9190

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் பண்டத்தரிப்பு ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 06
உத்தேச ஆதன இல :- 35/1
வீதி :- காயா வீதி
கிராம சேவையாளர் பிரிவு :- J/145. வடலியடைப்பு

வட்டாரம் 06. காயா வீதி. உத்தேச ஆதன இல 35/1 இல் அமைந் துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ் மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென்மேற்கு) பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை மேற்கு இறை "பாலகப்புலமும் பல்லை சிட்டியும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 2 குழி 7.26 கொண்ட இவ்வாதனம் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த நாராயணன் இராச குமாரரும் பெண் சுபாஜினியும் அவர்களால் வடலியடைப்பு பண்டத் தரிப்பைச் சேர்ந்த தர்மலிங்கம் பாலச்சந்திரன் பெண் சங்கீதா அவர் களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் செ.கனகசபாபதி அவர்கள் முகதாவில் நிறைவேறிய 1780 இலக்க 15.07.2017ம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்புபட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. A.கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 2015/412 ம் இலக்க 14.09.2015 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது "பாலகப்புலமும் பல்லை சிட்டியும்" நிலப்பரப்பு 2 குழி 7.26 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தர்மலிங்கம் பாலச்சந்திரன் பெண் சங்கீதா எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.




திரு.அ.ஜெபநேசன்,
தவிசாளர்,
வலி தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(CS/20084)(10)

## வாழும் போதே வாழ்த்துவோம்



கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் கடமைபுரியும்

**திரு. கனகசபை பார்த்தீபன்**

அவர்கள் கடந்த 22.09.2018 சனிக்கிழமை ஏறாவூர் அலிஹார் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சாமஸ்ரீ தேசிய பட்டமளிப்பு விருது வழங்கும் வைபவத்தில் **சாம ஸ்ரீ சோதிட ஞானச் சுடர் மற்றும் சாம ஸ்ரீ தேசகீர்த்தி, சமூக சேவா, சிரோன்மணி** ஆகிய விருதுகளைப் பெற்றுக் கொண்டதையிட்டு அகமகிழ்ச்சி அடைவதுடன் மேன்மேலும் பல விருதுகளைப் பெற்று வாழ்வில் சிறப்புற்று வையகம் போற்ற வாழ் வாங்கு வாழ வாழ்த்துவதுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:- **கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும் சக உத்தியோகத்தர்களும்.**
**கமநல சேவைகள் நிலையம், கைதடி.**

## கண்ணீர் அஞ்சலி

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய

**தில்லையம்பலம் கஜேந்திரகுமார்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**பிறப்பு** 09.01.1985 **இறப்பு** 20.09.2018

பிரிவால் துயருறும்
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
மாந்தை கிழக்கு, முல்லைத்தீவு.**

## பிரத்தியேக வகுப்பு

பல வருட (27 வருட) அனுபவமுள்ள கணித ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கடந்தகால வினாப் பத்திரங்கள் கற்பிக்கப்படும்.

தொடர்பு:- **075 542 7721**

(CS 20083)(10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சுந்தரம் இராசரத்தினம்**



தோற்றம் 05.10.1944 மறைவு 07.10.2017

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடம் ஒன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில்
உம் நினைவுகள் எம்முடன்
என்றென்றும் வாழும்....

என்றும் நினைவில்
**குடும்பத்தினர்.**

(AKN/341)(11,17)

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 28.08.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் அப்பையா பாலசிங்கம்**



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (27.09.2018) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்
மகன் – லலித் (லக்கி)
பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி. 077 406 3743

## தேவை

யாழ். நகரில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு குழாய் பொருத்துனர் (Plumber). வயரிங் வேலை (Electrician) ஆகிய வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு- (பிரகாஷ்) **0777722218**

(CS 20085)(10)

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 11 . 07 . 1948 **மறைவு** 20 . 09 . 2018

### திருமதி விமலாதேவி டொனால்ட் ஜெராட்

யாழ். ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், நோர்வே Bergen ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி டொனால்ட் ஜெராட் கடந்த (20.09.2018) வியாழக்கிழமை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தில் இளைப்பாறுதல் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஜெராட் நிக்கிலஸ் (ஆசிரியர், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி), மக்டலின் தம்பதியரின் அன்பு மருமகளும், டொனால்ட் ஜெராட் (வாஷிங்ரன்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெரல்டின், வினோல், ரொனால்ட் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சூரியகுமாரின் (சூரி) அன்பு மாமியும் சஞ்சய், அஜய் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், அனுஷ்யா(தேவி), தயாளதேவி(பவா), காலஞ்சென்ற தேவமனோகரி (வசந்தா), சிறிதரன் (Bergen Norway), பிரபாகரன் (Oslo Norway) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஹில்டா, வலன்ரைன், வெலிங்ரன், மில்ரன், நியூட்டன், ஜூடித், சிறீமா, டோல்ரன், மிஸ்ரிகா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (26.09.2018) புதன்கிழமை நோர்வேயில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :டொனால்ட் ஜெராட்
(கணவர் நோர்வே)
0047 5350 8336**

## கார், வான் வாடகைக்கு

கார்கள், வான்கள் நாள், வார அடிப்படையில் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு - 077 0295 211

## CLASSES

**Grade 10 and O/L**

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம்
A/L (தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூலம்)
Physics, Chemistry, Biology
வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:- **076 290 9288**

(CS 20087)(10)

## தவறிவிட்டது

மீசாலையைச் சேர்ந்த க.பிறைசூடி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (462586134V) சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு முன்பாக உள்ள கடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**076 704 5883**

(ACH/474)(11,17)

## இலவச தையல் பயிற்சி

**இடம்**

நவமங்கை நிவாஸம்
இராசவீதி, கோப்பாய் மத்தி

**விண்ணப்ப முடிவு திகதி**
**10.10.2018**

வகுப்புக்கள் கிழமை நாள்களில் நடைபெறும்

**021 223 0418**

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 450/= மட்டும். கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு.

**U.S.A. பாம், குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை. - 077 868 9500**

## மாகாண...

கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா, செயலர் கி.துரைசிங்கம், பொருளாளர் பொ.கனகசபாபதி ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வழக்கில் பிரகாஷ் சார்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் முன்னிலையாகியிருந்தார். கடந்த தவணை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, பிரகாஷின் பதவி நீக்கத்துக்கு இடைக்காலத் தடை விதித்து மன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

வழக்கு விசாரணைக்கு நேற்று மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார். பிரகாஷ் சார்பில் வி.மணிவண்ணன் முன்னிலையானார்.

வழக்கு நீதிமன்றுக்கு வெளியே இணக்கப்பாடு காணப்பட்டு தீர்க்கப்பட்டது என்று வழங்கப்பட்ட அறிவித்தலை நீதிமன்றுக்கு சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரியப்படுத்தினார். பிரகாஷ் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மணிவண்ணன், எத்தகைய இணக்கப்பாடு காணப்பட்டது என்று தனக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை என்று மன்றில் கூறினார். வழக்கைத் தொடரவேண்டும் எனவும் கோரினார்.

இதேவேளை, வழக்கின் பிரதிவாதிகள் மன்றில் முன்னிலையாகாமை தொடர்பிலும், இந்த வழக்கில் இடைக்காலக் கட்டளை வழங்கப்பட்டிருக்கக் கூடாது என்றும் சுட்டிக்காட்டி தனது தரப்பு வாதங்களை எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்தார்.

இந்த வழக்கு உரிய முறையில் தாக்கல் செய்யப்படவில்லை. கூட்டிணைக்கப்படாத நிறுவனத்துக்கு எதிராக மூவரின் பெயரைக் குறிப்பிட்டு வழக்குத் தாக்கல் செய்வதாயின் சிவில் நடவடிக்கை கோவை பிரிவின் 16இன் கீழ் நீதிமன்ற அனுமதி பெற்று ஊடகங்களில் அதனைத் தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லை எனச் சுட்டிக்காட்டி வழக்கைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சுமந்திரன் கோரினார்.

வழக்கு விவாதத்தின் போது, மனுதாரரான பிரகாஷ் இரு தரப்பிடையேயும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதையும் வழக்கை மீளப் பெறவுள்ளதையும் மன்றுக்குத் தெரியப்படுத்தினார்.

மனுதாரர் வழக்கை மீளப்பெறுவதாக அறிவித்ததையடுத்து மனுதாரர் தரப்புச் சட்டத்தரணியும் வழக்கை மீளப் பெறுவதற்குச் சம்மதித்தார். சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றுக்கு வெளியே ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது, வழக்கின் ஆரம்பத்தில் வழக்காளியுடன் இணக்கம் காணப்பட்டதை தெரிவித்த போது வழக்கை மீளப்பெறுவதற்கு மனுதாரரின் சட்டத்தரணி இணங்கியிருந்தால், வழக்குச் செலவை அவரிடம் நான் கோரியிருக்க மாட்டேன். ஆனால் இணங்க மறுத்து, வழக்கு தள்ளுபடி செய்யப்படும் நிலமை வந்ததும் வழக்கை மீளப் பெறுவதாகத் தெரிவித்தமையினாலேயே அவரிடம் வழக்குச் செலவைக் கோரினேன் என்றார்.

நீதிமன்றுக்கு வெளியே ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சட்டத்தரணி சுமந்திரன் மன்றில் செய்த விண்ணப்பம் கராணமாக வழக்குத் தள்ளுபடி செய்யும் நிலைக்கு சென்ற போதே நான் வழக்கை மீளப் பெற விரும்புவதாக அவர் கூறிய கருத்தை மறுக்கின்றேன். வழக்காளி வழக்கை மீளப் பெற விரும்பியதால் தான் வழக்குத் தள்ளுபடி செய்யபட்டது. எனக்கு எந்த அறிவித்தலும் வழங்காமல் மன்றில் திடீரென வழக்கை மீளப் பெற விரும்புவதாக தெரிவித்தமையால் வழக்குச் செலவை வழக்காளியே செலுத்த வேண்டும் என்றார். (ஐ-5,37,105)

## மைத்திரி...

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவைச் சந்தித்துள்ளார். குற்றப் புலனாய்வுத் துறையினர் மேற்கொண்ட விசாரணையில் இந்த விடயம் வெளிவந்தது என்று கூறப்படுகின்றது.

தோமஸ் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவசவையும் சந்திக்கச் சென்றுள்ள போதும் அவரைச் சந்திக்க முடியவில்லை எனவும் அவரது அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவரையே சந்திக்க முடிந்துள்ளது என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் விசாரணைக்குப் பொறுப்பான உயர் அதிகாரி தெரிவித்ததாவது:

தோமஸ் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்திக்க அவரது விஜேயராம இல்லத்துக்கும் சென்றுள்ளார். ஆனால் மகிந்த ராஜபக்சவைச் சந்திக்க முடியவில்லை. சந்தேக நபரிடம் சி.ஐ.டி. மிக ஆழமாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்ட விதிகளுக்கு அமைவாக விசாரணைகள் தொடர்கின்றன - என்றார்.

இதுவரை இந்த கொலைச் சதி விவகாரம் தொடர்பாக 20க்கும் அதிகமானோரிடம் வாக்குமூலங்களை சி.ஐ.டி. பதிவு செய்துள்ளது. குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவின் ஆலோசனைக்கு அமைய மனிதப் படுகொலை தொடர்பான விசாரணைப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இந்திக லொக்குஹெட்டி தலைமையில் முதன்மைப் பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் கே.எம்.எம். குமாரசிங்க உள்ளிட்டோர் இந்த விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவிலிருந்து காணாமல் போனது என்று கூறப்படும் ஸ்னைப்பர் ரகத் துப்பாக்கி குறித்தும் சி.ஐ.டி. சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியில் கிளேமோர் குண்டுடன் முன்னாள் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவரிடமிருந்து இந்த ஸ்னைப்பர் துப்பாக்கியை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியிருந்தனர். அந்த ஸ்னைப்பர் துப்பாக்கியே காணாமல் போயிருந்தது என்று கூறப்படும் நிலையில் தற்போது அது தொடர்பாகச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டாரவின் உத்தரவுக்கு அமைய மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-21,71)





### தேங்காய் விற்பனைக்கு

தோலுடன் தேங்காய் மொத்தமாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 9213835

### கடை வாடகைக்கு கொடுக்கப்படும்

பண்டத்தரிப்பு Town இல் (60 வருட காலமாக இன்று வரையும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.) இந்த பலசரக்கு வியாபார நிலையத்தை தொடர்ந்து யாராவது இயங்குவதாக இருந்தால் எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு - துரைச்சாமி சிங்கராசா 077 665 2003



நியத ஜய
நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம் : 705 வர்ணம் : ஆரஞ்சு
திகதி : 2018.09.25
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
32 40 45 64 W
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 15,740,032/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கோடிபதி சனிதா
KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 346
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.09.25
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 95,866,868/-
V 23 24 63 77
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 384
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.09.25
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,273,810/-
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
05 25 49 57 W
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.09.2018 வெற்றி வாரம் 2371 வர்ணம் நீலம்
துலாம்
வெற்றி இலக்கங்கள் 02 17 27 44
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 11, 542, 228/=
2018.09.26ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் உப அலுவலகம், மானிப்பாய் ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 02
ஆதன இலக்கம் :- 24/3 (ஓடிட்ட வீடும் வளவும்)
வீதி:- இராஜகாரியர் வீதி,
கிராம சேவையாளர் பிரிவு:- J/137

எமது ஆதனப் பதிவேட்டின் பிரகாரம் திருமதி A.தியாகராசாவும் மறுபேரும் ஆதன இல.24/3, இராஜகாரியர் வீதி வட்டாரம் 02 (ஓடிட்ட வீடும் வளவும்) என காணப்பட்டது.

உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை "நல்லிங்கன் தோட்டமும் நல்லான் தோட்டமும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 04 குழி 6.70 ஐக் கொண்ட இவ்வாதனமானது கணேசராசா கெங்காதரன் தனது தந்தையின் தாயாராகிய தம்பு தியாகராசா பெண் தங்கரத்தினத்திற்கு நிந்தமும் சொந்தமுமாக இருந்து ஆண்டனுபவித்து இறந்த பின் குறித்த தங்கரத்தினத்திற்கு தனது தந்தையை தவிர ஏனைய சகோதரர்கள் திருமணம் செய்யாது இறந்துவிட்டமையால் அவ்வாதனம் முழுவதும் தனது தந்தை வழியாலும் அவரின் சகோதர வழியாலும் முற்றாக தம்மை வந்தடைந்த உரிமையும் என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.வசந்தசேனன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 11767 ஆம் இலக்க 24.10.2017 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி குறித்த ஆதனத்தை 11768/24.10.2017 ம் இலக்க அறுதி உறுதி மூலம் தற்போது மேதர்ஸ் ஒழுங்கை முதலியார் கனகசபை வீதியில் வசிக்கும் அரியபாலன் யோசேப் விஜயகுமார் பெண் ஜூலி க்கு விற்றுள்ளார். குறித்த அரியபாலன் யோசேப் விஜயகுமார் பெண் ஜூலி எமது மானிப்பாய் பட்டின உப அலுவலக (மானிப்பாய்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் A. கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 4763 ஆம் இலக்க 2017.10.23 ம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "நல்லிங்கன் தோட்டமும் நல்லான் தோட்டமும்" நிலப்பரப்பு 04 குழி 6.70 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அரியாபலன் யோசேப் விஜயகுமார் பெண் ஜூலி எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகிறேன்.




(CS/20085)(10)

தவிசாளர்,
வலி தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

## மகிந்த...

அதிபர் நாலக சில்வா தொலைபேசியில் உரையாடினார் என்று கூறப்படும் விடயம் தொடர்பில் முன்னெடுக்கும் விசாரணைகளில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள இந்தியரின் வாக்கு மூலத்தில் பல அதிர்ச்சி தரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அவரது மனைவி ஷிரந்தி ராஜபக்ச தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோரைக் கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று அந்த இந்தியர் சி.ஐ.டி.க்குத் தெரிவித்துள்ளார் என்றும், அவர் அது தொடர்பில் மேலதிக விடயங்களை வெளிப்படுத்தாத நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுகின்றார் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் இந்திக லொக்கு ஹெட்டி மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க ஆகியோர் கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்னவுக்கு நேற்று அறிவித்தனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபய ராஜபக்ச ஆகியோரைக் கொலை செய்யச் சதி செய்யும் விதமாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவின் கலந்துரையாடல் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி அரச இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியுள்ளது. அதில் உள்ள குரல்களை உறுதி செய்வதற்காக முறைப்பாட்டாளர் நாமல் குமாரவை குரல் சோதனைக்கு உட்படுத்தவும் சி.ஐ.டி. நீதிமன்ற அனுமதியை நேற்றுப் பெற்றுக்கொண்டது.

இன்று காலை 10 மணிக்கு குரல் சோதனைக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் முன்னிலையில் முன்னிலையாகுமாறு முறைப்பாட்டாளர் நாமல் குமாரவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன, இந்த விவகாரத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பில் சி.ஐ.டியிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு சி.ஐ.டி. உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்கவும் பதிலளித்தனர்.

"இந்த விவகாரத்தில் சந்தேகத்தின் பேரில் இந்தியர் ஒருவரை நாம் கைது செய்துள்ளோம். முறைப்பாட்டாளரின் வீட்டுக்கு அவரைத் தேடிச் சென்று சந்தேகத்துக்கு உரிய முறையில் நடந்துகொண்டமையால் அவரைக் கடந்த வாரம் கைது செய்தோம். இந்த இந்தியர் கடந்த பெப்ரவரி மாதமே இலங்கைக்கு வந்துள்ளார். அவர் தற்போது இங்கு தங்கியிருக்க சட்ட ரீதியிலான அனுமதி பெற்ற நுழைவிசைவு அவரிடம் இல்லை. அவர் இங்கு வந்து ராகம பகுதியில் 2 ஆயிரத்து 500 ரூபா மாத வாடகைக்கு அறையெடுத்து தங்கியிருந்துள்ளார்.

அவரால் சிங்கள மொழி ஓரளவு பேச முடிகின்றது. ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகிறார். அவரிடம் நாம் வாக்குமூலம் பெற்றோம். அதில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அவரது மனைவி மற்றும் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால ஆகியோரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று கூறுகின்றார். அது தொடர்பான மேலதிக தகவல்களை அவர் வெளிப்படுத்தவில்லை. மேலதிக விசாரணைகளை நாம் பயங்கரவாதத் தடை சட்ட விதி விதானங்களின்படி முன்னெடுத்து வருகின்றோம்" என்று அவர்கள் தெரிவித்தனர்.

விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதிவான் லங்கா ஜயரத்ன, அதுவரை அது குறித்த வழக்கை ஒத்தி வைத்தார். (ற-21,71)

## வாடியமைத்த...

8 நிறுவனங்களுக்கு எ்திராகவும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில், மருதங்கேணி பிரதேச செயலரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஒரு நிறுவனம் அங்கிருந்து வெளியேறியது. ஏனைய நிறுவனங்கள் வெளியேறுவதற்கு கால அவகாசம் கோரியிருந்தன. பிரதேச செயலர் தாக்கல் செய்த வழக்கு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றது. அனுமதியின்றி வாடி அமைத்த 8 நிறுவனங்களும் வடமராட்சி கிழக்கிலிருந்து வெளியேற வேண்டும் என்று நீதிமன்றம் கட்டளையிட்டது. இந்த உத்தரவின் அடிப்படையில் வடமராட்சி கிழக்கில் அமைக்கப்பட்டுள்ள 32 வாடிகளில் பணிபுரிந்த 850 மீனவர்கள் வெளியேற்றப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ற-5,26,70,105)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 860
சீட்டிழுப்பு திகதி 2018.09.24 திங்கட்கிழமை
D 30 48 50 55
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 53,274,508/-
பச்சை நிற டிக்கட்டுகள் 2018.09.27ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## ஆசிரியர் தேவை

மன்னார் நகர்ப்பகுதியில் இயங்கி வரும் முன்னிலை வகிக்கும் முன்பள்ளி ஒன்றினை நிர்வகித்துக் கல்வி புகட்டும் தகுதியுடைய ஆசிரியர் ஒருவரை அப்பள்ளியின் நிர்வாகம் எதிர்பார்க்கின்றது.

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

- A/L சித்தி
- ஆங்கிலத்தில் போதிய அறிவு
- முன்பள்ளியில் தங்கி இருக்கக் கூடியவர்
- முன்பள்ளி சான்றிதழ் ( Diploma / முன்பள்ளி தொடர்பான வேறு கற்கை நெறி)
- வயது 23 – 30, திருமணமாகாதவர்
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/20082)(11,17)

**077 666 0287, 076 770 3434**

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கண்மகிழ
03.04.1978

கண்நெகிழ
27.09.2007

அமரர்

**கோபாலபிள்ளை சுபாஸ்கரன்**
**(சுபாஸ்)**

திதி - பிரதமை (26.09.2018)

எங்கள் குடும்பத்தின் குலதீபமே - நீயில்லா
எமதில்லம் ஒளியிழந்து போனதடா
காலங்கள் தந்த காயங்களால் - எம்
கண்களில் நீரலைகள் ஓயவில்லை - தினமும்
பூத்த கொடி பூக்களின்றித் தவிக்கிறது - நீ
பூமியிலே மீண்டும் வந்து புன்னகைப்பாயா ?

என்றும் உந்தன்
நினைவுகளுடன் : குடும்பத்தினர்.
(வேலணை மேற்கு - 8)

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**மார்க்கண்டு சிறீதர்**

*(இ.போ.ச.சாரதி கோண்டாவில்)*



நாவலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட மார்க்கண்டு சிறீதர் கடந்த (24.09.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நாகேஸ்வரி தம்பதியரின் ஏகபுத்திரனும், நிர்மலன் - தமயந்தி, றோசா, பத்மினி - வேந்தராஜா (லண்டன்), சதீஸ்குமார் (லண்டன்) - மஞ்சுளா, ரகுவரன் - திருவேணி, ராஜேஸ்வரன் - ரோகினி (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், மைத்துனரும் காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும், விக்கினேஸ்வரியின் (றதி) அன்புக்கணவரும் சஞ்சு, மிதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செந்தாஹரனின் அன்பு மாமனும், பிரணவன், சோபிதா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரையம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு, நவாலி.**
**021 225 6839**

(ே.19942) (13.17)

**தகவல்: குடும்பத்தினர்.**

# வடகொரியாவில் தென்கொரிய அதிபர்

வடகொரியாவுக்கு தென் கொரிய அதிபர் மூன் ஜெ இன் சுற்றுப் பயணம் மேற்கொண்ட செய்திகள் தான் பன்னாட்டு ஊடகங்களில் தற்போது மிகப்பெரிய 'ட்ரெண்ட்'.


கொரியத் தீபகற்பப் போரின் பின்னர் கொரியா வடக்கு - தெற்கு என்று இரண்டாகப் பிரிந்தது. அன்றிலிருந்து இந்த இரண்டு நாடுகளும் ஒன்றுக்கொன்று மிகப்பெரும் பகை நாடுகளாக இருந்தன. மூன்றாம் உலகப் போர் தோற்றம்பெற்றால் அதன் தோற்றுவாயாகக் கூட கொரியத் தீபகற்பம் இருக்கலாம் என்ற நிலையே இருந்தது. ஆனால்தற்போது அதெல்லாம் பழைய கதையாகி விட்டது. இரண்டு நாடுகளின் அதிபர்களும் அடிக்கடி சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இரண்டு நாடுகளின் எல்லைக் கிராமமான பான் மூன்ஜியோமில் இவர்கள் இரண்டு தடவைகள் சந்தித்திருந்த போதிலும் எதிரெதிர் நாடுகளின் தலைநகரங்களுக்கு எவரும் செல்லவில்லை. இந்த நிலையில் வரலாற்றில் முதல்முறையாக வடகொரியாவின் தலைநகர் பியாங்யாங்கிற்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன். கடந்த 20ஆம் திகதி புதன்கிழமை அவ்வாறு பியாங்யாங்கிற்குச் சென்றுள்ளார் அவர்.

மூன் ஜெ இன் தென்கொரியாவின் அதிபராகப் பொறுப்பேற்ற காலம் முதல் வடகொரியாவை நட்பு நாடாக மாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். தற் .போது அதைச் சாதித்துள்ளார் அவர்.



















## தியாகி...

துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

தியாகி திலீபனின் நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று திட்டமிட்டவாறு யாழ்ப்பாணம் மாநகர சபையால் நடத்தப்படும். இன்றைய நிகழ்வுகள் பின்வரும் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்று புதன்கிழமை காலை 10:48 மணியளவில் தியாக தீபம் தியாகி திலீபன் அவர்கள் எமது மக்களுக்காகத் தனது இன்னுயிரை ஆகுதியாக்கிய இடத்தில் அகவணக்க நிகழ்வுகள் இடம்பெறும். அங்கிருந்து தியாக தீபத்தின் நினவுத் தூபி உள்ள இடத்துக்கு அஞ்சலி செலுத்துவோர் வந்து சேர்வர். அங்கு பொதுச் சுடரை எமது மக்களுக்காக தாம் ஈன்றெடுத்த இரண்டு உயிர்களை மாவீரர்களாக்கிய சின்னவன் மற்றும் சரசு ஆகியோர் ஏற்றுவார்கள். ஈகைச் சுடரை தாம் ஈன்றெடுத்த இரண்டு உயிர்களை மாவீரர்களாக்கிய பெற்றோர் விநாயகமூர்த்தி மற்றும் செல்வமணி ஆகியோர் ஏற்றுவார்கள். தியாக தீபம் தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை மாவீரர் இனியவனின் புதல்வியார் மோதழில் அணிவிப்பார். இவற்றின் பின்னர் அஞ்சலி செலுத்துவோர் மலரஞ்சலிகளைச் செலுத்துவார்கள்.

நினைவு நிகழ்வுகள் யாழ்ப்பாண மாநகரசபையின் ஏற்பாட்டில் உணர்வுபூர்மாக நடைபெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எமது மக்களின் உணர்வுகளையும் எமது மக்களின் தேவைகளையும் நன்குணர்ந்து செயற்படத் திடசங்கட்பம் பூண்டுள்ள நாம் எமது மக்களுக்கான சட்ட ரீதியாகவும், நியாய பூர்வமாகவும் அனைவரையும் ஒருங்கிணைத்து எமது செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றோம். என்றுள்ளது.

அதேவேளை தியாகி திலீபனின் 31 ஆவது நினைவு நாளுக்கான ஏற்பாடுகள் முன்னாள் போராளிகள், துயிலுமில்ல நடவடிக்கையில் ஈடுபடுவோர், பல்கலைக்கழக சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் அடங்கலாக உள்ள தமிழ் உணர்வாளர்களின் கருத்துகளின் அடிப்படையில் செய்யப்பட்டன என்று திலீபன் நினைவுநாள் நிகழ்வுகள் தொடர்பில் முன்னாள் மூத்த போராளி மனோகரும் நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். (ந-21)

## கே.கே.எஸ்...

துறைக் கடற்பரப்பில் சுற்றுக் காவலில் ஈடுபட்டிருந்த் காங்கேசன்துறைக் கடற்படையினரே கஞ்சாவை மீட்டுள்ளனர். படகு ஒன்றில் கொண்டு செல்லப்பட்டபோது கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் தாழையடியைச் சேர்ந்த 33 மற்றும் 39 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் பயணித்த படகு கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் நேற்று மாலை காங்கேசன்தறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ந-21,26)

## சுற்றுலா...

அரிய சந்தர்ப்பம்.

கொழும்பு அரசின் சுற்றுலாத் துறை அமைச்சு மற்றும் சுற்றுலா அதிகார சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் தேசிய நிகழ்வாக இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா சார்ந்த உற்பத்திப் பொருள்களின் காட்சிக் கூடம், உணவுத் திருவிழா மற்றும் கலை, கலாசார நிகழ்வுகள் என்று பல விடயங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்றும், நாளை, நாளை மறுதினம் ஆகிய மூன்று நாள்களும் யாழ்ப்பாண மாநகர சபை மைதானம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அரங்குகளில் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை நிகழ்வுகள் இடம்பெறும்.

தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று பல்வேறு தரப்பினராலும் கடைப்பிடிக்கப்படவுள்ளதால், அதற்கு மதிப்புக் கொடுக்கும் வகையில், நினைவேந்தல் நிகழ்வுகள் நிறைவு பெற்ற பின்னர் உலக சுற்றுலா நாள் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படும் - என்றார். (ந-5,7)

## அரசியல்...

யும் மாலையும் சேலைன் ஏற்றப்படுகின்றது. உடல் நிலை மோசமடைந்தும் வருகின்றது.

அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் கடந்த 18ஆம் திகதி தலைமை அமைச்சருடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பேச்சு நடத்தியிருந்தார். சட்டமா அதிபருடன் பேசியே முடிவு செய்யலாம் என்று தலைமை அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். அந்தச் சமயத்தில் சட்டமா அதிபர் நாட்டில் இருக்கவில்லை. அவர் நேற்று நாடு திரும்பினார். இந்த நிலையில் இன்று மாலை 3 மணிக்கு அலரிமாளிகையில் சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பு நீதி அமைச்சரும் அழைக்கப்படலாம் என்று தெரிகின்றது. (ந-5)

## மரண அறிவித்தல்

மலர்வு 04 12 1947



உதிர்வு 25 09 2018

# இராசேந்திரம் சற்குணம்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் சற்குணம் நேற்று (25.09.2018) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் - அழகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் ஜோணம்மாவின் (அரியமணி) பாசமிகு கணவரும் குணநேசமலர், சைமோன்ராஜா ஸ்ரனிஸ்லாஸ், அன்ரன் பூபாலசிங்கம், மரியயசிந்தா, யேசுபரன், பெனடிக்ற் (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் குணறஞ்சினி, குணதயாளினி (லண்டன்), குணசுதாகரன் (லண்டன்), குணசுதாஜினி, குணகுலேசினி, குண சுவேந்திரன் (சுகந்தன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் டொனால்ட் (இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, அநுராதபுரம்), நாகேந்திரம் (லண்டன்) டெனிஸ் கினமெற் (மேத்தா) (லண்டன்), அன்ரன் நோபேட் (லண்டன்), சுகந்ததீபன் (World Vision), ஜெனிஸ்றாஜினி ஆகியோரின் மாமனாரும் ஜென்சி ஜெனிபர், ஜெனி றெறன்சியா, ஜெனிஸ்றுசியா, டொலிற்றா, தர்சிகா, யுவானா, ஏஞ்சலினா, நியூட்டன், டெறிக், சேரா, போல் றொகான், சில்பியா, ஆன்றியா, குணறிசாலினி, ஜோண்றிஷான், மரியலவ்றின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (26.09.2018) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய். 077 604 4908**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# திருமதி செந்தமிழ்ச்செல்வி சிவசாமி



வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செந்தமிழ்ச்செல்வி சிவசாமி நேற்று (25.09.2018) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் பொன்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சிவசாமியின் (கவிஞர் தில்லைச் சிவன்) அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், செவ்வேள், குமரவேல் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான சங்கவதியம்மா, பரராசசிங்கம் ஆகியோரின் அன்புமைத்துனியும் தெய்வச்சிலை, தயாபரன் (ஓய்வுநிலை நீதி மன்ற முகாமைத்துவ உதவியாளர், விகடன் பிறிண்டர்ஸ் கொழும்பு), பகீரதன் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பி/உ ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), பார்த்தசாரதி (ஆசிரியர், தி/கிண்ணியா முஸ்லிம் மகாவித்தியாலயம்), கிருபாகரன் (அதிபர், யா/வேலணை மத்திய கல்லூரி), அறிவரசி (லண்டன்), அன்பரசி (ஆசிரியை, யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும் தி. ஜெகநாதன், (அபிராமி களஞ்சியம், பரமேஸ்வரா சந்தி), ஞானசக்தி, சந்திரவதனி (ஆசிரியை, யா / வைத்தீஸ்வராக் கல்லூரி), மதிவதனி (ஓய்வு நிலை ஆசிரியர்), ரமணி, ப.ஜெயராசசேகரம் (லண்டன்), Dr. கு. கணேசலிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புமாமியும் திருமதி தேவதா ரதீஜன் (கட்டார்), தயானி (மாணவி, யாழ். பல்கலைக்கழகம், விஞ்ஞானபீடம்), திருமதி நர்மதா கலாமோகன் (சட்டக்கல்லூரி கொழும்பு), Dr. விச்வநேத்திரன் (யாழ். போதனா வைத்தியசாலை), நிவேதா (Scribe ontime Pvt Ltd, HR), வைகுந்தன், பவந்தி, சந்திரகாசன், பிரதீஷா, சிவசங்கர் (CMC Engineering Pvt Ltd), சிவமைந்தன், தேனுகா, தீர்த்தா (லண்டன்), திரிஷா (லண்டன்), வினிசன் (லண்டன்), தேவநந்தி, திவ்யா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அப்ஸரா மீனாட்சியின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்ற கை. செல்வராணி, சு. மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற கண்மணிப்பிள்ளையின் சகலியும் தயாளன் , குணாளன் (இத்தாலி), காலஞ்சென்ற மணாளன், சீராளன் (லண்டன்) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2018) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னங்கண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**45/ 1, அம்மன் வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல் சி. தயாபரன்**
**(மகன், 077 558 6765)**

## மரண அறிவித்தல்

# திருமதி இராசமணி சுவாமிநாதபிள்ளை



கொக்கன்வளவு, இணுவில் கிழக்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி சுவாமிநாதபிள்ளை கடந்த (23.09.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் தம்பதிகளின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சுவாமி நாதபிள்ளையின் அன்புமனைவியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற குமாரசாமி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற இராசமனோகரன் (முன்னாள் முகாமையாளர் - மக்கள் வங்கி) மற்றும் ரஞ்சனாதேவி (முன்னாள் முகாமையாளர் - NSB), தேவமனோகரன் (திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் - வலிகாமம் கல்வி வலயம்), ராசதேவி (கனடா), ராசமலர் (U.K.), சுலோசனா (ஆசிரியை - உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்), கிருபாகரன் (கனடா), செல்வாகரன் (கனடா), ஐங்கரன் (கனடா), திருக்குமரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீபதி, காலஞ்சென்ற பாலேந்திரன் (முன்னாள் உதவி அதிபர் - இராமநாதன் கல்லூரி) மற்றும் துஷ்யந்தி (ஆசிரியை - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), பரமாநந்தம் (கனடா), உதயகுமார் (U.K.), யுவராஜ் (பொறியியலாளர்), மதுரா (கனடா), றஜிதா (கனடா), சந்திரிகா (கனடா), புகழினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூரன் (T.O), கஸ்தூரி சிவதரன், சர்மிலன், சாமந்தி (தேசிய கல்வியற் கல்லூரி), கார்த்திகா (வைத்தியர் - கொழும்பு), ஜனகன் (பொறியியலாளர் - கொழும்பு), மாதுமை (கொழும்பு மருத்துவபீட மாணவி), ஜ்யபவன் (மாணவன் - யாழ் இந்துக் கல்லூரி), அனு, அனந்தன், பானு, பாரி (கனடா), யதுர்சா, விக்னேஸ், கரிஸ், கரிணி (U.K.), கேதுசன், கேதுசா (உடுவில் மகளிர் கல்லூரி), சயான், கிரிஷான், மதுசான் (கனடா), சேயோன், றணேஸ், சீரோன் (கனடா), சுவாதி, சரிகா, அவேந்திகா, யுவேந்திகா (கனடா), சுபீட்சா, அபிட்சா (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் இராமநாதபிள்ளை, இலங்கநாதபிள்ளை, அன்னலட்சுமி, ராஜேஸ்வரி, காலஞ் சென்ற E.S.S.அருணாசலம் (கொக்குவில்) மற்றும் தனலக்சுமி ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2018) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் கொக்கன்வளவு இணுவில் கிழக்கு சுன்னாகத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**0777 145 497**

**தகவல்: சுவாமிநாதபிள்ளை குடும்பத்தினர்.**

# போர் குற்றகளை ஏற்பதே மைத்திரியின் யோசனை

## குணதாச அமரசேகர பதட்டம்

கொழும்பு, செப். 25
ஐ.நா. பொதுச் சபையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்வைக்கும் யோசனை, இலங்கையே போர்க் குற்றங்களை ஏற்றுக் கொண்டதாகிவிடும் என்று கவலை வெளியிட்டுள்ளார் தேசிய ஒழுங்கமைப்பு ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர.

கொழும்பில் நேற்றுச் செவ்வாய்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது

போர்க் குற்றங்களை விசாரிக்க வேண்டாம் என்று ஐக்கிய நாடுகள் சபையில் மண்டியிட்டு நாட்டை மீண்டும் காட்டிக்கொடுக்க அரசு முயற்சிக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குதல், புதிய அரசமைப்பின் ஊடாக இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணல் மற்றும் உண்மைகளைக் கண்டறியும் ஆணைக் குழுவை நிறுவி அதனூடாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுத்தல் போன்ற உறுதி மொழிகள் வழங்கி என்றும் மீள முடியாத பாதாளத்தில் நாட்டை தள்ளிவிடுவதாகவே அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

அரச தலைவரின் தற்போதைய நகர்வுகள் நாட்டுக்கு மிகவும் ஆபத்தானவை. போர்க் குற்றங்களை ஒப்புக்கொண்டு அதனை விசாரிக்க வேண்டாம் என்று கோருவது போலவே அரசின் அறிவிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டை பிளவுபடுத்தும் மேற்குலக நாடுகளின் சதித்திட்டத்துக்குள் இலங்கை பல ஆண்டு காலமாகச் சிக்குண்டுள்ளது. தற்போது அந்த சதித்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான புறச் சூழல் ஐ.நா.வில் அமைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் புதிய அரசமைப்புக்கான வரைவை அரசு முன்வைக்கவுள்ளது. அரசு உத்தேசித்துள்ள புதிய அரசமைப்பானது நாட்டை பிளவுபடுத்தும் - என்றார். (ற-5)

## திலீபனை...

கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு மீதான கட்டளை நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு வழங்கப்பட்டது.

**பொலிஸாரின் விண்ணப்பம்**

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முன்னிலையான யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் மற்றும் யாழ்ப்பாணப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விண்ணப்பத்தை முன்வைத்தனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் பின் வீதியில், இலங்கையிலும் உலக நாடுகளிலும் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினரான லெப்ரினன் கேணல் திலீபன் என்று அழைக்கப்படும் இராசையா பார்த்தீபன் என்பவரை நினைவு கூர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் புலனாய்வுத் தகவல்கள் மூலம் அறியக் கிடைத்துள்ளது.

நினைவுத் தூபியைச் சுற்றி இரும்புக் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அருகாமையில் பந்தல் போடப்பட்டு திலீபனின் ஒளிப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. திலீபனின் நினைவுகூரலை நடத்தத் தடை உத்தரவு வழங்கவேண்டும். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் அந்தச் சபையின் ஆணையாளரின் அனுமதி பெறப்படாமல் சட்டவிரோதமாக இரும்புக் கம்பிகளால் வேலிகள், பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை அந்தப் பகுதியிலிருந்து அகற்றுவதற்கு யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளருக்கு உத்தரவிடவேண்டும் என்று விண்ணப்பம் செய்திருந்தனர்.

**வழக்கு ஆரம்பம்**

வழக்கு நேற்றைய தினத்துக்கு திகதியிடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளரையும் மன்றில் முன்னிலையாகக் கட்டளையிட்டிருந்தது. நீதிவான் சின்னத்துரை சதீஸ்கரன் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாநகரசபையின் சட்டத்தரணி ராஜரட்ணத்துடன் மாநகர சபை சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கேசவன் சயந்தன், கணாதீபன் ஆகியோர் முன்னிலையாகினர்.

வழக்குத் தொடுநர் தரப்பில் யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், யாழ். பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

**தெளிவில்லை**

இந்த வழக்கில் ஆணையாளர் எதற்கு அழைக்கப்பட்டுள்ளார் என்பது தொடர்பாக தெரியப்படுத்தப்படவில்லை என்று சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றில் குறிப்பிட்டார். வழக்குத் தொடர்பாக மன்றில் தெளிவுபடுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து மேலதிக அறிக்கை தாக்கல் செய்த பொலிஸார், குற்றவியல் நடவடிக்கை கோவை பிரிவு 98 மற்றும் 106 ஆம் பிரிவின் கீழ் எரி, பாதை, குளம் போன்றவற்றைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கட்டங்களை அகற்றவேண்டும் என்று மன்றுக்கு விண்ணப்பம் மேற்கொண்டனர்.

**நல்லிணக்கத்துக்கு குந்தகம்**

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட நல்லூர் பின் வீதியில் சபையின் அனுமதி இல்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகளது உறுப்பினரான லெப்ரினன் கேணல் இராசையா பார்த்தீபனது படம் பொறிக்கப்பட்டு அவர் உணவு ஒறுப்பில் ஈடுபட்டிருந்த படம் ஆறடி உயரத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடானது தேசிய நல்லிணக்கத்துக்கு குந்தகத்தை ஏற்படுத்தும்.

இனவாதம், மதவாதம் துண்டும் வகையிலும், தமிழ் மக்கள் மனதில் இனவாதத்தை ஏற்படுத்தும் வகையில் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாச பயணிகளுக்கு குழப்பம் ஏற்படுத்தும் வகையில் இது உள்ளது.

சிங்கள மக்களும் வடக்குக்கு வரும் நிலையில் வடக்கு மக்களுக்கும் தென்னிலங்கை மக்களுக்கும் இடையே குழப்பமான நிலமை ஏற்பட வாய்ப்புள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இலங்கையிலும் உலக நாடுகளிலும் தடைசெய்யப்பட்ட அமைப்பை சேர்ந்த ஒருவரை நினைவு கூருவதை ஏற்றுக் கொள்ள முடியாது. பொது மக்களது வரிப் பணத்தில் ஊதியம் பெறும் அரச அதிகாரிகள் இலங்கையின் அரசமைப்பை மீறமாட்டோம் என்று உறுதி எடுத்தவர்கள் என்று மன்றில் சுட்டிக்காட்டிய பொலிஸார், கட்டடங்கள் அகற்றப்படவேண்டும் என்பதையும், நிகழ்வுக்குத் தடை விதிக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட்டார்கள்.

**அரசே அனுமதி வழங்கியது**

மாநகரசபை சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நல்லூரில் அமைந்துள்ள தூபியைச் சுற்றி அமைக்கப்பட்ட வேலி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பணியை மாநகர சபையே முன்னெடுத்திருந்தது. நினைவுத் தூபி அமைக்க எனக்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளது. அரசு இவற்றை நிறைவேற்ற அனுமதி வழங்கியுள்ளது என்று குறிப்பிட்ட சுமந்திரன் அதற்கான ஆவணங்களையும் காண்பித்தார்.

வேலி அமைக்கும் நடவடிக்கை மாநகர சபை அமர்வுகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு மாநகர மேயரே பொறுப்பு. ஆணையாளர் அல்ல என்றும் சுட்டிக்காட்டினார். அரசு அனுமதி வழங்கியதை பொலிஸார் சட்டவிரோதம் என்று குறிப்பிடுவதை ஏற்க முடியாது என்றும் வாதிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்கள், கப்பல்கள், பதுங்கு குழிகள், வீடுகள் என்பவற்றை அரசு காட்சிப்படுத்தியுள்ளது. அவற்றைப் பெருமளவான சிங்கள மக்கள் வந்து பார்வையிடுகின்றார்கள். அப்படியிருக்கையில் திலீபனின் நினைவுத் தூபி எப்படி நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளது. அந்த அமைப்பை இங்கு நினைவுகூரவில்லை. அகிம்சை வழியில் போராடி உயிர்நீத்த மகாத்மா காந்தியைப் போன்று உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி உயிரிழந்தவரை நினைவுகூருவது எந்த வகையில் பாதிப்பாக அமையும் என்று சுமந்திரன் தனது விண்ணப்பத்தை முன்வைத்தார்.

இரு தரப்பு வாதங்கையும் கவனத்தில் எடுத்த மன்று, வழக்கு மீதான கட்டளை 2 மணிக்குப் பிறப்பிக்கப்படும் என்று அறிவித்தது.

**கட்டளை**

நீதிவான் கட்டளை உத்தரவை திறந்த நீதிமன்றில் அறிவித்தார். சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட விடயங்களைச் சுட்டிக்காட்டி இந்தச் செயற்பாட்டை சட்டத்துக்கு முரணான செயற்பாடாக கணிக்க முடியாது எனவும் அரச நிதி வழங்கப்பட்டு அதில் அமைக்கப்பட்ட வேலிகள் போன்றவற்றை அகற்ற உத்தரவிட முடியாது எனவும் குறிப்பிட்டு பொலிஸாரின் விண்ணப்பத்தை மன்று நிராகரித்தது.

இந்த வழக்கில் பொலிஸார் இலங்கை தண்டனை சட்டக் கோவையின் பிரிவு 120 கீழ் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக குறிப்பிட்டு முதல் நிலை வழக்காக தாக்கல் செய்துள்ளதால், அது தொடர்பான மேலதிக விசாரணை தகவல்களை எதிர்வரும் வழக்கு தவணையான ஒக்ரோபர் 29ஆம் திகதி மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மன்று பொலிஸாருக்கு அறிவுறுத்தியது.

**மன்றின் மறுப்பு**

இதேவேளை, சட்டத்தரணி கு.குருபரன் தலைமையிலான சட்டத்தரணிகள் மன்றில் வாதம் இடம்பெற்றபோது தமது கருத்தை முன்வைத்தனர். இதன்போது நீதிவான் அவர்களைப் பார்த்து, யார் சார்பாக மன்றில் முன்னிலையாகியுள்ளீர்கள் என்று கேள்வி எழுப்பினார். தாம் பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் முன்னிலையானதாகத் தெரிவித்தனர். யார் பாதிக்கப்பட்ட தரப்பு என்று மன்று வினவிய போது கரிசனை உள்ள தரப்பு என்று தெரிவித்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக கட்டளை ஆக்கப்படும் போது தமது சமர்ப்பணங்களை கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும், ஏனெனில் கட்டளையாக்கப்பட்ட பின்னர் குறித்த கட்டளையால் பாதிக்கப்படும் தரப்பானது மீண்டும் நீதிமன்றை நாடுவதற்கான கால அவகாசம் இல்லை எனவும் எனவே தமது விண்ணப்பத்தை மன்று ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இதற்கு மன்றானது மாநகர சபையின் ஆணையாளர் தரப்பை மாத்திரம் கேட்டுக் கட்டளையாக்கப்படலாம் எனவும் கட்டளை ஆக்கப்படாத பட்சத்தில், கட்டளையால் பாதிக்கப்படுவது யார் என்பது தெளிவில்லாத பட்சத்தில் கட்டளை தொடர்பாக மாநகர சபை அல்லாத வேறு சட்டத்தரணிகள் தோன்ற முடியாது என்று தெரிவித்து அவர்களது கோரிக்கையை நிராகரித்தது.

**சந்தர்ப்பம் தவறிவிட்டது**

இந்த விடயம் தொடர்பில் தனது முகநூலில் கருத்து வெளியிட்டுள்ள கு.குருபரன், மாநகர சபையின் தீர்மானத்தின் பெயரில் நிகழ்வுகள் நடப்பதாக மன்றில் வாதிடப்பட்டது. இது இந்த நிகழ்வுகள் சட்ட பூர்வமானவை என்பதை காட்டுவதாகவும் வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

மேயர் ஆனோல்டின் (நாம் தான் செய்வோம் வேறு யாரும் செய்ய முடியாது) அறிவிப்பில் இருந்து இன்று மன்றில் இடம்பெற்ற வாதங்கள்வரை திலீபன் அண்ணாவின் நினைவிடத்தையும் அங்கு அஞ்சலி நிகழ்வு நடத்துவதையும் மாநகர சபையின் ஏக போக உரிமைக்குள் கொண்டு வந்து நினைவுகூரலை பொதுப் பரப்பில் இருந்து குறுக்கும் செயற்பாட்டின் உச்சம் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இது கூட்டமைப்பு செய்தாலும் பிழை. முன்னணி செய்தாலும் பிழை. முதலமைச்சர் செய்தாலும் பிழை. அரச அதிகாரம் நினைவுகூரலை ஒழுங்குபடுத்துவதை ஒரு போதும் ஏற்க முடியாது. அரச அதிகாரம் நினைவுச் செயற்பாடுகளை வசதிப்படுத்தலாம். ஆனால் உடைமை கொள்ள முடியாது.

மன்றில் மாநகர சபையின் சட்டத்தரணிகள் கவனமாகத் தவிர்த்த விடயம், விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை நினைவு கூரலாமா என்பது தொடர்பிலான கேள்வியை. எம்மையும் தவிர்க்குமாறு ஆலோசனை வழங்கினர். அதை நீதிமன்றில் பிரச்சனையாக்குவது முக்கியமானது. அதற்கான வாய்ப்பு இன்று இழக்கப்பட்டுள்ளது. இதை வாதாட நீதிமன்றம் அனுமதிக்குமா என்பது இங்கு முக்கியமல்ல. ஏன் நாம் இந்த கேள்வியை கேட்பதில்லை என்பதே முக்கியமானது.

நாம் மன்றில் தோன்றி அக்கறையுள்ள தரப்பு என்ற வகையில் எமது தரப்பை கேட்க வேண்டும் என்று வாதாடினோம். இது மாநகர சபையின் காணிப் பிரச்சனை அல்ல என்று நிலைப்பாடு எடுத்தோம். பொது மக்களின் நினைவு கூரும் உரிமையை பற்றியது. அதையும் கேளுங்கள் என்று சொல்லிப் பார்த்தோம். மன்று ஏற்கவில்லை. இப்படியான வழக்குகளில் யார் தோன்றலாம் என்பது விசாலமாக பார்க்கப்படுவது வழமை. ஆனால் எனது காணியில் அமைக்கப்பட்ட கட்டடம் சட்ட பூர்வமாக கட்டப்பட்டதா என்ற தோரணையில் வழக்கு முடிவடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

(ற-5,8,37,105)

## யாழ்ப்பாணம்...

திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் முதலாவது விவசாய அறுவடை வலயம், தம்புள்ள மற்றும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்.

உலக வங்கியின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் இந்த விவசாய நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் ரிஜேசி வகையைச் சேர்ந்த ஒரு இலட்சம் மாங்கன்றுகள் நடுகை செய்யப்படும். முதற்கட்டமாக, 12 ஆயிரத்து 500 மாங்கன்றுகள், தம்புள்ளவில் நாட்டப்படவுள்ளன.

ரிஜேசி மாம்பழம், இலகுவாக பயிரிடக் கூடியது. உலர் மற்றும் ஈரவலயங்களில் நன்றாக வளரக் கூடியது. ஆண்டு முழுவதும் காய்க்கக் கூடியது. இதற்கு உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் நல்ல கேள்வி உள்ளது. ஏற்றுமதிச் சந்தையை இலக்கு வைத்து இந்த மாம்பழங்களை உற்பத்தி செய்யும் போது விவசாயிகளால் அதிக வருவாயை பெற முடியும்.

எதிர்வரும் 28ஆம் திகதி யாழ்ப்பாணம், தம்புள்ளவில் மாம்பழ உற்பத்தி வலயங்களை உருவாக்கும் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


(ற-5)

## குற்றப்பத்திரிகை...

அவர் தெரிவித்ததாவது:

நான் அமைச்சராக இருந்தபோது அரசியல் கைதிகளைப் பார்ப்பதற்காகச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தேன். அவர்கள் நீண்டகாலமாகச் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். சில கைதிகளின் வழக்குகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன. சில தரப்பினரின் வழக்குகள் இன்னமும் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. அவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனாலும் அவர்கள் கைதிகளாக முத்திரை குத்தப்பட்டுள்ளனர்.

அவர்களை அரசு நிபந்தனைகள் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும். வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படும் கைதிகள் தொடர்பாக அரசால் எதுவும் செய்ய முடியாது. அவர்களின் வழக்கு விசாரணைகள் முடிந்த பின்னரே அரசால் தலையிட முடியும் - என்றார். (ற-10)



# ஜொலிஸ்ராரின் தொடரில் சென்றலைட்ஸ் இறுதிக்கு!

யாழ்ப்பாணம், செப். 26

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில்சென்றலைட்ஸ்விளையாட்டுக் கழகஅணியைஎதிர்த்துயாழ்ப்பாணப்பல்கலைக்கழகஅணிமோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி 27 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில்7இலக்குகளைஇழந்து 154ஓட்டங்களைப்பெற்றது. துவாரகசீலன் 31 ஓட்டங்களையும், சுபேந்திரன் 27 ஓட்டங்களையும், கஜேந்திரன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில்தசோபன், கோகுலன்ஆகியோர்தலா2இலக்குகளை வீழ்த்தினர்.

155ஓட்டங்களைப்பெற்றால்வெற்றியென்ற பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியசென்றலைட்ஸ்விளையாட்டுக்கழகஅணி17.5பந்துப்பரிமாற்றங்கள்நிறைவில்4இலக்குகளை இழந்து158ஓட்டங்களைப்பெற்று வெற்றிபெற்றது. ஜெனோசன் 50 ஓட்டங்களையும், செல்ரன் 39 ஓட்டங்களையும், கௌமதன் 28 ஓட்டங்களையும்பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர், துவாரகசீலன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)



# உடுப்பிட்டி யுத் அணி போராடி வெற்றி

யாழ்ப்பாணம், செப். 26

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றஆட்டத்தில்உடுப்பிட்டியுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும்அதேநிலமைதான். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும்பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத்தவிர்ப்புஉதைகளில்வெற்றியைத்தீர்மானிக்கவேண்டியநிலை ஏற்பட்டது.

முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# சரஸ்வதி கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், செப். 26

கைதடிதென்கிழக்குவிநாயகர்சனசமூகநிலையத்தின்71ஆவதுஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய தாச்சித் தொடரில் நாவற்குழி சரஸ்வதி ஏ விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

விநாயகர்விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகஏ அணியைஎதிர்த்துகைதடிதுர்க்காசிவிளையாட்டுக் கழக அணி மோதியது.

12:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நாவற்குழி சரஸ்வதி ஏ விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது. ஆட்டநாயகன் மற்றும் தொடராட்ட நாயகனாக நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியின் சிந்துயன் தெரிவானார். (ம-23)

# சிவானந்தா அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம், செப். 26

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெறறஆட்டத்தில்கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகஅணி வெற்றிபெற்றது.

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக்கழகஅணி மோதியது.

4:3 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 26

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகமைதானத்தில்இடம் பெற்று வருகின்றன.


இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலையொளி அணியை எதிர்த்து புத்தூர் சென்றல்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தொண்டமனாறுகலையரசிவிளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவகுமரன் விளையாட்டுக்கழகஅணி மோதவுள்ளது. (ம-23)



# நிர்வாகம் விரும்பினால் ஓய்வை அறிவிப்பேன்!

## மத்தியூஸ் உருக்கமான கடிதம்




"அணி நிர்வாகத்தினரும், பயிற்சியாளர்ஹத்துருசிங்கவும் விரும்பினால் பன்னாட்டு அரங்கில் இருந்து ஓய்வை அறிவிக்கத் தயார்" என்று குறிப்பிட்டார் மத்தியூஸ்.

ஆசியக்கிண்ணத்தொடரில் ஏற்பட்ட தொடர் தோல்விகளுக்குப் பின்னர் இலங்கை கிரிக்கெட் சபை மத்தியூஸிடமிருந்து தலைமைத்துவத்தைப் பறித்திருந்த நிலையில், அவர் இலங்கை கிரிக்கெட் சபைக்கு உருக்கமான கடிதமொன்றை எழுதியுள்ளார். அதிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்மத்தியூஸ். அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

குறைபாடுகளுக்குப்பொறுப்பேற்கிறேன். ஆனால் இதற்கு ஏதோ நான் மட்டுமே காரணம் என்பது போல் காட்டுவது எனக்குத்துரோகம்செய்வதைப்போல் உணர்கிறேன். அனைத்துமுடிவுகளையும் நான் அணித்தேர்வாளர்கள் மற்றும் தலைமைப் பயிற்சியாளர் ஆகியோருடன் பரஸ்பர புரிதலின் அடிப்படையில்தான் எடுத்தேன்என்பதுஉங்களுக்குத் தெரியும். தேர்வாளர்களும் பயிற்சியாளரும் நான் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கு லாயக்கில்லை என்றஅபிப்ராயம்கொண்டிருந்தால்நான்சுமையாகஇருக்க விரும்ப வில்லை. இந்த இரண்டு வடிவங்களிலிருந்தும்ஓய்வுபெறுவதை பரிசீலிக்கிறேன்.

2017ஆம் ஆண்டு நான் அனைத்துவடிவங்களிலிருந்தும் தலைமைத்துவத்தைத் துறந்தேன்என்பதை நீங்கள் நினைவுகூரலாம். 5ஆண்டுகள்இலங்கை அணியை வழிநடத்தினோம். இந்தக் காலக்கட்டத்தில் இங்கிலாந்துக்கு எதிராக வென்றோம். ஆஸ்திரேலியாவை 3:0 என்ற அடிப்படையில் வீழ்த்தினோம். 2014ஆம்ஆண்டில்ஆசியக்கிண்ணத்தைக் கைப்பற்றினோம். ஆனால்அணிக்குபுதியதலைமை தேவைப்பட்டது என்பதை உணர்ந்த போது நானே மனமுவந்து 2017ஆம் ஆண்டில் அனைத்துவடிவங்களிலிருந்தும் தலைமைத்துவத்தைத் துறந்தேன். அதன் பிறகு இலங்கை அணி தொடர் தோல்விகளைச் சந்தித்தது.

தலைமைத்துவத்தை உப்புல் தரங்கா, திசர பெரேரா, சாமர கக்புக்கெதர, மலிங்க, சந்திமல், லக்மல்என்றுமுயன்றீர்கள். இதனையடுத்தே தலைமைப் பயிற்சியாளர் ஹத்துரசிங்க என்னை சந்தித்து 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம்வரையில்தலைமைத்துவத்தை ஏற்குமாறு கேட்டார். ஆனால் என் குடும்பம், என் நெருங்கியசகாக்கள்இதைவிரும்ப வில்லை. ஆனால்ஹத்துரசிங்க மீதுஅயராதநம்பிக்கைகொண்ட நான்தலைமைத்துவத்தைஏற்கச் சம்மதித்தேன்.

இந்த தோல்விகள் அதிர்ச்சியளிப்பவைதான் என்பதை மறுக்கவில்லை. ஆனாலும்உலகக்கிண்ணத்துக்கு இன்னும் 12 ஆட்டங்கள் இருக்கும் நிலையில் நான் என் பொறுப்புகளிலிருந்து ஓடிவிட விரும்பவில்லை. அதேபோல் ஒரு வீரராக ஆட்டத்தின் அனைத்து அம்சங்களையும் பயின்று இலங்கை அணிக்காக விளையாடநான்எப்போதும்தயாராகவே இருக்கிறேன்.

தேர்வுக்குழுவினரும் அணி நிர்வாகமும்மட்டுப்படுத்தப்பட்டஆட்டங்களில் விளையாடத் தகுதியற்றவன்என்றால்சுமையாகஇருக்க விரும்பவில்லை. ஓய்வு பெறுவதையும் பரிசீலிக்கிறேன். நான் ஆட்டத்தை என் மனசாட்சிக்கு விரோதமில்லாமல்ஆடிவந்திருக்கிறேன். தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் இரு அணிகளிலும் சேர்த்தே நான் அதிக ஓட்டங்களை எடுத்திருந்தேன் என்பதையும் நினைவு படுத்த விரும்புகிறேன்.

இந்த நிலையில் இருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இலங்கை அணியின் ஒருநாள், ரி20 வடிவங்களின் தலைமைப் பொறுப்பிலிருந்து உடனடியாக விலகுகிறேன்.

தெரிவுக்குழுவின் பயிற்சியாளாரின் விருப்பத் திற்கேற்ப நான் பதவி விலகுகிறேன். எது எப்படியோ என்னிடம் அவர்கள் பேசி இப்படியாக பொறுப்பிலிருந்து விலகும் வாய்ப்பை அளித்தமைக்கு அவர்களுக்கு நன்றி நவில்கிறேன்.

எம் அணிக்கு என் வாழ்த்துக்கள் என்றுள்ளது. (ம)

# உதயதாரகை காலிறுதியில்!

யாழ்ப்பாணம், செப். 26

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவைமுன்னிட்டுநடத்தப்படும்வடக்கின்கில்லாடிவெற்றிக் கிண்ணத்துக்கானகால்பந்தாட்டத் தொடரில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துறேஞ்சர்ஸ்விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்றகோல்கணக்கில்உதயதாரகைவிளையாட்டுக்கழகஅணி வெற்றிபெற்றது. (ம-23)




# தைரியமான தலைவர் சர்பிராஸ்

## கங்குலி புகழாரம்

"பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பிராஸ் அகமட் மிகவும் சிறந்த தலைவர். அவர் தைரியமானவர். அற்புதமான வீர ரும் கூட" என்றுதெரிவித்தார்இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.

ஆசியக் கிண்ணத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இரு முறை மோதியுள்ளன. இரண்டிலும் இந்தியாவே வெற்றிபெற்றது. இதனால் பாகிஸ்தானின் அணித் தலைவர் சர்பிராஸ் அகமட் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. இந்த நிலையில் அவருக்கு ஆதரவு தெரிவித்தார் கங்குலி.

"சர்பிராஸ் அகமட் ஒரு சிறந்த தலைவர். அவரைப் போன்ற வீரர்கள் தினந்தினம் பிறந்துவர மாட்டார்கள்.

கடந்தஆண்டுசம்பியன்ஸ்கிண்ணத்தை அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாக வழிநடத்தி கிண்ணத்தை வென்ற அவர் ஒரு தைரியமானவீரர். ஆசியக்கிண்ணத் தோல்விகளால் அவர் மீது வைக்கப்படும்விமர்சனங்களை எல்லாம்புறம்தள்ளிவிட்டுபாகிஸ்தான் கிரிக்கெட் சபையும், முன்னாள் வீரர்களும் சேர்ந்து அவரை ஆதரித்து ஊக்கப்படுத்த வேண்டும்" என்று கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)



# அச்சுறுத்தும் வீரர் அல்லர் ரசிட் கான்

## மகமதுல்லா பேச்சு

"ரசிட்கான் அச்சுறுத்தும் வீரர் அல்லர். அவரின் பந்துவீச்சையும் சிறப்பாக எதிர்த்தாட முடியும்" என்று தெரிவித்தார் பங்களாதேஷ் அணியின் வீரர் மகமதுல்லா.

நான்கு அசிரியக் கிண்ணத் தொடர் நான்கு அணிகள் பங்குபற்றும் சுற்றில் பங்களாதேஷிடம் ஆப்கானிஸ்தான் தோல்வியடைந்தது. ரசிட்கானின் பந்துவீச்சை பங்களாதேஷ் வீரர்கள் சிறந்த முறையில் எதிர்த்து விளையாடினார்கள். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மகமதுல்லா இவ்வாறு குறிப்பிட்டார்.

"ரசிட்கான் விளையாட முடியாத மிகக் கடினமான பந்துவீச்சாளரல்லர். அவர் சிறந்த வீரர்தான். ஆனால் முயற்சி செய்தால் அவரை எதிர்த்து விளை யாடலாம். அதிலும் குறிப்பாக ஒரே சமய த்தில் வலது இடது கூட்டணி அமைத்தால் ரசிட்கானை வெல்வது சுலபம்" என்று மகமதுல்லா மேலும் தெரிவித்தார். (ம)

# மொயின் அலியை ஒசாமாவுடன் ஒப்பிட்ட குற்றச்சாட்டில் போதிய ஆதாரமில்லை என்றது ஆஸி. கிரிக்கெட் சபை



"2015ஆம் ஆண்டு ஆஷஸ்தொடரின்போது ஆஸி. வீரர் ஒருவர் தன்னை 'ஒசாமா' என்று பின்லேடனைக்குறிப்பிடுமாறுகூறி வசை செய்ததாக இங்கிலாந்தின் மொயின்அலிஎழுப்பிய முறைப்பாட்டுக்கு ஆதாரம்இல்லை" என்றுகிரிக்கெட் ஆஸ்திரேலியா தன் விசாரணையில் குறிப்பிட்டது. தன்னுடைய புதிய நூலின் ஒரு பகுதியில் மொயின் அலி 2015 ஆம்ஆண்டுடெஸ்ட்ஆட்டமொன்றில்ஆஸ்திரேலிய வீரர்தன்னை ஒசாமாஎன்றுபயங்கரவாதியின் பெயரைக் குறிப்பிட்டுவசைசெய்தார் என்று எழுதியிருந்தார். இதனையடுத்து கிரிக்கெட் ஆஸ்திரேலியா இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாது. யார் அப்படிக் கூறியிருந்தாலும் நடவடிக்கை பாயும் என்றெல்லாம் சூளுரைத்தது. இந்த விசாரணைகள் கடந்தசனிக்கிழமைமுடிவுக்கு வந்தது.

இது குறித்து கிரிக்கெட் ஆஸ்திரேலியா செய்தித் தொடர்பாளர் "இங்கிலாந்து கிரிக்கெட் வாரியத்துடன் இணைந்து இந்தச் சம்பவம் அப்போதே விசாரிக்கப்பட்டது. இதன் முடிவையும் மொயினிடம் தெரிவித்தோம். மொயீனும் இதனை மேலும் முன்னெடுத்துச் செல்ல விரும்பவில்லை. மேலும் புதிய விசாரணைகளில் அவரது முறைப்பாடுக்கான புதிய ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே இந்த விவகாரம் இத்துடன் முடிவுக்கு வருகிறது. ஆனால் இம்மாதிரி நிறவெறிப்போக்குக்கு இங்கு சமூகத்திலும் இடமில்லை, கிரிக்கெட்டிலும்இடமில்லை. இதனை சிறிதளவும் பொறுத்துக் கொள்ள முடியாது. நாட்டைபிரதிநிதித்துவம் செய்பவர்கள் எந்தத் துறையினராகஇருந்தாலும்உயர்தரநடத்தைகளையும் மதிப்பீடுகளையும் கொண்டிருக்க வேண்டும். இதில் அவர்கள் தவறினால் விளைவுகள் என்னவென்பதையும் வீரர்கள் அறிந்திருக்கிறார்கள்" - என்றார். (ம)

## நாய்க்குட்டி விற்பனை

45 நாள்கள் நிரம்பிய தடுப்பூசி போடப்பட்ட ச ரடன் இன நாய்கள் விற்பனைக்கு உ ண்டு. - 077 538 4992, 077 411 5605

## SLIM
Sri Lanka Institute of Marketing

**Preliminary Certificate in Marketing**

சந்தைப்படுத்தல் துறையுடன் தொடர்புபட்ட தொழில் அதிபர்கள், தொழில் புரிபவர்கள்,வேலைவாய்ப்பிற்காக எதிர்பார்த்திருக்கின்றவர்கள் சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்ள விரும்பும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் க.பொ.த.உயர்தர பெறுபேறினை எதிர்பார்த்திருக்கின்றவர்களுக்காக

New Batch Starts on 30/09/2018 @9.00 AM



HOTLINE 077 757 0038 / 071 777 3444

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
TEL :- 021 222 8060 web : iis.edu.lk

## காணி விற்பனைக்கு

**பலாலி வீதி, கோண்டாவில் சந்தியி** லிருந்து 50m இல் (இருபாலைப் பக்கமாக) வீடு, வியாபார நிலையம் அமைக்க உகந்த சுற்றுமதிலுடனான இரண்டு பரப்புக்கு 1 குழி குறைவான காணி விற்பனைக்குண்டு.

**077 123 8030** (CS/19987)(11,17)

## வாடகைக்கு

பெருமாள் கோயிலுக்கு அண்மித்த தாக உள்ள பிள்ளையார் கோயிலுக்கு எதிராக இரண்டு தட்டு அடுக்குமாடி மனை வர்த்தக ரீதியான தேவை. Guest House, Restaurant அமைப்பதற்கு வாடகைக்கு விடப்படும்.

**0044 7916 689 891**
**sara _ doc 2008@yahoo.com**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு 021 493 1111

## மரண அறிவித்தல்

அருட்சகோதரன்

### வின்சன் பிறிர்ரோ சுந்தரகாந்தன்

*(இலங்கை பெந்தெகொஸ்தே சபை ஊழியர்)*



நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இலங்கை பெந்தெ கொஸ்தே சபை ஊழியர் அருட் சகோதரன் வின்சன் பிறிர்ரோ சுந்தரகாந்தன் நேற்று (25.09.2018) செவ்வாய்க்கிழமை மகிமைக்குள் பிரவேசித்தார்.

அன்னாரின் அடக்க ஆரா தனை இன்று (26.09.2018) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இளையதம்பி வீதி, அரியாலையில் அமைந்துள்ள இலங்கை பெந்தெ கொஸ்தே சபைச்சாலையில் நடைபெற்று கொட்டடியில் அமைந்துள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இலங்கை பெந்தெகொஸ்தே சபை** — **தகவல்: பாஸ்ரர்**

## மரண அறிவித்தல்

### திருமதி தவஞானம் தளையசிங்கம்



**தோற்றம் 22.06.1961 — மறைவு 23.09.2018**

புத்தூரைப் பிறப்பிடமாகவும், இல.42. D-10, உருத்திரபுரத்தை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி தவஞானம் தளையசிங்கம் 23.09.2018 ஞாயிற் றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு இராசமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்ற தளைய சிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான கதிர்காமு - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், தெய்வேந்திரத்தின் அன்புச் சகோதரி யும், குணதேவியின் மைத்துனியும், திலீபா (கனடா), கபிலன் (சுவிஸ்) ஆகி-யோரின் அன்புத் தாயாரும், யனரூபன், கயலினி, சங்கீதா, கஜீபன், கஜிதா ஆகி-யோரின் அன்பு மாமியாரும், ஜிவின், கஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தி யாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று உருத்திரபுரம் இந்து மயானத்-தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(AKN/542)(11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சரவணை கதிர்காமத்தம்பி



பன்னாலையைப் பிறப்பிடமாக வும், சண்டிலிப்பாய் கல்வளையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை கதிர்காமத்தம்பி 24.09.2018 திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருஷ்ண மூர்த்தி, நவரட்ணம், சிவகுமார், செல்வரட்ணம், சிவராசா, காலஞ் சென்ற கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிவதனி, சரோஜினி, நகுலேஸ்வரி, சிவாஜினி, சந்திராதேவி, தியாக ராசா ஆகியோரின் பாசமிகு மாமனா ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2018) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிியைக்காக கீரிமலை இந்துமயானத்-துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்வளை பிள்ளையார் கோயிலடி,**
**சண்டிலிப்பாய்.**

(CS/20080)(11,17)

**தகவல்**
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.